www.tamilarangam.net

முழக்கம்-1

# பறை



தோன்றி வளர்ந்து சிதைந்து மறைந்து மறுபடியும் மறுபடியும் புதியன தோன்றும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

## உள்ளே ...

ஆசிரியர் தலையங்கம் 2
முள் நிறைந்த பாதை வழியே/ சிவானந்தன் 5
இழப்பு (கவிதை)/ கவிதா 7
சாதியை ஒழிக்க/ பெரியார் 8
நாதியற்ற நாங்கள் (கவிதை)/ சுந்து 9
சிறிலங்கா: துரோகங்களின் புகலிடம்/ கோமதி 10
வசந்தம் போனது (கவிதை)/ சக்கு 23
தானா (கவிதை)/ வ.ஐ.ச.ஜெயபாலன் 24
வீரயடி / கோவிலூர் செல்வராஜன் 25
அக்கினிக் குஞ்சாய் உயிர்த்தெழு (கவிதை) அவ்வை 30
நியுயோர்க்: முடிவல்ல முடிவின் தொடக்கம்/ ரோசா 31
சிலுவைப் பயணமும் புனித யுத்தமும்/ நிலா 40
நமது நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் ஊடகம்/ என்.சரவணன் 45
செல்வி: 10வது ஆண்டு நினைவு/ சக்கு 51
சூரியனைத் தேடி (கவிதை)/ செல்வி 53
மனம்பேரி: 30 ஆண்டுகள் நினைவு 54
தலித்தின் குறிப்புகள் / அருந்ததியன் 57
நான் லிங்கமாலா ஆனேன் (கவிதை) / மஞ்சுள வெடிவர்தன 60
எனது பார்வையில்/ சமுத்திரன் 61
இரவல் சுவாசம் எங்களுக்குத் தேவையில்லை (பாடல்)/ உமா 64
பாலியல் தொழிலும் ஆண்களின் புனைவு மரபும்/ ராஜினி 65

பறை

தொடர்புகளுக்கு

PARAI
C/o Asker og Baerum Tamilsk Forening
Gamle Lommedalsvei 37
1339 Voyenenga
Norway

parai@parai.no
http//www.parai.no

ISSN 1502-8771

பிரதம ஆசிரியர்
என்.சரவணன்

உதவி ஆசிரியர்
வி.கவிதா

ஆசிரியர் குழு
க.சுந்தரலிங்கம்
க.சிவானந்தன்
கு.தவேந்திரன்
ப.தவநாதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பறை

## ஏழாந்திணையும்
## தொப்புள்கொடி உறவின் எதிர்காலமும்

"தோன்றி வளர்ந்து சிதைந்து மறைந்து மறுபடியும் மறுபடியும் புதியன தோன்றும்" என்கிற இயங்கியல் உண்மையை மீளமீள பொதுப்புத்தி மட்டங்களில் கூட ஏற்றுக்கொள்கிற வகையில் பல நிகழ்வுகளைக் தாண்டிப்போய்க்கொண்டிருக்கிறது தமிழ்ச் சமூகம். "பறை"யை நாங்கள் உங்கள் முன் கொண்டு வரும் இந்த வேளையில் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் கண்டுள்ள பல "பரிணாமங்களையும்", "பரிமாணங்களையும்" கண்டனுபவித்தபடி இருக்கிறோம். போரின் பக்கவிளைவுகளாக உருவெடுத்திருக்கிற பல வெளிப்பாடுகளில் முக்கியமான ஒன்று இந்த புலப்பெயர்வு.

புகலிடத் தமிழர்களின் தேவைகள், பண்புகள், வடிவங்கள், திசை வடிவங்கள் இனிவரும் காலங்களில் இதற்கான அரசியல் மூலோபாய தந்திரோபாயங்கள் என்பன பற்றிய சிந்தனைகள் இப்போது தான் வெளிக்கிளம்ப ஆரம்பித்திருக்கின்றன.

"புலம்பெயர்வு" என்பது இன்று உலகளாவிய கருத்தாக்கமாக வளர்ச்சியுற்றிருக்கிறது. உலகம் முழுவதும் பல்வேறு காரணங்களால் நாடுகடந்து வாழ்தல் எனும் "புலப்பெயர் கருத்தாக்கம்" (Exile concept) பலவிதமான அரசியல், சமூக, கலாசார ஊடாட்டங்களை நிகழ்த்தியுள்ளது. இதன் விளைவாக பல்வேறு சமூகங்கள், அவ்வவ் மொழிகளுக்குரிய கலை, இலக்கிய படைப்புகளுக்கூடாகவும், செயற்பாடுகளுக்கூடாகவும் புலம்பெயர் அரசியல், புலம்பெயர் கலை, புலம்பெயர் இலக்கியம் என இந்த கருத்தாக்கம் வளர்ச்சியுற்றிருக்கிறது. இவை ஏனைய புலம்பெயர் சமூகங்களுக்குமான வழிகாட்டல்களை நிகழ்த்தியுமுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் மரபிலக்கியத்தில் நாம் ஐந்திணைகளைப் பற்றிய கருத்தாக்கத்தை அறிந்திருக்கிறோம். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வெட்டவெளி என அழைக்கப்படும் Cyber Space என்பதை ஆறாம்திணையாக சமீப காலத்தில் ஆக்கிக்கொண்டோம். இன்று ஏழாம் திணையாக புலம்பெயர்வினை குறிப்பிடவேண்டும் என்கிற முன்மொழிவு கூட சமீபகாலமாக முன்வைக்கப்பட்டு வருகிறது. அது மிகவும் பொருத்தமானதும் கூட.. திணைக்கான குணங்களையும், பண்புகளையும் அதன் திசை வடிவங்களையும் நாம் பகுத்தாராயும் கட்டம் இது.

தமிழ்ச் சமுகத்தில் புலம்பெயர் இலக்கியம் என்பதன் முதல் கட்ட வடிவமானது முதலாம் தலைமுறையினர் தாயகத்தை அடியொற்றிய, தொப்புள்கொடி உறவை இறுக பற்றிக்கொள்கிற, அதனை பாதுகாக்கின்ற. தாயகத்தின் மீதான கடமையில் பிரக்ஞை கொண்டிருந்த, தாயகத்தின் எதிர்காலம் மீதான அதிக ஈடுபாடு கொண்டிருந்த ஒரு வடிவம். போருக்கு முந்திய பசுமைகளை அப்படியே அனுபவித்துக் கொண்டிருந்த நிலையில் புலம்பெயர்ந்தவர்கள் இவர்களில் அதிகம். அந்த உள்ளடக்கங்களை அப்படியே பிரதிபலித்த கலை இலக்கியங்கள் இது வரை தொடர்ந்தன.

இரண்டாம் தலைமுறையினரது உருவாக்கத்தோடு அவர்களின் வாழ்நிலையை நேரடியாக பார்த்துணர்கிற கட்டத்தை முதலாவது தலைமுறையினர் இப்போது அடைந்துகொண்டிருக்கிறது. குடும்ப உறவுகளைப் பொறுத்தவரை முன்னைய பண்பாட்டு மரபில் காணப்பட்ட அதிக பிணைப்புகளையும், அதிகாரங்களையும், பொறுப்புகளையும், உரிமைகளையும் உள்ளடக்கிய வடிவமாக இருந்த அனைத்தையும் புலம்பெயர் நாடுகளில் அந்த நாடுகளின் வழக்கங்களுக்கேற்றபடி அவை அற்றுப் போவது குறித்த பீதி கடந்த காலங்களில் நிலவின. இன்று அதன் நேரடி நடைமுறைகளை காணமுடிகிறது. அனைத்து புலம்பெயர் சமுகங்களைப் போலவே இது முதலாம் தலைமுறைக்குரிய பிரச்சினை தான். இரண்டாம் தலைமுறை வேறு வடிவத்தில், அளவில் குறைந்த ஒரு பிரச்சினையை எதிர்கொள்ளும் என நம்பப்படுகிறது.

இதன் பன்முக விளைவுகளை தற்போது பல வடிவங்களிலும் பலவித அளவுகளிலும் நேரடியாக கண்டுணர்ந்து அனுபிவிக்கிற காலகட்டம் இது. இது போகப்போக முதலாம் தலைமுறையினருக்கு மேலதிகமான அனுபவங்களைத் தரும். இதன் சாதக பாதக விளைவுகள் குறித்த தேடலும், அதன் மீதான பிரக்ஞையும் தமிழ்ச் சமுகத்தில் வரண்டுபோயிருப்பது தான் இன்றைய கவனிப்புக்குரிய விடயம்.

தற்போதைய புகலிடச் சூழலை எதிர்கொள்கிற போது தமிழ் மொழி, மற்றும் அதன் பண்பாட்டம்சங்கள் சார்ந்த அனைத்தும் எத்தனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்துக்கு தாக்குபிடிக்கும் என்பது இன்னமும் கேள்விக்குறியாகத் தானிருக்கிறது. முதலாம் தலைமுறையினரின் ஏக்கங்கள், எதிர்பார்ப்புகளை தற்போது உள்ள தொடர்புசாதனங்கள், (தொலைக்காட்சிகள், வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், மற்றும் இணையத்தளங்கள்) முதலானவை தான் கொஞ்ச காலம் பாதுகாக்கும் போலத் தெரிகிறது. இதன் மறைவைப் பின்போடும் பாத்திரமும் இந்த தொடர்புசாதனங்களுக்குத்தான் இருக்கிறதென பல நிபுணர்களும் கருத்து தெரிவித்து வருகிறார்கள்.

எனவே இன்றைய இந்த தேவைகளையும் அதிக கவனத்திற்கொண்டு அவற்றையும் தாங்கியபடி தான் பறை உங்களுக்கு முழங்கப் போகிறது. இதன் ஒலி உலகம் முழுவதும் கேட்கச் செய்வது மட்டுமல்ல அவற்றின் எதிரொலிகளையும் பறை உள்வாங்கிக் கொள்ளும். அதனையும் செரித்துக்கொண்டு உங்களை வந்தடையும்.

தேசிய மற்றும் சர்வதேசிய சமுக, அரசியல், கலாச்சார, பொருளாதார நிலைமைகளோடு நின்றுவிடாது நமது சமுகத்தில் நிலவுகின்ற, யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க, மேட்டுக்குடி சித்தாந்தங்களையும், அவை சார்ந்த ஏனைய அதிகாரத்துவங்களையும் "பறை" எதிர்த்து குரல்கொடுக்கும். அனைத்து அடக்குமுறைகளுக்குகெதிராகவும் ஓங்கி ஒலிப்போம். எம்மோடு கைகோர்க்கும்படி அனைவருக்கும் பறை அறைகூவுகிறது. புகலிடத்தில் வெளிவந்த பல சஞ்சிகைகளும் நின்றுபோய் ஒரு சில மட்டுமே அவ்வப்போது தலைகாட்டி வருகிற நிலைமையை நாம் கவனத்திற்கெடுப்போம்.

எங்கள் எழுதுகோல்களை கூர்மையாக்கிக்கொண்டு உங்கள் முன் உயிர்க்கிற இந்த வேளை, ரிச்சர்ட் டி சொய்ஸா, சபாலிங்கம், நிமலராஜன், பிரேமகீர்த்தி டி அல்விஸ், குகமூர்த்தி, செல்வி, றோகண குமார என அனைவரது நினைவுகளோடும் அவர்களின் சாம்பல் மேடுகளிலிருந்து மீள உயிர்க்கின்றோம். எங்கள் குரல்கள் என்றும் ஒலிக்க, எங்கள் எழுதுகோல்கள் என்றும் எழுத்தைப் பிரசவிக்க எங்களுக்கான மனவலிமையை (moral) உங்களிடமிருந்து என்றும் எதிர்பார்க்கிறோம்.

இச் சஞ்சிகை Asker og Bærum தமிழர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் கருத்துச் சுதந்திரத்துக்கான ஒரு நூலாக வெளியிடப்படுகிறது. இதில் வெளிவரும் கருத்துக்களுக்கும் ஒன்றியத்துக்கும் பொறுப்பில்லை. இதில் வெளிவரும் படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

-ஆ.ர்.

தொடர்புகளுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர் ஒன்றியம்: முள் நிறைந்த பாதைகள் வழியே...

க.சிவானந்தன்

**Asker & Bærum** தமிழர் ஒன்றியத்தின் வரலாற்றையும் அதன் வினைபயன்களையும் திரும்பிப் பார்க்கின்ற போது இன்று அது இங்குள்ள புலம் பெயர் தமிழர்களின் ஒன்றுபட்ட கருத்துக்களுக்கு ஆணிவேராக அமைந்துவிட்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. 10வது வருடத்தை எட்டிக் கொண்டிருக்கும் தமிழர் ஒன்றியத்தின் சாதனைகள் சுலபமாக பெற்றவை அல்ல. அது முள் நிறைந்த பாதைகள் வழியே பலரதும் உழைப்பு, சக்தி, நேரம், வளங்கள் அனைத்தும் அர்ப்பணிக்கப்பட்டதன் விளைபொருளே இந்த சஞ்சிகை வரையான அதன் வெற்றி.

ஈழத்தமிழர்களின் ஆரம்பகாலங்களில் நோர்வேக்கு மாணவர்களாக வரத்தொடங்கிய காலங்களில் Bærum இல் ஒரு பகுதியினர் தங்கள் பாதங்களைப் பதித்து வாழத் தொடங்கினர். அவர்களில் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்களே அதிகமாக இருந்தார்கள். காலப்போக்கில் போக்குவரத்து செய்யும் இடங்கள், போக்குவரத்து சாதனங்கள், பாடசாலைகள், மற்றும் கடைகளில் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ளத் தொடங்கினார்கள். இதன் காரணங்களால் ஒருவருக்கொருவர் தங்களை அறிமுகம் செய்துகொண்டார்கள். தங்கள் நட்பையும் வளர்த்துக்கொள்ளத்தொடங்கினர். காலப்போக்கில் திருமணம், பிறந்தநாள் மற்றும் பல்வேறு வைபவங்களில் ஒருவரையொருவர் அழைத்து நட்புகொண்டாடி தங்கள் உறவுகளை பலப்படுத்திக் கொண்டது மட்டுமன்றி பரஸ்பர உதவி ஒத்தாசைகளை செய்துகொண்டார்கள்.

1986ற்குப் பின்னர் ஈழத்தமிழர்கள் தாயகத்தில் ஏற்பட்ட போரின் உக்கிரம் காரணமாக அகதிகளாகவும், அரசியல் தஞ்சம் கோரியவர்களாகவும், பொருளாதார காரணங்களாலும் வந்துசேர ஆரம்பித்தார்கள். இவ்வாறு Bærum இல் குடியேறிய தமிழர்கள் பலர் தங்களை படிப்படியாக நிலைநிறுத்திக் கொள்ளத் தொடங்கினார்கள். தமக்கே உரித்தான பாணியில் ஈழத்தமிழர்கள் பல்வேறு காரணங்களால் பல்வேறு இடங்களில் சந்தித்துக்கொண்டார்கள்.

பொழுதுபோக்குக்காக சில ஒன்றுகூடல்களை செய்து விளையாட்டு, அரட்டை, தங்கள் தாயக நினைவுகளை மீட்டல் எனக் கூடுவதில் ஆறுதலடைந்தார்கள்.

இப்படியான சந்திப்பு ஒருகட்டத்தில் ஈழத்தமிழர்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முற்போக்கு சிந்தனையுள்ளவர்கள் ஈழத்தமிழர்களுக்கு ஒரு பொதுவானதும் பல்வேறு கருத்துக்களைக் கொண்டவர்களையும் ஒன்றுபட்ட செயற்பாடுகளின் கீழ் அணி திரட்டுவதற்காகவும், தங்கள் ஒன்றுபட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் தமிழர் ஒன்றியம் எனும் பெயரில் கட்சி அரசியல் அல்லது இயக்க அரசியலோ சாராத ஒரு அமைப்பை உருவாக்கினார்கள்.

தமிழர் ஒன்றியத்தின் முதல் கூட்டம் 94 யூன் 17 அன்று Bærum Commune Gårdenஇல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 27 பேர் வரை கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் தமிழர் ஒன்றியத்தின் தலைவராக க.விஸ்ணுசிங்கமும் செயலாளராக க.தவேந்திரனும், உப செயலாளராக ஆர்.கணேஸ், உபதலைவராக எஸ்.கந்தமணி, பொருளாராக எஸ்.புஸ்பேந்திரா அவர்களோடு ககலைச்செயலாளராக பீ.ரகுணாவும், உப கலைச்செயலாளராக தங்கவேல், விளையாட்டுச் செயலாளராக சுந்தரலிங்கம் மற்றும் உப விளையாட்டுச் செயலாராக எம்.பாஸ்கரனும் தெரிவு செய்யப்பட்டு முதலாவது நிர்வாகசபை அமைக்கப்பட்டது.

தமிழர் ஒன்றியம் செயற்படத் தொடங்கியது. ஆரம்பத்தில் வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை நேரங்களில் Bærum வாழும் அனைத்து தமிழர்களும் ஒன்று சேர்ந்து பல்வேறு வகையான விளையாட்டுக்கள் கலந்துரையாடல்கள் மற்றும் அனைவரும் சேர்ந்து உணவு பரிமாறி உண்டு மகிழ்ந்தனர். தங்கள் சிறுவர்கள் ஒன்று சேர்வதன் மூலம் தமிழைப் பேசுவதற்கு ஒரு பொது இடமாக அமையவேண்டும் என்பதிலும் அக்கறை காட்டினார்கள். இதற்கான செலவுகளை தாங்களே சிறு சிறு தொகையாக சேர்த்து பணிகளை செய்து வந்தார்கள்.

இந்த ஒன்றுகூடல் மூலம் தாங்களே தங்களை வளப்படுத்தத் தொடங்கினார்கள். நல்ல நண்பர்கள் நல்ல கருத்துக்கள் மூலம் ஒவ்வொருவரும் பயனுள்ள ஒரு சமுதாயத்திற்கு அடித்தளம் இட்டார்கள். சில கட்டங்களில் பல்வேறு சலிப்புத்தன்மைகள், வேலைச்சுமை, நேரமின்மை காரணமாக செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்த நிலைமைகளும் கூட ஏற்பட்டதென்பது என்பது உண்மை.

எவ்வாறிருப்பினும் சகிப்புத்தன்மையுள்ள, பிரக்ஞைநிறைந்த சிலர் ஒன்றியத்தை ஒன்றியத்தை பல சிரமங்களுக்கும் மத்தியில் நிலைநிறுத்திக்கொண்டே இருந்தார்கள். 1997ஆம் ஆண்டில் Bærum இல் தமிழ்ச் சிறுவர் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. அவர்கள் Norsk இல் மட்டுமே பேசத் தொடங்கியதை அடையாளம் காணத் தொடங்கினார்கள். அவர்களுக்கான தமிழ் மொழி பரிச்சயம் பற்றிய தேவையை இங்குள்ள தமிழர்கள் உணரத் தொடங்கினர். அதே வேளை தமிழின் எழுத்துவடிவம் பற்றியும், சரியான பேச்சுப் பழக்கத்தையும் வழங்கத்தான் வேண்டுமா என்ற கேள்வியும் எழுந்தது. அவர்களின் எதிர்காலம் பற்றிய குழப்பங்களோடும் அவ்வாறு கற்பிப்பதன் மூலம் பிள்ளைகளுக்கு வயதுக்குமீறிய சுமை கூடி விடுமோ என்கிற வாதங்களும், அவர்களின் நோர்வேஜிய மொழி ஆளுமைக்கு குறுக்கீடாக இது அமையப் போகிறதோ என்கிற குழப்பங்களும் நிலவிக் கொண்டிருந்தது. இந் நிலைமையில் ***முதலாவது தலைமுறைக்கும் இரண்டாவது தலைமுறைக்குமிடையிலான பண்பாட்டுறவுக்கு "தமிழ் மொழி" ஒரு தவிர்க்க முடியாத தேவை*** என்பதை அப்போது க. சுந்தரலிங்கம் வலியுறுத்திக் கொண்டிருந்தார். அவருடன் ஆரம்ப காலந்தொட்டே தமிழர் ஒன்றியத்துடன் சேர்ந்து இயங்கிய க.தவேந்திரனும் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்தினார்கள். அதன் விளைவாக Bærum தமிழர்கள் பலரது ஒத்துழைப்புடன் **'தமிழ் அறிவாலயம்'**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது.

கடந்த 5 ஆண்டு காலமாக பள்ளிக்கூடம் வெற்றிகரமாக இயங்கி வருகிறது. பெற்றோர்கள் தொண்டர்களாக இணைந்து பள்ளிக்கூட நிர்வாகமொன்றையும் அமைத்து ஆசிரியர்களாகவும் தங்களின் பங்களிப்பை வழங்கி வருகிறார்கள். குழந்தைகளுக்கான விளையாட்டுவிழா, கலை நிகழ்ச்சிகள், போட்டிகள், ஒன்றுகூடல் என அதன் வெகுஜன செயற்பாடுகள் நீடித்து வருகின்றன.

இந்த வெற்றியின் ஒரு வடிவமாக இப்போது கலை, இலக்கிய, சமூக, அரசியல் சஞ்சிகையொன்றையும் வெளியிடுகிறது.



## இழப்பு

எனக்குத் தெரியும்
என் மண்ணில்
வசந்தம் ஒருநாள்
மலருமென்று!
இழப்புகளையும் ஒரு நாள்
இழப்போம் என்று!

அன்று
அழிந்த வீயெல்லாம்
தோரணங்கள் கட்டப்படும்...

என் இடிந்த வீட்டை
மாமா புதுப்பித்துத் தருவார்.
பூஞ்செடிகளில் பூக்கள்
புத்துயிர் பெறும்.

என் பழைய சிநேகிதர்கள்
மீண்டும் அறிமுகமாவார்கள்
இருள் மறையும்...

எனக்குத் தெரியும்
இழப்புகளையும்

ஒருநாள் இழப்போம் என்று...
என் அம்மா
வருவாள்...
என் மாமா, மாமி
வருவார்கள்...
என் தாத்தா
வருவார்...
என் மச்சான்
வருவான்...

தேசத்திற்காய்
உயிர் நீத்தவர்கள்
என்ற மாவீரர் பட்டியலில்.

என் அப்பாவும் வருவார்....

**-கவிதா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாதியை ஒழிக்க கடவுளை ஒழி...

**பெரியார்**

நான் என்ன சொல்லுகிறேன் என்றால், "நம் கடவுள் நம்பிக்கை என்பதே கடைந்தெடுத்த முட்டாளின் அறிகுறி"யாக ஆகிவிட்டது. காரணம் என்னவென்றால், "கடவுள் என்றால் ஆராய்ச்சியே செய்யக்கூடாது", நம்பவேண்டும்", அப்படியே ஒப்புக்கொள்ளவேண்டும்" என்பதாகிவிட்டது.

அது மாத்திரமல்ல, அப்படிப்பட்ட கடவுளைப்பற்றி, "கடவுள் என்றால் என்ன? அவர் எப்படி இருப்பார்? எதற்காக இருக்கிறார்? ஏன் இருக்கிறார்? எதுமுதல் இருக்கிறார்? அவர் சக்தி எவ்வளவு? நம் சக்தி எவ்வளவு? அவரால் ஏற்பட்டது எது, நம்மால் ஏற்பட்டது எது? எது எதை அவருக்கு விட்டுவிடலாம்? எது எது நாம் செய்யவேண்டியது? அவரில்லாமல் ஏதாவது காரியம் நடக்குமா? எதையாவது செய்யக் கருதலாமா?" என்பது போன்ற (இப்படிப்பட்ட) நூற்றுக்கணக்கான விஷயங்களில் ஒரு விஷயத்தைக்கூட தெளிவாகத் தெரிந்து கொண்டவன் எவனும் கடவுள் நம்பிக்கைக்காரர்களில் இல்லை. இல்லை என்றால் அறவே இல்லை என்று சவால்விட்டுக்கூறுவேன்.

நான் இதை 60-70 ஆண்டாகச் சிந்தித்து, சிந்தித்து அறிவில் ஆராய்ச்சி அனுபவத்தில் கண்டுகொண்ட உறுதியினால் கூறுகிறேன். இவ்விஷயங்களில் மக்களுக்கு விஷயம் தெரியாது என்று சொல்லுவதற்கும் இல்லாமல் தெரிந்துகொண்டிருப்பது குழப்பமானதும், இரட்டை மனப்பான்மை கொண்டதுமாக இருப்பதால், மனிதனுக்கு இவ்விஷயத்தில் அறிவு பெற இஷ்டமில்லாமல் போய்விட்டது.

தோழர்களே! நான் சொல்லுகிறேன், கடவுள் நம்பிக்கைக்காரன் ஒருவன் "நான் சாதியை ஒழிக்கப் பாடுபடுகிறேன்" என்றால் அதில் அறிவுடைமையோ, உண்மையோ இருக்க முடியுமா? கடவுள் இல்லாமல் எப்படி சாதி வந்தது? மத நம்பிக்கைக்காரன் ஒருவன் " நான் சாதியை ஒழிக்கப் பாடுபடுகிறேன்" என்று சொல்ல முடியுமா? மதமில்லாமல் எப்படி சாதி வந்தது? சாஸ்திர நம்பிக்கைக்காரன் ஒருவன் "நான் சாதியை ஒழிக்கப்பாடுபடுகிறேன்" என்று சொல்ல முடியுமா? சாஸ்திரம் இல்லாமல் எப்படி சாதி வந்தது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகவே இந்த சாதி ஒழிப்புக் காரியத்தில் கடவுள், மத, சாஸ்திர நம்பிக்கைக்காரர்கள் இருந்தால், அவர்கள் மரியாதையாய் வெளியேறி விடுவது நாணயமாகும். இதனாலேதான் "சாதி கெடுதி, சாதி சுடாது" என்று சொல்லத்தான் சில "பெரியவர்கள்" முன் வந்தார்களே ஒழிய, அதை ஒழிக்கப் பாடுபட இன்றுவரை எவரும் முன்வரவில்லை.

ஆகவே, தோழர்களே! உங்களுக்கு நான் சொல்லுகிறேன், வணக்கமாகச் சொல்லுகிறேன். நீங்கள் சாதியை ஒழிக்கப் பிரியப்பட்டீர்களேயானால் இந்த இடத்திலேயே சாஸ்திரத்தையும் ஒழித்துக்கட்டுங்கள்! ஒழித்துவிட்டோம் என்று சங்கநாதம் செய்யுங்கள்! கடவுள், மதம், சாஸ்திரம் ஆகிய மூன்றும் ஒழிந்த இடத்தில்தான் சாதி மறையும். சாதி ஒழியும் மற்ற இடம் எப்படிப்பட்டதானாலும் அங்கு சாதி சாகாது.

ஆகவே, சாதி ஒழியவேண்டும் என்பவர்கள் முதலில் நாத்திகன் ஆகுங்கள். நாத்திகம் என்பது அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் கொண்டு தெளிவடைவது தான். இத்தெளிவு அடைந்த இடத்தில் இம்மூன்றும் (கடவுள், மதம், சாஸ்திரம்) தலைகாட்டாது.

ஆகையால், இப்படிப்பட்ட நீங்கள் நாத்திகர் என்று சொல்லிக்கொண்டாலும் ஒன்றுதான், பகுத்தறிவுவாதி என்று சொல்லிக்கொண்டாலும் ஒன்றுதான். தோழர்களே! சாதி ஒழிப்புக்காரர்கள் வீட்டில் உருவச்சின்னங்களோ, மதக் குறியோ, சாஸ்திர சம்பிரதாய நடப்போ இருக்கக் கூடாது, கண்டிப்பாய் இருக்கக்கூடாது.

(12.08.1963 அன்று பாண்டிச்சேரியில் நடைபெற்ற சாதி ஒழிப்பு மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி - "விடுதலை" - 17.08.1962)

## நாதியற்ற நாங்கள்

*கைதட்டி சிரிக்க*
*இங்கொன்றும் இல்லை - எனினும்*
*கை கொடுத்துதவுங்கள்*
*இதுவோர் அனாதையின் கதை*
*இதுவோர் அனாதையின் கதை*
*காலங்காலமாய்...*
*போராடும் இனமொன்றின்*
*கண்ணீர் புஸ்பங்கள்*
*வரிவரியாய் எழுதியவோர்*
*சோகக்கதை!*
*இதுவோர் சோகக்கதை!*
*அம்மையார் எமையாண்டு*
*அனாதையாக்கி அரசியல் தஞ்சம்*
*புகவைத்தாள்*
*வெளிநாட்டில்*
*சொந்தநாடோ எமக்கில்லை*
*சொந்த மொழியோ செல்லாது*
*சொல்லவோ வெட்கம்!*
*அம்மையார் மாண்டார்*
*வந்தான் ஓர் அரக்கன்*
*எமையாட்சி செய்ய*
*யாருக்கையா சொல்ல*
*பெற்ற தாயுமில்லை*
*பிறந்த பொன்னாடுமில்லை*
*இருக்கவோ இடமுமில்லை*
*வந்தோம் வெளிநாடு*
*கலைக்கின்றனர்*
*கறுப்பர் என்கின்றனர்*
*யாருக்கு சொல்ல*
*யாருக்கு விளங்கும் எம்நிலை*
*இழப்பதற்கு எதுவுமில்லை*
*வெல்வதற்கு ஈழமுண்டு*
*என்றோ*
*ஒரு நாள் கிடைக்கின்றன எம் ஈழம்*
*எம்மையெல்லாம் காக்கும்.*
*அனாதைப்பிடியிலிருந்து....*
*அந்நாள் எந்நாளோ!*

**-சுந்து**
**1983**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பலியாக்கப்பட்டு வந்ததற்கு தான் 50 வருடங்கள். இந்த 50 வருட காலம் என்பது ஒடுக்கு முறையின் மீது தான் வந்துள்ளது. பொன் விழா என்பது அந்த ஒடுக்கு முறையின் கரி நாளாகத் தான் தமிழ் மக்களுக்கு இருந்தது. வட கிழக்கெங்கும் இது வரைகாலம் பெப்ரவரி 4 என்பது ஒரு கரிநாளாகத் தான் அனுட்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த தினத்தில் அங்கு கறுப்புக்கொடிகள் பறக்கவிட்டு, சிங்கள பௌத்த அடக்குமுறையின் சின்னமான தேசியக்கொடி (சிங்கக்கொடி) எரிக்கப் பட்டு தமிழ் கீதம் இசைக்கப்பட்டு வந்திருக்கிறது. அடக்குமுறையின் அளவு கொஞ்சமும் குறைந்ததில்லை மாறாக நாளுக்கு நாள் மோசமாக்கப்பட்டு வந்து இன்று தமிழ் மக்கள் தங்கள் தலையெழுத்தை தீர்மானிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில், அடக்கு முறையின் உச்ச கட்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையில் 50வது சுதந்திர விழா கொண்டாடப்பட்டது. யாரால் யாருக்கு வழங்கப்பட்ட சுதந்திரம்? எவருக்கு கிடைத்திருக்கிற சுதந்திரம்? நிச்சயமாக தமிழ் மக்களுக்கோ அல்லது இங்கு வாழும் ஏனைய சிறபான்மை இனக் குழுமங்களுக்கோ அல்ல.



சேர்.ஜேம்ஸ் பீரிஸ் சேர்.பொன் அருணாசலம்

அதிகாரம் கைமாற்றப்பட்ட பின் சிங்கள பௌத்த அதிகார சக்திகள், கொடுக்கும் தரப்பாகவும் ஏனைய தரப்பினர் கையேந்தி தமதுரிமைகளைக் பிச்சை கேட்கும் தரப்பினராகவும் மாறியது. தொடர்ச்சியாக இரங்கிப் போய் கோரினர். தமது சந்தர்ப்பவாத நலன்களின் போது மட்டும் (அதாவது தமிழ் தலைமைகளினால் அரசியல் லாபம் கிடைக்க க்கூடிய நிலைகளில் மட்டும்) தமிழ்த் தலைமைகளுடன் பேச முற்படுவது வாக்குறுதிகள் வழங்குவது, ஒப்பந்தம் செய்து கொள்வது, தங்கள் நலன்கள் முடிந்ததும் தூக்கி யெறிந்து விடுவது என இவை ஒன்றும் வரலாற்றில் ஒரு முறை ஏற்பட்டதல்ல. அந்த நம்பிக்கைத் துரோகங்களின் வரலாறு நீண்டது. தமக்கான உரிமைகள் சிங்கள பௌத்த அதிகாரத் தரப்பினால் ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை என்பது ஸ்தூலமாக நிரூபிக்கப்பட்டு வந்திருக்கிறது. தமிழ் மக்கள் தமது விடுதலையைப் பெறுவதைத் தவிர வேறு மாற்று இல்லையென்பது மீள மீள உறுதி செய்யப்பட்டு வந்திருக்கிறது. சிங்கள அதிகாரத் தரப்பினால் அடுத்தடுத்து வழங்கப்படும் எந்த உத்தரவாதத்தையும் சந்தேகிக்க, மறுக்க, எதிர்க்க, எச்சரிக்கை கொள்ள வைத்து விட்டிருக்கிறது.

இந்த அரை நூற்றாண்டு வரலாறு என்பது சிங்கள பௌத்த சக்திகளினால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாறு தான். அது இந்த அதிகாரம் கைமாறப்பட்ட 50 வருடங்களுக்குள் மட்டுப்பட்டதல்ல. சுதந்திரத்திற்கு முற்பட்ட காலந்தொட்டு அந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து- தொடக்கப்பட்டாகி விட்டது. அதனை இங்கு பார்ப்போம்...

## முதலாவது நம்பிக்கைத் துரோகம்

1915ஆம் ஆண்டு இனக்கலவரம் மற்றும் அன்றைய ஆங்கிலேய அரசு அறிமுகப்படுத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளைந்த இலங்கைக்கான புதிய அரசியல் யாப்பு என்பவற்றைத் தொடர்ந்து சிங்கள தமிழ் முஸ்லிம் தலைவர்கள் ஒரு இயக்கத்தை அமைக்க முனைந்தனர். இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த இந்திய தேசிய காங்கிரஸ் போலவே இலங்கையிலும் ஒரு இயக்கத்தை அமைத்துக் கொண்டனர்.பூரண சுயாட்சிக்கான முயற்சிகளை செய்யாத இந்த அமைப்பு வெறும் சீர்திருத்தவாத கோரிக்கைகளை பெறுவதற்கூடாக தனது நோக்கங்களைத் தணித்துக் கொண்டது. இவ்வாறான சீர்திருத்தக் கோரிக்கையை முன்னெடுப்பதற்கான ஒரு இயக்கமே இவர்களுக்கு அப்போது தேவைப்பட்டிருந்தது. இவ்வமைப்பைத் தொடங்குவதற்கு முன்னர் சிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டனர். யாழ்ப்பாணச் சங்கம் "தமிழ் மக்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப பிரதிநிதித்துவம்" என்ற கோரிக்கையை முன் வைத்திருந்தது. அதன்படி முடியுமானவரை தமிழ் விகிதாசாரத்திற்கிணங்க பிரதிநிதித்துவமும், மேல்மாகாணத்தில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவமும் வழங்கப்படுவதற்கு தொழிற்படுவதாக 1918இல் இலங்கை தேசிய சங்கத்தின் சார்பில் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் இலங்கை சீர்திருத்த கழகத்தின் சார்பில் ஈ.ஜே.சமரவிக்கிரமவும் யாழ்ப்பாண சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்திய சேர்.பொன்.அருணாசலத்திடம் எழுத்தில் உறுதியளித்தனர்.



பண்டாரநாயக்க தந்தை செல்வா

1919ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் திகதியன்று இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இச்சங்கத்தினூடாகவே இலங்கையின் படித்த உயர் மேட்டுக்குடித் தலைவர்கள் எல்லோருமாக இலங்கைக்கான சீர்திருத்த கோரிக்கைகளை விடுத்தக் கொண்டிருந்தார்கள். இ.தே.கா.வின் முதற் தலைவராக சேர்.பொன் அருணாசலம் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால் மனிங் சீர்திருத்தத்திற்கான முயற்சிகளை ஆங்கிலேய அரசு முயன்று கொண்டிருந்தபோது தமிழ் பிரதிநிதித்துவம் குறைக்கப்படுவதை இலங்கை தேசிய காங்கிரஸிலிருந்த தலைவர்கள் கண்மூடித்தனமாக இருப்பதைக் கண்ட அருணாசலம் முரண்படத்தொடங்கியதுடன் அதற்கெதிராகவும் நின்றார். சிங்களத் தலைவர்கள் வாக்குறுதியை மீறியதைத் தொடர்ந்து 1921ஆம் ஆண்டு அருணாசலம் இ.தே.கா.விலிருந்து வெளியேறி தமிழர் மகா சபையை அமைத்துக் கொண்டார். இதன் பின்னர் இ.தே.கா. ஒரு சிங்கள அமைப்பாகவே படிப்படியாக மாறியது. இந்த முதலாவது முறிவு தமிழ் மக்கள் தங்களைப் பற்றி தனித்து சிந்திக்க வைத்தது.

இந்த முதலாவது துரோகத்தனத்தைத் தொடர்ந்து இ.தே.கா.வினர் சமரச முயற்சிகளுக்கு முயற்சி செய்தாலும் கூட தமிழர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இந்த சமரச முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தன.

## தமிழ்–சிங்கள ஒப்பந்தம்

1921இல் தமிழ் தலைவர்களின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து கண்டியச் சிங்களவர்களும் (இ.தே.கா.வினரால்) ஏமாற்றப்பட்டதைத் தொடர்ந்து 1924இல் வெளியேறினர். இவ்விரு தரப்பினருடனும் ஒரு பொது உடன்பாட்டைக் காண வட்டமேசை

www.tamilarangam.net

# சிறிலங்கா: துரோகங்களின் புகலிடம்...
## (ஒரு வரலாற்றுப் பார்வை...)

கோமதி

**பெப்ரவரி** 4ஆம் திகதி ஒவ்வொரு வருடமும் சுதந்திரம் நமக்கு கிடைத்த நாளென திருப்பி திருப்பி புனையப்படுகின்ற ஒரு மிகப் பெரிய கும்பமேளா சிறிலங்காவில் நடப்பதுண்டு. இந்த நாளன்று நாட்டில் அனைத்து மக்களும் தங்களின் வீடுகளில் தேசியக் கொடியை பறக்கவிடும்படி பணிக்கப்படுவார்கள். அவ்வாறு தேசியக்கொடி பறக்கவிடாதவர்கள் சந்தேகத்திற்குள்ளா-வார்கள். நாட்டில் கடுமையான பாதுகாப்பு விதிகள் இந்த நாளில் அமுலுக்குவரும். ஏனைய நாளை விட சுதந்திரம் பறிக்கப்பட்டவர்களாக அனைத்து மக்களும் பாதுகாப்பு என்கிற பேரில் இம்சைப்படுத்தப்படும் நாளும் அது. ஏன் அரச தலைவர்களும், அதன் பிரிவாரங்களும் கூட அதிக பந்தோபஸ்துடனும் எச்சரிக்கையுடனும் இருக்கும் நாட்களும் அவை தான். சுதந்திர தினமானது இந்தளவு கேலிக்குரியதாகவும், வேடிக்கையாகவும் இருக்கும்.. சுதந்திரதினம் இந்தளவு வேடிக்கையாகிப் போனதன் பின்னணியின் வரலாற்றுப் பின்புலம் பலரால் மறக்கப்படுகின்ற ஒன்றாகியும் விடுகிறது. 50வது சுதந்திரப் பொன்விழா 1998இல் இலங்கையில் நடத்தப்பட்ட விதம் மிகப்பெரிய நகைப்புக்கிடமான வகையில் இலங்கையில் நடத்தப்பட்டது. எந்த ஏகாதிபத்திய காலனித்துவ அரசு சிறிலங்காவை அடக்கிவைத்திருந்ததோ. 50 வருடங்களின் பின் அதே அரசின் இளவரசரான சார்ள்சின் தலைமையில் இந்தத் திருவிழா நடத்தப்பட்டது தான் மேலும் நகைப்பிற்கிடமானது.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்கள் முழுவதும் சீரழிக்கப்பட்ட நிலையில், இருப்பதும் இழக்கப்பட்ட, அகதிகளாக, கைதிகளாக, நாடோடிகளாக, காலம் கடத்தி வருகின்றனர். ஒவ்வொரு நிமிடமும் மரண பயத்தில் மனோ பயத்தில் வாழ்ந்து வருகின்றனர். ஒட்டு மொத்தத்தில் அடிமை வாழ்வை அனுபவித்து வருகின்றார்கள்.

இந்த அடிமை சாசனத்துக்கு வயது 50. இலங்கை காலனித்துவத்துக்கு முன் தமிழ், சிங்கள அரசுகளாக இருந்த நிலையில் காலனித்துவவாதிகள் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்து பின் விட்டுவிட்டுப் போகும் போது அதிகாரத்தை சிங்கள பௌத்தர்களிடம் வழங்கி விட்டுப் போனதே வரலாறு. இந்த வரலாறுக்குத் தான் 50 வயது. சிங்கள-பௌத்த-ஆணாதிக்க-சுரண்டும் வர்க்கத்திடம் ஆட்சி கிடைக்க, அவர்களல்லாதவர்கள், அதிகாரத்துக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாநாடொன்றைக் கூட்டுவதற்கான யோசனை கொரயா அவர்களால் 1924 டிசம்பர் 9ஆம் திகதி முன்வைக்கப்பட்ட போதும் இ.தே.கா.வினருக்கும் கண்டியச்சிங்களத் தலைமைகளுக்குமிடையில் இருந்த முறுகல் நிலை காரணமாக இது உடனடியாகச் சாத்தியப்படவில்லை.1925 யூன் 28ஆம் திகதியன்று தமிழர் மகா சபைக்கும் இ.தே.கா.வின-ருக்குமிடையில் யாழ்ப்பாணத்தில் வைத்து ஒரு வட்டமேசை மாநாடு நடத்தப்பட்டது. இதன் போது தான் "சிங்கள-தமிழ் ஒப்பந்தம்" எனப்படும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன்படி

1.வடக்கு-கிழக்கு பிரதேசத்திலும், மேல் மாகாணத்திலும் வழங்கப்படும் பிரதிநிதித்துவத்தில் மூன்றில் இரண்டு பங்கு தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

2. இ.தே.க.வின் முன், வைக்கப்படும் சகல யோசனைகளையும் பாசீலிப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும்.

இக்கோரிக்கை 1925ஆம் ஆண்டு வருடாந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் 3வதாக இருந்தது. ஆனாலும் இவ் ஒப்பந்த விடயங்கள் அடுத்த வருடாந்த மாநாட்டுக்கு ஒத்தி போடப்பட்டது. கட்டாயமாக 1926ஆம் ஆண்டு நடக்கவிருக்கும் மாநாட்டில் இது முன்வைக்கப்படுமென பிரான்ஸிஸ் டி சொய்ஸாவால் கொரயாவுக்கு உறுதியளிக்கப்-பட்டபோதும் அம் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் கூட இது சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. தேசிய காங்கிரசினர் நம்பிக்கைத் துரோகிகள் என தமிழ் மக்கள் கருதுவார்கள் என அப்போது 'கொரயா' வால் சொல்லப்பட்டது. அதன்படியே நடந்தது. தமிழ் தலைமை இரண்டாவது முறையும் ஏமாற்றப்பட்டார்கள். இதன் விளைவு தமிழ் அரசியல் தேசிய அரசியலிலிருந்து தனித்துச் செல்லத் தொடங்கியது.

## பண்டா-செல்வா ஒப்பந்தம்

இந்த இடைக்காலத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடந்து முடிந்திருந்தன. டொனமூர் (1931), சோல்பரி(1947) ஆகிய அரசியல் திட்டங்கள் பெயரளவில் சில ஏற்பாடுகளை செய்திருந்தபோதும் நடைமுறையில் அவை தமிழ் மக்களுக்கு எந்த பாதுகாப்பையும் அளிக்கவில்லை. டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் தான், தனிச்சிங்கள மந்திரி சபை அமைக்கப்பட்டது. இந்திய வம்சாவழி மக்களைப் பாதிக்கக் கூடிய பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதற்கிடையில் 1948இல் "சுதந்திரமும்" வழங்கப் பட்டது. சோல்பரி அரசியல் திட்டம் தொடர்ந்து (1972 குடியரசு அரசியலமைப்பு வரை) அமுலிலிருந்தது சுதந்திரம் கிடைத்ததுமே மலையகத் தமிழர்களின் உரிமை பறி போனது. 1948இல் பிரஜாவுரிமைச் சட்டத்தின் மூலம் மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்திய பாகிஸ்தானிய சட்டமும் கொண்டு வரப்பட்டது. 1952ஆம் ஆண்டு வாக்குரிமைச் சட்டம் கொண்டு வந்ததன் மூலம் இறுதியாக மலையக மக்களின் வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. தேசியக் கொடி அமைக்கப்பட்ட போது அது சிங்கள பௌத்தர்களின் தேசியக் கொடியாக அமைக்கப்பட்டது. விவசாய அபிவிருத்தித் திட்டம் என்ற பேரில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. இந்திய வழ்சாவழி மக்களுக்கெதிரான நாடு கடத்தும் ஒப்பந்தம் (நேரு-கொத்தலாவல-1954) செய்து கொள்ளப்பட்டது.

இதற்கிடையில் 1956ஆம் ஆண்டு தேர்தற் பிரச்சாரத்தின் போது ஐ.தே.க.தமது களனி மாநாட்டில் சிங்களம் மட்டும் அரச கருமமொழி தீர்மானத்தை நிறைவேற்றியது. தாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதனை விட தீவிர சிங்கள பௌத்தர் என்பதைக் காட்டுவதற்கு ஸ்ரீ ல.சு.க. தாம் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வருவதாக வாக்குறுதி அளித்தது. அதே போல் தேர்தலில் வெற்றி பெற்றதும் பண்டாரநாயக்காவால் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதனை எதிர்த்து சத்தியாக்கிரகம் இருந்த தமிழரசுக் கட்சியினர் கொடூரமாக தாக்கப்பட்டு கலைக்கப்பட்டதுடன் அது கலவரத்தில் வந்து முடிந்தது. 150க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 1957 சுதந்திர பகிஷ்கரிப்பு செய்து, கறுப்புக் கொடியேற்ற முனைந்த நடராசன் எனும் இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த நிலையில் 1957 யூலை 20 திகதியன்று ஒரு மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்த வேளையில் தான் பண்டாரநாயக்கா தமிழ் மக்களின் எதிர்ப்பை கண்டு சமரசத்துக்கு வரத் தொடங்கினார்.

1957ஆம் ஆண்டு யூலை 27ஆம் திகதி நள்ளிரவு பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஆகியோருக்கிடையில் காணப்பட்ட இடைக்காலத்திற்கு தீர்வு தரக்கூடிய இவ் உடன்படிக்கையின் படி குறிப்பாக...

1. சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தம்
2. தேசிய சிறுபான்மை மொழியாக தமிழ் உத்தியோக அங்கீகாரம் பெறும்.
3. தமிழ் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாக இருக்கும்.
4. நாட்டில் தமிழ் மக்கள் தம் கருமங்களை தமிழில் ஆற்றவும் தமிழில் தமது பண்பாட்டை வளர்க்கும் உரிமையும் பாதுகாக்கப்படும்.
5. பிரதேச சபைகள் சட்டத்தின் மூலம் பெருமளவு "பிரதேச சுயாட்சி" மக்களுக்கு வழங்கப்படும்.

என்ற இவ்வொப்பந்தத்தைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சி நடாத்தவிருந்த மாபெரும் ஹர்த்தால் நிறுத்தப்பட்டது. இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டவுடன் தென்னிலங்கையில் ஆங்காங்கு தாக்குதல்கள் நடந்தன. ஒக்டோபர் 4இல் ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.ஆர்.ஜெயவர்தனா தலைமையில் கண்டிக்கு பேரினவாத யாத்திரை சென்ற போது அது இம்புல்கொடவில் வைத்து அரச சக்திகளினால் முறியடிக்கப்பட்டது. ஒன்பது மாதங்களாக இவ்வொப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதில் இழுத்தடிக்கப்பட்டது. 1958 ஏப்ரல் 8 அன்று பண்டாரநாயக்காவின் றோஸ்மீட் பிளேஸ் இல்லத்துக்கு முன் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் பிக்கு எக்ஸத் பெரமுனவைச் சேர்ந்த பிக்குமாரும் சத்தியாக்கிரகம் இருந்ததைத் தொடர்ந்து அவர்களின் முன்னால் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதுடன். ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டதாக அன்றே பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இந்த துரோகத்தனம் சிங்கள அரசாங்கத்தின் முதற் துரோகமாகவும் அமைந்தது. இவர்களை நம்பிப் பயனில்லை என்ற நிலைக்கு இது கொண்டு சென்றது. மேலும் 1957இல் "ஸ்ரீ" சட்டம் கொண்டு வரப்பட்டது. இவற்றை எதிர்த்து சாத்வீக முறையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்களைத் தொடர்ந்து 1958 இனக்கலவரம் நடந்தேறியது தமிழ் மக்களுக்கெதிரான பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. பல தமிழர்கள் இதில் கொல்லப்பட்டனர். வீடுகள் கொழுத்தப்பட்டன. அகதிகளாக்கப்பட்டனர். தமிழரசுக் கட்சி தடை செய்யப்பட்டதுடன் தொண்டர்கள் பலர் தடுத்து வைக்கப்பட்டனர், சுதந்திரன் பத்திரிகையும் தடை செய்யப்பட்டது.

இதற்கிடையில் பண்டாரநாயக்காவும் பிக்குவால் கொலைசெய்யப்பட்டு 1960 மார்ச்

www.tamilarangam.net

தேர்தலுக்கான ஆயத்தங்கள் நடந்தன. தமிழரசுக் கட்சி இரு பெரும் கட்சிகளிடம் நான்கம்சக் கோரிக்கைகளை முன்வைத்தது. இவ்வொப்பந்தம் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

## தமிழரசுக்கட்சி–ஸ்ரீ.ல.சு.க. உடன்படிக்கை

1.பிரதேச சபைகளை அமைத்தல், குடியேற்றங்களை நிறுத்தல், 2.தமிழ் மொழிக்கு சட்ட அந்தஸ்து, 3.பிரஜாவுரிமைச் சட்டத் திருத்தம், 4.குடியுரிமைப் பிரச்சினை தீரும் வரை 6 நியமன உறுப்பினர்களில் 4ஐ மலையகத் தமிழர்களுக்கு வழங்குவது. இவ்வாறு ஏற்றுக்கொண்ட விடயங்கள் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெற வேண்டும்.

இதனை எழுத்தில் பெற்றுக் கொண்ட டட்லி பின்னர் நிராகரித்தார்.



சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம்

ஆனால் ஸ்ரீ.ல.சு.க. ஏற்றுக் கொண்டது. அக்கோரிக்கைகள் பண்டா செல்வா ஒப்பந்தத்தை ஒட்டியிருப்பதால் அதனை தாம் ஏற்பதாக சிறிமா தமது பிரதிநிதிகளின் மூலம் அறிவித்தார். இவ்வுடன்படிக்கையின்படி சிம்மாசனப் பிரசங்கத்தின் போது தமிழரசுக் கட்சி எதிர்த்து வாக்களித்ததைத் தொடர்ந்து அரசாங்கம் பதவி விலகியது.

ல.ச.ச.க. கம்யூனிஸ்ட் கட்சி என்பவற்றுடன் சேர்ந்து ஸ்ரீல.சு.க. ஆட்சியமைப்பதற்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்து மகாதேசாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்ட போதும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1960 யூலை தேர்தலுக்கு வழிவகுத்தது. தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க. வெற்றி பெற்றதும், உடன்பட்ட விடயங்களை அமுல் நடாத்துவதற்கான பேச்சுவார்த்தை பிரதமர் சிறிமாவின் தலைமையில் நடந்தது. இப்பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கும் போதே எவ்வித முன்னறிவிப்புமின்றி சிங்களம் நாடு முழுவதும் நீதிமன்ற மொழியாக்குவதற்கான சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையிலான உறவு முறிவடைந்தது. இது தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாற்று சம்பவங்களில் ஒன்றாக சேர்ந்து கொண்டது.

அது மட்டுமன்றி 1961ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதும் தனிச்சிங்களச் சட்டம் பூரணமாக அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து த.க.வினால் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்கள் இராணுவம் கொண்டு அடக்கப்பட்டதுடன், அவசரகால சட்டம் போடப்பட்டு ஊரடங்குச் சட்டம் என்பவை பிறப்பிக்கப்பட்டது. பலர் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர்.

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் (1964-10-30) கொண்டு வரப்பட்டு இந்திய வம்சாவழி மக்கள் பலாத்காரமாக நாடு கடத்தப்பட்டனர். அதே வேளை அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு ஏரிக்கரைப் பத்திரிகை மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது தமிழரசுக்கட்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதனை எதிர்த்து வாக்களித்ததைத் தொடர்ந்து அரசாங்கம் பதவி கவிழ்ந்தது.

## டட்லி செல்வா ஒப்பந்தம்

1965 தேர்தலுக்கான ஆயத்தங்கள் நடந்தன. ஸ்ரீ.ல.சு.க. வை தோற்கடிப்பதற்காக டட்லி செல்வநாயகத்துடன் ஒரு இரகசிய உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டார்.


டி.எஸ்.சேனநாயக்க

இவ்வுடன்பாட்டை அறிந்த ஸ்ரீ.ல.சு.க. "டட்லி-செல்வா இரகசிய ஒப்பந்தம்" என தேர்தற் பிரச்சாரம் செய்தது. டட்லி, ஒப்பந்தத்திலிருந்து பின்வாங்க முற்பட்டாலும் இறுதியில் தமிழரசுக் கட்சியின் ஆதரவில்லாமல் ஆட்சியமைக்க முடியாத நிலையில் ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் காட்டி ஆதரவு வேண்டியது. டட்லி பதவியேற்பதற்கு முன்தினம் (மார்ச் 24ஆம் திகதி) இவ்வுடன்படிக்கை பகிரங்கமாக கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தம் அடிப்படையில் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை ஒத்திருந்தது என்று சொல்லப்பட்டாலும் கூட இம்முறை தமிழ்மக்களின் உரிமைகள் சில விட்டுக்கொடுக்கப்பட்டன என்றே சொல்லலாம்.

1. மாகாண சபைகளை அமைப்பது, 2.வட-கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழியை அமுலாக்குவது, 3.சிங்களக் குடியேற்றங்களைத் தடுப்பது. என்பன அடிப்படையாக இருந்தது. மொழி குறித்த விடயங்கள் விட்டுக் கொடுக்கப்பட்டதாகவே இருந்தது.

இவ்வொப்பந்தம் பிரிவினைவாதத்தின் முதற்படியென பிரச்சாரம் செய்தனர் எதிர்க் கட்சியினரும் பிக்குமாரும். அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்களே நேரடியாக எதிர்க்கத் தொடங்கியதால் 1968இல் ஒப்பந்தம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மீண்டும் ஏமாற்றப்பட்ட நிலையில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்துக்கு வழங்கி வந்த ஆதரவை வாபஸ் பெற்றது.


டட்லி சேனநாயக்க

இதன் பின்னர் தமிழரசுக் கட்சியின் போராட்ட வீச்சும் கீழிறங்கத் தொடங்கவே மறுபுறம் தீவிர போராட்டத்தை நோக்கி இளைஞர் இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

1970ஆம்ஆண்டு சிறிமா தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்டதும்முதலில் செய்தது தரப்படுத்தல் முறையை அறிமுகப்படுத்தியது தான். அதனைத் தொடர்ந்து 1972ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியலமைப்பின் மூலம் தமிழ் மக்களுக்கு இருந்த பெயரளவுப் பாதுகாப்பு கூட இல்லாது செய்யப்பட்டதுடன் சிங்கள பௌத்த கட்டமைப்புக்கு அரச அந்தஸ்து கொடுக்கப்பட்டது. இதே வேளை தமிழ் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகளும் ஆங்காங்கு தொடங்கின. 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாடு குழப்பப்பட்டு 9 பேர் கொல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1983 இனக்கலவரம்

1977 பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டி ஐ.தே.க ஆட்சியிலமர்ந்ததும் நடந்த 1977 இனக் கலவரம் தமிழ் மக்களை அதிளவு பாதித்த கலவரமாக அமைந்தது. பயங்கரவாதத்தடைச் சட்டம், புலிகள் உட்பட தமிழ் இயக்கங்கள் தடை செய்யப்பட்டது. 1978 இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு தமிழ் மக்களின் உரிமைகள் பலவற்றைப் பறித்தது. 1981 ஆம் ஆண்டு இன்னொரு இனக் கலவரம் நாடெங்கிலும் இடம் பெற்றதில் தமிழ் மக்கள் மீண்டும் அவலங்களை அனுபவித்தார்கள். 1983 இனக்கலவரம் எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். பலர் சகலவற்றையும் இழந்து இந்தியாவுக்கு அகதிகளாகப் போய்ச் சேர்ந்தார்கள். வெலிக்கடையில் 53 தமிழ் அரசியல் கைதிகள் சிங்களக் கைதிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

## இணைப்பு 'சி' திட்டம்

இந்த நிலையில் தான் கூட்டணி-இலங்கை அரசு-இந்திய அரசு என்பவற்றின் இணக்கத்தின் அடிப்படையில் 1983 நவம்பர் 17இல் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் ஐந்து மாத கால பேச்சுவார்த்தையின் பயனாக "இணைப்பு சி" திட்டம் தயாரிக்கப்பட்டது.

இத்திட்டம் அடிப்படையில் மாகாணங்களில் இயங்கும் மாவட்ட சபைகள் கருத்துக் கணிப்பொன்றின் மூலம் இணைந்து பிராந்திய சபை உருவாக்கப்படலாம், முதலமைச்சர் ஜனாதிபதியால் நியமனம், குடியேற்றங்கள் விகிதாசாரப்படி... போன்ற விடயங்கள் அடக்கப்பட்டிருந்தன. இந்த உடன்படிக்கையை தயாரிப்பதிலும் நிர்ப்பந்திப்பதிலும் இந்திய அரசே கூடிய அக்கறை செலுத்தியிருந்தது. ஜே.ஆர்.உடனடியாக உடன்படாவிட்டாலும் வட்டமேசை மாநாட்டில் இதனை பேசுவதாகக் கூறி 1984 ஜனவரி 10இல் வட்டமேசை மாநாட்டை ஆரம்பித்தது.

இணைப்பு-ஏ:முன்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் பத்திரிகை அறிக்கைகள் அடங்கியது. இணைப்பு-பி:நிகழ்ச்சி நிரல், இணைப்பு-சி: தீர்வுகளைக் கொண்டது. மாநாட்டில் இது குறித்து பேச முன்பே எம்.ஈ.பி. அதிலிருந்து வெளியேறியது. பிரதான எதிர்க் கட்சி பெப்ரவரி 6இல் வெளிநடப்பு செய்தது. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஆதரித்த போதிலும் எதிர்ப்பின் மத்தியில் ஜே.ஆர் கூட யையெழுத்திடாத நிலையில் இது கைவிடப்பட்டது. இந்த ஏற்பாடுகள் தமிழ் தரப்பால் முன்வைக்கப்படாத போதும் தமிழ் தரப்பு பரீசிலிக்கத் தாயாராக இருந்தது. அதனை ஏற்கவும் செய்தது. ஆனால் அழைத்த தரப்பே எதிர்த்து நின்றது.

## வட்டமேசை மாநாடு

இந்தியா-இலங்கை ஆகிய அரசுகள் மேற் கொண்ட முயற்சியின் விளைவாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாவது சபைத் திட்டம் ஒன்று வட்ட மேசை மாநாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. 1984 யூலை 23 ஜே.ஆரால் சமர்ப்பிக்கப்பட்ட இத்திட்டத்தின்படி பாராளுமன்றத்தில் 25 மாவட்டங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு இரண்டாவது சபையை அமைப்பது என்றும் இந்த சபைகளுக்கான முதலமைச்சர்களை ஜனாதிபதியே தீர்மானிப்பார் என்றும் இதனுடைய அதிகாரங்களை மாநாட்டில் தீர்மானிக்கலாம் என்றும் பேசப்பட்டது. இத்திட்டத்தையும் மாநாட்டில் கலந்துகொண்ட எதிர்க் கட்சிகள் யாவும் "இது தென்னிந்தியாவின் தலையீட்டை ஏற்படுத்தும் முயற்சி" என்று கூறி நிராகரித்தன. இம் முயற்சியும் கைவிடப்பட்டது.

## 1985 திம்பு மாநாடு

இந்தியாவுக்குச் சென்று கூட்டணியினர் ஒரு புறமும் ஜே.ஆர் மறுபுறமுமாக பேச்சு வார்த்தை நடாத்தியதைத் தொடர்ந்து இந்தியாவின் ஏற்பாட்டின் பேரில் பூட்டான் தலைநகரான திம்புவில் 1985 யூலை 8 அன்று ஐந்து தமிழ் இயக்கங்களும் கூட்டணியும் சேர்ந்து இலங்கை அரசின் பிரதிநிதியாக கலந்து கொண்ட ஜே.ஆரின் சகோதரர் எச்.டபிள்யு. ஜயவர்த்தனாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தினர். அதன்படி


*1987 இலங்கை இந்திய ஒப்பந்தம்*

1.தமிழர்களை ஒரு தனித் தேசிய இனமாக அங்கீகரித்தல்.

2. தமிழ் இனத்தின் தாயகத்தை அங்கீகரித்தல்.

3. தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

4. இலங்கையிலுள்ள தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமை

இக்கோரிக்கைகள் ஜே.ஆரால் நிராகரிக்கப்பட்டன. அத்துடன் இலங்கையில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் படையினரால் கொலை செய்யப்பட்ட சம்பவமும் வெளியானதைத் தொடர்ந்து தமிழ் இயக்கங்கள் வெளிநடப்பு செய்தன. பேச்சு வார்த்தையும் முறிந்தது.

## டில்லிப் பேச்சுவார்த்தை

திம்புப் பேச்சுவார்த்தை முறிவடையாமல் தொடர்வதற்காக இந்தியா தமிழ் அமைப்புகளுடன் தொடர்ந்து பேச முற்பட்ட போதும் அவை அதனை தட்டிக்கழித்தன. இதே வேளை இலங்கை அரசின் பிரதிநிதி எச்.டபிள்யு.ஜயவர்தனா இன்னொரு திட்டத்தை சமர்ப்பித்தார்.

இத்திட்டத்தின்படி வட பகுதியில் ஒரு மாகாண சபை அமைக்கப்படும். ஆனால் கிழக்கில் மாவட்ட சபைகள் அமைக்கப்படும். வட கிழக்கை துண்டாடும், குறைந்த அதிகாரங்களைக் கொண்டதுமான இந்தத் திட்டத்தை போராளி இயக்கங்கள் நிராகரித்தன. அதே வேளை கூட்டணி வடக்கு கிழக்கு மொழிவாரியாக இணைந்த சமஷ்டி வடிவிலான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பிரேமதாச

மாநிலமொன்று உருவாக்குவது தொடர்பான திட்டத்தை டில்லியில் முன்வைத்தது. 1986 ஜனவரி 30இல் இத்திட்டத்தை இலங்கை அரசு முற்றாக நிராகரித்தது.

## சிதம்பரம்-ஜெயவர்தனா யோசனை

1986 ஏப்ரலில் இலங்கை வந்த இந்திய அமைச்சர் சிதம்பரம் நட்வார்சிங் ஆகியோர் ஜனாதிபதியுடனும் கூட்டணியுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியது. இதன்படி இலங்கை அரசால் உருவாக்கப்பட்டு இந்திய அரசிடம் கையளிக்கப்பட்ட திட்டத்தின சாராம்சமாக...

1. இலங்கையின் ஒற்றையாட்சிக்கும் இலங்கையின் அரசியலமைப்பு வடிவத்தக்கு உட்பட்டதாக அதிகாரப் பரவலாக்கம்.

2. வடக்கு கிழக்கு பரஸ்பரம் அக்கறையுள்ள விடயங்களில் இணைந்து செயற்படுவதற்குரிய அமைப்பு ரீதியான ஏற்பாடுகள். (இதன் உள்ளர்த்தம் வடக்கு கிழக்கு இணைப்பு இருக்காது)

இத்திட்டம் குறித்த பேச்சுவார்த்தை இழுபறிப்பட்டு இணக்கம் ஏற்படாத நிலையில் இறுதியில் கைவிடப்பட்டது.

## பெங்களூர் பேச்சுவார்த்தை

1986 நவம்பரில் பெங்களூரில் நடத்தப்பட்ட சார்க் மாநாட்டிற்கு சென்றிருந்த வேளை ஜே.ஆர் ராஜிவுக்கிடையில் நடந்த பேச்சுவார்த்தையின் போது இலங்கை அரசு முன்வைத்திருந்த மாற்று யோசனைகளின்படி கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாணங்களாகப் பிரிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டது. இவ் யோசனை இணக்கம் கான்பதற்காக பிரபாகரனை அழைத்து எம்.ஜீ.ஆருடனும் ராஜிவுடன் ஜே.ஆரும் பேசிய போதும் (குறிப்பாக வடக்கு கிழக்கு துண்டாடல்) இதில் இணக்கம் காணப்படாத நிலையில் இம் முயற்சி தோல்வியடைந்தது.

## இலங்கை-இந்திய ஒப்பந்தம்

இலங்கை அமெரிக்காவுடனான உறவை பலப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்தியாவின் கவனத்தை அதிகரித்தது. இலங்கையின் மீது சட்டரீதியான கட்டுப்பாடுகளை விதிக்க தமிழ்த் தேசியப் போராட்டத்தையும் இயக்கங்களையும் பயன்படுத்த விளைந்தது. 1987 மே 26 இல் "ஒப்பரேஷன் லிபரேஷன்" எனும் வடமராட்சித் தாக்குதலையும் பொருளாதாரத் தடையையும் விதிக்கத் தொடங்கிய போது தமிழ் பிரதேசங்களில் யுத்த விமானங்களின் மூலம் உணவுப் பொருட்களைப் போட்டு இலங்கை அரசை எச்சரிக்கை செய்ததோடு இலங்கை அரசு இந்திய அரசிடம் அடிபணிய நேரிட்டது. இதன் விளைவு இனப் பிரச்சினையை தீர்க்கத்தான் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்டது. இந்தியாவைப் பொறத்தளவில் இலங்கை அரசிடமிருந்து அமெரிக்கா கால் பதிக்காத வண்ணம் இவ்வொப்பந்தத்தின் மூலம் இலங்கை அரசிடமிருந்து கையெழுத்தில் உத்தரவாதம் வாங்கிக் கொண்டதன் மூலம் அதன் நோக்கத்தை நிறைவேற்றியது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தளவில் தென்னிலங்கையில் ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்க

www.tamilarangam.net

அவகாசத்தையும் வடக்கில் தமிழ் இயக்கங்களை சரணடையச் செய்வதிலும் வெற்றி கண்டது. தமிழ் இயக்கங்களைப் பொறுத்தளவில் இவ்விரு அரசுகளினதும் தலைமையிலிருந்த நபர்களை நம்பி ஆயுதங்களைக் களைந்து சரணாகதியானது. மாகாண சபையையும் ஏற்றுக் கொண்டது. தாம் ஏமாற்றப்பட்டமையை மாகாணசபை அனுபவமும் இந்திய இலங்கை அரசுகளின் நடவடிக்கைகளின் மூலமும் காலங்கடந்தே உணர்ந்தன. புலிகள் இயக்கம் இவ்வியக்கங்கள் மீது மேற்கொண்ட தடை, வேட்டையாடல் என்பன அவர்களை அரசின் விசுவாசிகளாகவும் பின் புலி எதிர்ப்பாளர்களாகவும் மாறி இறுதியில் போராட்டத்தையே விற்றுப்பிழைக்கும் துரோகமிழைக்கும் கும்பல்களாகிப் போனார்கள்.

மொத்தத்தில் இந்திய-இலங்கை அரசுகள் வெற்றி கண்டன. தமிழ் இயக்கங்கள் மண் கவ்வின.

## பிரேமதாச-புலிகள் பேச்சுவார்த்தை

இந்திய-இலங்கை உடன்படிக்கையின் மூலம் இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினரை, தான் ஆட்சிக்கு வந்தால் விரட்டி விடுவதாகக் கூறி ஆட்சிக்கமர்ந்த பிரேமதாசா, வடக்கில் இருந்த படையினரை தென்னிலங்கைக்கு திசை திருப்பி ஜே.வி.பி.யினரையும் அழித்துவிடக் கூடிய வகையில் போடப்பட்ட திட்டம் தான் புலிகள் -பிரேமதாசா பேச்சுவார்த்தை. பிரேமதாச எதிர்பார்த்தபடி இந்தியாவை ஆத்திரமூட்ட புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடாத்தி, அந்தக் காலப்பகுதிக்குள் படையினரை தென்னிலங்கக்கு வரவழைத்து ஜே.வி.பி.யினரை வேட்டையாடிக் கொன்றொழித்தது. இந்திய படையினரை விரட்டியது. இந்தியப்படையை எதிர்க்கவென பிரேமதாச, புலிகளுக்கு ஆயுதம் பணம் என்பவற்றையும் வழங்கினார்.



*பிரேமதாச-புலிகள் பேச்சுவார்த்தை*

பிரேமதாசவுடனான பேச்சுவார்த்தையின் போது முக்கியமாக இந்தியப் படையினரை வெளியேற்றுவது, வடகிழக்கு மாகாண சபை கலைக்கப்படுவது, 6வது திருத்தச் சட்டத்தை நீக்குவது என்பவை முக்கிய கோரிக்கைகளாக இருந்தன. ஆனாலும் இக்காலப்பகுதிக்குள் புலிகள் தங்களை பலப்படுத்திக் கொள்ள சிறந்த அவகாசத்தையும் இந்தியப் படையினரை அனுப்புவதிலும் வெற்றி கண்டது. பிரேமதாசவின் நோக்கமும் நிறைவேறியது. மற்றும்படி மாகாணசபை, 6வது திருத்தச் சட்டம் எல்லாமே ஒரு எதிர்பார்ப்பின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே இரு தரப்பினரதும் நோக்கங்கள் நிறைவேறியதும் பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன புலிகள் ஆயுதத்தை கீழே போடும்வரை மாகாண சபை தேர்தல் நடக்காது என்று மிரட்டினார். இந்த 14 மாத கால பேச்சுவார்த்தை இறுதியில் 1990 மே 7 படையினரின் ஷெல் தாக்குதலினால் 12 மாணவிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து படையினருக்கும் புலிகளுக்குமிடையில் சண்டை மூண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


டி.பி.விஜேதுங்க

இந்தப் பேச்சுவார்த்தையைப் பொறுத்தளவில் அடிப்படையில் பிரேமதாச அரசாங்கம் கூட தனது நலன்களுக்காகவே இப்பேச்சுவார்த்தையைப் பயன்படுத்தியது.

## தெரிவுக்குழு

பிரேமதாசவினால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இதனை அமைப்பதற்கான யோசனையைக் கொண்டு வந்திருந்த ஸ்ரீ.ல.சு.க. உறுப்பினர் மங்கள முனசிங்கவே இதன் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய தமிழ் இயக்கங்கள் கலந்து கொண்ட இக்குழுவின் யோசனகளை எதிர்க்கட்சியும், ஏனைய சிங்கள அமைப்புகளும் பலமாக எதிர்த்து வந்ததினால், இது இரண்டு வருடங்கள் இழுதடிக்கப்பட்ட நிலையில் தமிழ் அமைப்புக்கள் ஒவ்வொன்றாக வெளியேறின. இறுதியில் இவ்வமைப்பு செயலிழந்து போனது தான் மிச்சம்.

## புலிகள் – பொ.ஐ.மு பேச்சுவார்த்தை

பிரேமதாச 1993 மே தினத்தன்று கொல்லப்பட்டதன் பின் பதவியேற்ற டி.பி.விஜேதுங்க தமிழ் மக்களுக்கெதிரான சிங்களப் பேரினவாத பிரச்சாரங்களை செய்து வந்தார். இது 1994 பொதுத் தேர்தலின் போது சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு.வுக்கு சாதகமானவற்றில் ஒன்றாக மாறியது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, பேச்சுவார்த்தை, சமாதானம் என்ற கோஷங்களுடன் பதவியிலமர்ந்த பொ.ஐ.மு புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையை தொடக்கியது. இப் பேச்சுவார்த்தையின் போது முக்கியமாக அத்தியாவசியப் பிரச்சினைகள் அரசியல் பிரச்சினைகள் என்ற இரு கட்டங்கள் என்ற வகையில் அமைந்திருந்தது. இது நடந்து கொண்டிருக்கும் போதே அரசு யுத்தத்திற்கான படை சேர்ப்பு, தளபாடக் கொள்வனவு என்பவற்றைச் செய்ததுடன், உறுதி கூறியபடி பொருளாதாரத் தடைகளை முற்றாக நீக்காமல் போக்குக் காட்டியது. அரசின் இந்த அணுகு முறை குறித்து எச்சரிக்கை செய்திருந்தும் சந்திரிகா அரசாங்கம் அலட்சியமாக இருந்ததைத் தொடர்ந்து இப்பேச்சுவார்த்தையும் முறிந்தது. 1995 ஏப்ரல் 24ஆம் திகதி 3வது ஈழ யுத்தம் ஆரம்பமானது.


1998இல் சுதந்திரப் பொன்விழாவில் இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் உடன் சந்திரிகா

ஒட்டுமொத்தத்தில் நியாயமான உரிமைகளை வழங்குவது என்ற நோக்கிலல்லாமல் தமது நலன்களுக்காக மாத்திரமே பேச்சுவார்த்தை, தீர்வு முயற்சி, உடன்படிக்கை (அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இதுவரையான கிழித்தெறியப்பட்ட-தோல்வுறச்செய்யப்பட்ட-ஏமாற்றப்பட்ட உடன்படிக்கைகள்..பேச்சுவார்த்தைகள் தீர்வுகள்...**

| காலம் | உடன்படிக்கை | பிரதான கோரிக்கை-யோசனை | முறித்தவர்கள் | முறிவுக்கான காரணம் | விளைவு |
|---|---|---|---|---|---|
| 1. 1918 | சேர் பொன். இரா-ஜேம்ஸ்.பீரிஸ்.. | மேல்மாகாணத்தில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் | இலங்கை தேசிய காங்கிரஸ் | கையெழுத்தில் தந்த ஒப்பந்தத்தை மறுத்தல் | தமிழர் மகாசபை உருவாக்கம் |
| 2. 1925 | தமிழ்-சிங்கள ஒப்பந்தம் | 1.தமிழர் பிரதிநிதித்துவம், 2.இ. தே.கா.வின் யாப்பு | இலங்கை தேசிய காங்கிரஸ் | இ.தே.கா.வின் நிறைவேற்றுக்கு நிராகரிப்பு | தேசிய அரசியலிலிருந்து தமிழர்கள் தனித்தல் |
| 3. 1957 | பண்டா - செல்வா | மொழியுரிமை,குடியேற்ற நிறுத்தம், அதிகார அலகு | பண்டா அரசாங்கம் | ஜே.ஆர்.கண்டி யாத்திரை, பிக்குமாரின் எதிர்ப்பு | சாத்வீக எதிர்ப்பு-58 கலவரத்தை நோக்கி... |
| 4. 1960 | த.க-ஸ்ரீ.ல.சு.க. | பண்டா செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் | சிறிமா அரசாங்கம் | ஒப்பந்த மீறல்-தனிச்சிங்களம் அமுல் | சத்தியாக்கிரகம், தமிழ் அரசியல் தீவிரம் |
| 5. 1965 | டட்லி -செல்வா | 'பண்டா-செல்வா'வின் அடிப்படையில் | டட்லி அரசாங்கம் | அரசாங்கத்தினரதும், பிக்குமாரினதும் எதிர்ப்பு | போராளி இயக்கங்களின் தோற்றம் |
| 6. 1983 | இணைப்பு 'சி' திட்டம் | பிராந்திய அதிகார அலகு | ஜே.ஆர்.அரசாங்கம் | வட-கிழக்கு இணைப்புக்கு ஜே.ஆர். எதிர்ப்பு | வட்ட மேசை மாநாட்டுக்கு இட்டுச் சென்றது. |
| 7. 1984 | வட்டமேசை மாநாடு | 'இரண்டாவது சபை'த் திட்டம் | கூட்டணியின் எதிர்ப்பு | அதிகாரம் மத்தியில் , வடக்கில் அடக்குமுறை | இயக்கங்களின் எதிர் நடவடிக்கைகள் |
| 8. 1985 | திம்புப் பேச்சுவார்த்தை | தேசிய இனம், தாயகம், சுயநிர்ணயம், குடியுரிமை | ஜே.ஆர்-இயக்கங்கள் | ஜே.ஆர்.எதிர்ப்பு-சமகாலத்தில் தமிழர் படுகொலை | யாழ் போராளிகளின் வசம் |
| 9. 1985 | புதுடில்லி யோசனை | வடக்கில் மாகாணம், கிழக்கில் மாட்ட சபை | தமிழ் தலைமைகள் | அதிகாரம் குறைந்த அலகு திணிப்பு | நிலமை தொடர்தல் |
| 10. 1986 | சிதம்பரம்-ஜெயவர்தனா முயற்சி | ஒற்றையாட்சிக்குள் அதிகார அலகு | தமிழ் தலைமைகள் | இழுபறியின் முடிவில் பேச்சு முறிவு | |
| 11. 1986 | பெங்களூர் பேச்சுவார்த்தை | வடகிழக்கில் 3 மாவட்ட அலகுகள் | தமிழ் இயக்கங்கள்-மறுப்பு | வட கிழக்கு துண்டாடல், அதிகாரக் குறைப்பு | |
| 12. 1987 | இலங்கை-இந்திய ஒப்பந்தம் | மாகாண சபை | பிரேமதாச அரசாங்கம் | இலங்கை-இந்திய அரசுகளின் திணிப்பு | புலிகள் தவிர இயக்கங்கள் நிராயுதபாணிகளாக்கப்படல் |
| 13. 1990 | அரசு-புலிகள் பேச்சுவார்த்தை | ஐ.பி.கே.எப் வெளியேற்றம், 6ஆம் திருத்தச் சட்டம் நீக்கம், படை குறைப்பு | படை-புலிகள் | நம்பிக்கையீனம் | 2வது ஈழ யுத்தம் ஆரம்பம். |
| 14. 1992 | தெரிவுக்குழு | இந்திய மாதிரி அலகு | சிங்களக் கட்சிகள் | ஆளுங்கட்சி-எதிர்க்கட்சிகள் இழுபறி | தொடர்ந்து யுத்தம் |
| 15. 1995 | அரசு-புலிகள் பேச்சுவார்த்தை | அடிப்படைப்பிரச்சினை, அரசியல் பிரச்சினை | அரசு | கோரிக்கைகள் இழுத்தடிப்பு, மறைமுக யுத்த தயாரிப்பு | 3வது ஈழயுத்தம் ஆரம்பம் |

திணிப்பு) என்றெல்லாம் பம்மாத்து விடுவதும் அதே சந்தர்ப்பவாத நலன்களுக்காக எதிர்த்தரப்பில் இருக்கும் கட்சி ஆளுங்கட்சி கொண்டுவருவனவற்றையெல்லாம் எதிர்ப்பதும் இன்று சலித்துப்போன ஒன்று. இன்றைய நிலையில் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுவந்துள்ள தமிழ் மக்களின் மீது புறையோடிப்போயுள்ள சந்தேகங்களுக்கும், எச்சரிகைக்கும் நியாயமான காரணங்கள் உண்டு தமது கறை படிந்த கரங்கள் இன்று சுத்தமானவை தான் என்பதை நிரூபிக்கவேண்டிய வேண்டிய தார்மீக பொறுப்பும், கடமையும் அரசுக்கே உள்ளது.

கடந்த கால ஏமாற்றங்கள் ஒன்றும் நபர்களால் ஏமாற்றப்பட்டதல்ல. ஒரு பண்டாரநாயக்கவோ, ஜே.ஆரோ, பிரேமதாசவோ அல்ல இங்கு பிரச்சினை. மாறாக இந்த கட்டமைப்பே. இந்த சிங்கள பௌத்த கட்டமைப்புக்கு எவர் தலைமை தாங்கினாலும் இது தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கப் போகிறது. இதனைக் களைவதே உண்மையில் தீர்வை உண்மையில் நேசிக்கும் சக்திகள் கடக்க வேண்டிய முன்நிபந்தனையான விடயம். வரப்போகும் "சுதந்திர தினத்"திலாவது போதாவது சிங்களப் பௌத்தம் தன்னை மீட்டுப் பார்க்குமா? தமது குறைகளைக் களையெடுக்குமா? அல்லது சிங்கள தமிழ் மக்களின் இடைவெளி மேலும் விரிசலடைய வழிவகுக்குமா என்பதே இன்றைய கேள்வி..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வசந்தம் போனது...

மரங்கள் இலைகளை
துறக்கிற காலமிது
கிளைகள் இலைகளை
விட்டுப் பிரியும் காலமிது -ஏன்
இலைகள்
பச்சையிலிருந்து மஞ்சள்,
மஞ்சயிலிருந்து சிவப்பு
சிவப்பிலிருந்து பழுப்பு - என
மாறும் காலமும் கூட

இலை துறந்து - வெறும்
கருநிற குச்சிகளாய்
வரப் போகும் இருட்காலத்தில்-
சூழல்
சோகமாய் காட்சிதரும்.
பனியும், இருளும்
தனிமை, விரக்தியுடன் ஒருசேர
செத்துத் தொலையத்தான்
தோணும்

வெண்பனி கொட்டப்போகும்
காலம் அதிகமில்லை.
உடல்வரண்டு போகும்
நா வரண்டு போகும் - கூடவே
நானும்...?

தெரியாது...!

இறுதியாக
மனம் விட்டு சிரித்த நாள்
நினைவிலில்லை

இரவு பன்னிரண்டரை
வேலை களைப்பில்
நெடுந்தூர நடையில்
கால்களுக்கு மேல்
வலதும் இடதும்
சாய்ந்து சாய்ந்து
தாவித் தாவி பனிக்குளிரில் நான்.
பின் தொடர்ந்த பெரிய வட்டநிலா
இப்போது
இராட்சத மலைகளுக்கு மேல்
பைன் மரங்களின் நடுவில் இருந்து
எட்டிப்பார்த்தது

நிலவு நமக்கு ஊட்டிய
கதைகள்
எங்கு இவர்களுக்கு
புரியப்போகிறது.
இந் நிலவு பேசும் மொழி-மேலும்
இம்சைப்படுத்தியது

வாயினால் மூச்சிழுத்தபடி
மீசை முடிகளில் - குளிர்
பனியாக ஒட்டிக்கொண்டிருந்தது.
துயரங்களின் மீதிருந்த
முழு கவனமும்
களைப்பை மூடியிருந்தது...

நடந்தேன் நடந்தேன்...
எட்டிப் பிடித்து விடுவேன்
முடிவை...?

**-சக்கு**

www.tamilarangam.net



# தானா

தானாவை பார்த்தேன்
ஒருவருள் ஒருவர்
பாய்ந்த தருணத்தில்.

கண்டதில்லையா நீங்கள்
தானாவின் மனசுபற்றும் நிர்வாணம்.
அந்தக் கண்ணாடி மேனியில்
என் ஆத்ம முகத்தை அடைந்திருந்தேன்.

துருவத்துப் பனி ஆறு என
அலட்சியம் செய்து விடாதீர்கள்.
தானாவைத் தொடு கணத்தில்
தாடி வெண்மயிர் கறுக்க
எதிர் விதியில் மிதந்தேனே.

நதி காலவெளியில்
இருப்பதை முன்னும்
வாழ்வதைப் பின்னுமாக
அடித்துச் செல்கிறது.

கொம்புகள் உரசிச் சடசடக்கும்
பனிமான்களோடு
முன்நகரும் சறுக்குவண்டி.
அங்கிருந்து காலம் உடைய
நாற்புறமும் பாய்கிறது
ஒரு லாப்பியனின் பாடல்.
நூற்றாண்டு முன்னாடி
துப்பாக்கியும் பைபிளுமாய் வந்து
யேசுவையே மீண்டும்
சிலுவை அறைந்தவர்களால்
கொல்லமுடியாது போன பாடல் அது.
சமிக்ஜை மொழியாக
தொலைந்த சந்ததிகளை
தேடுகிறது அப்பாடல்.
தறிபட்ட கலாச்சாரத்தின் விதை அது.
நதிகளின் ஆழத்திலிருந்து மீழ்கிறது
தலை மறைந்த வாழ்வு

தானாவின் சரளைக் கற் கரைகளில்
என் அகதி மனசு சிந்துகிறது.
எல்லைகள் நூறு தாண்டினாலும்
என்னைச் சூழ எரிகிறதே
யாழ் நூலகம்.
பாலி ஆற்றம் கரைகளில்
பாடும் மீன் வாவியில்
பசும் ஆதிசேடனாகப் படமெடுக்கும்
தேயிலை மலைகளில்
முட்டாக்கு தலை மறைத்து
முழு நிலவு கவிபாடும்
வயல் வெளிகளில்
அலைகிறது எம் முதாதையரின் பாடல்
பூமிப்பந்தின் புழுதியான எம்மை

கூவி அழைத்தபடி

**-வ.ஐ.ச.ஜெயபாலன்**

**லாப்பியன் - நோர்வேயின் வட துருவத்தில் வாழும் 'சாமிஸ்க்' ஆதிவாசிகள். நோர்வேஜியர்கள் இவர்களது மொழி, பாடல்கள், சமய, கலாசாரங்களை அழித்து கிறிஸ்தவ சமயத்தை திணித்தார்கள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீரயடி

எல்லாமே முடிந்து அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள்... தியாகு செய்ய வேண்டிய கடமைகள் முடிந்தவுடன் அவனை தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வீடுவந்திருந்தான் பிரபு. தாய், மரணித்த செய்தி தியாகுவிற்கு சொல்லப்பட்டதும் லண்டனிலிருந்து உடனே பயணித்துவிட்டான் அவன். நான்கு வருடங்களுக்கு முன்பு தன் தந்தையின் மரணத்திற்கு கூட அவனால் செல்ல முடியவில்லை. அப்போது அவனுக்கு பயணிக்க முடியாத சூழ்நிலை இருந்தது. இப்போது தாயின் மரணத்திற்காவது தான் சென்று தன் கடமைகளைச் செய்யவேண்டும் என்று துடித்ததினால் புறப்பட்டுவந்து இறதிக் கடமைகளை முடித்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்திருந்தான்.

மயானத்திலிருந்து அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள்..? ஊரிலுள்ளவர்கள்-உறவினர், நண்பர்கள்... எல்லோரும் வந்து தியாகுவின் வீட்டில் நின்றிருந்த மாமரங்களின் நிழல்களின் கீழ் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்து கொள்கின்றார்கள். அவர்களுக்கு சுடச்சுட கோப்பி, பால்த்தேனீர், சிகரெட், சுருட்டு, பீடி, வெற்றிலைப்பாக்கு போன்றவை கொடுக்கப்படுகின்றன. இரவுச்சாப்பாடுகள் உறவினர் சிலரால் கொண்டுவரப்படுகின்றன. பெரிய வீடு. வீட்டோடு சேர்ந்த விசாலமான முன்பிளெட். எல்லாத் திசைகளிலும் பளீரென்ற மின்சார ஒளி. தியாகு நான் சாகிறதுக்கிடையில பெரிய வீடு ஒன்று கட்டிவிட்டுத்தான் சாவேன்" என்று அப்பா சொன்னது நினைவுக்கு வந்தது..

அப்பிடிப்பார்க்கும்போது அப்பாவின் ஆசை நிறைவேற்றப்பட்டிருக்கின்றதென்று தியாகு எண்ணிக்கொண்டான்

பல வருடங்களுக்குப் பின்பு பார்க்கும் முகங்கள். எல்லாம் தியாகுவிற்கு பரீட்சயமான முகங்களாகவே தெரிந்தன. சிலரைப் பார்த்ததும் அடையாளம் கண்டுகொண்டான். பலர் தங்களைத் தாங்களாகவே வந்து அறிமுகம் செய்து கொண்ட பின்பே அவனால் ஊகிக்க முடிந்தது. ஒன்று இரண்டு வருடங்களா? பதினேழு வருடங்களுக்குப் பின்பு அல்லவா அவனால் பிறந்த மண்ணை மிதிக்க முடிந்தது.

மரண வீட்டுக்கு வந்த பலபேர், தியாகுவைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே வந்தவர்கள். அவர்கள் எல்லாம் அவனைச் சந்தித்து விடைபெற்றபோது தியாகு மிகவும்வருந்தினான். அந்த நேரத்தில் அவனுக்கு ஒரு ஜெர்மனிய பழமொழி நினைவுக்கு வந்தது. "பகிர்ந்து கொள்ளப்படும் இன்பம் இரட்டிப்பாகின்றது., பகிர்ந்துகொள்ளப்படும் துன்பம் பாதி குறைகின்றது." இதில் அவன் எதை எடுத்துக்கொள்வது? ஊரவர், உறவுகளைக் கண்ட இன்பத்தையா? அல்லது தாயை இழந்து நிற்கும் துன்பத்தையா?

நிலை தடுமாறி நின்று கொண்டு, தன்னிடம் வந்து விடைபெற்றுச் செல்பவர்களை வாசல் வரை வந்து வழியனுப்பிக்கொண்டிருந்தான். விநாயகபுரத்து பிரதானவீதியில் முதலாவது வீடு. பெரிய வளவு. தென்னை மரங்களும், மாமரங்களும் நிறைந்த விசாலமான வளவு.

இருபது வருடங்களுக்கு முன்பு, இளம்பிள்ளைத் தென்னைகளாக இருந்தவையெல்லாம், நெடிந்துயர்ந்து குலைகாட்டி அழகாகக் காட்சியளித்தன. தியாகு ஆசையோடு அக்கரைப்பற்று சந்தையில் வாங்கிக்கொண்டு வந்து நட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒட்டுமாமரங்கள், கறுத்தகொழும்பானும், பிலாட்டும் நன்றாக கிளைவிட்டு, பரந்து கிடந்தன. மெயின் றோட்டுக்கு எதிரேயிருந்த சின்னத்தோட்டம், அங்கே இருந்த பங்களா, ஒன்றுமே இப்போது அங்கே இல்லை. தியாகுவின் அப்பாவின் கடை. கடைக்குமுன் வீதியோரம் நின்றிருந்த வீரமரம் எதுவுமே இப்போது இல்லை. தியாகுவின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தபொழுது..

கையில் கோப்பிக் கிண்ணத்துடன் வந்தான் பிரபு. பிரபு, தியாகுவின் பள்ளித்தோழன். அவ்வப்போது ஊரைப்பற்றி தியாகுவிற்கு கடிதம் எழுதுபவன். "என்ன தியாகு உனக்கு எல்லாம் ஆச்சரியமாக இருக்கின்றதா? எல்லாம் மாறிப் போச்சுடா. காலம் காலமாக நாம வாழ்ந்த மண் இப்போது கோலம்மாறி போச்சி. சோத்துப்பாட்டுக்கே பெரியபாடாக இருக்கு. புழைப்பு நடத்த சனங்களுக்கு ஒரு வழியுமில்ல."



பிரபு சொல்லிக்கொண்டே, தன் கையிலிருந்த கோப்பிக் கிண்ணத்தை தியாகுவிடம் கொடுத்தான். அதை வாங்கிக்கொண்ட தியாகு, " பிறகு ஏண்டா இப்படி.." என்று கேட்பதற்கு முதலே, பிரபு பதில் சொல்ல முந்திக்கொண்டான்.

"எல்லாம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் கஸ்டமான நிலைதான் காரணம். சொந்த மண்ணிலே சுதந்திரமாக வாழ முடியாதநிலை. வயிற்றுப்பசிக்கு அன்றாடம் தொழில் பார்த்தவர்கள்கூட, அரைவயிறு கஞ்சிக்கே வழியின்றி அவதிப்படுகின்றார்கள். கடற்தொழில் செய்வது கூட கஸ்டம். ஆற்றில் மீன்பிடிப்பதற்கு கட்டுப்பாடு. வேளாண்மை, பயிர்ச்செய்கை எல்லாம் செய்கை பண்ண முடியாத நிலை. ஒரு கடை கண்ணிவைத்து வியாபாரம் பண்ணத்தடை. இப்படி எல்லாமே முடக்கிவைக்கப்பட்டிருக்கும் போது, ஊரில் பசியும், பஞ்சமும் தலைவிரித்ததாடாமல் என்ன செய்யும். ஏதோ உனக்கு நல்ல காலம். உன் தலையெழுத்து நல்லாயிருந்ததால் ஊரைவிட்டுப்போயிட்டாய். நாங்கள் பட்ட, படுகின்ற கஸ்டங்கள் உனக்குத் தெரியாது."

"ச்சே! ச்சே!! அப்படிச் சொல்லாதே பிரபு. தாய், தந்தையையும் தாய் மண்ணையும் விட்டுப் பிரிந்துபோய் அந்நிய மண்ணில் அகதிகளாக வாழ்கின்ற கொடுமையை நான் அனுபவித்தவன். இந்த மண்ணின் வாசத்தையும் புழுதி மணத்தையும், செக்கச் செவேலென்று செம்பருத்தி பூத்திருக்கும் என் வீட்டு முற்றத்தையும் இழந்த குற்ற உணர்வு எனக்கு உண்டு. ஏதோ ஒரு வேகத்தில் தாய் மண்ணைப் பிரிந்துபோனது என்னவோ உண்மைதான். ஆனால் அந்த பிரிவு தந்த துன்பம், துயரம் இருக்கே.. அது மிகக் கொடியது. அதை நான் இந்த பதினேழு வருடங்களாக அனுபவிக்கின்றேன். தாய் நாட்டின் சேதிகள் நாற்தோறும் கேட்டு, கண்கள் குளமாகி நெஞ்சம் தடுமாறி, எப்போ எமக்கு விடியல் வரும் என்று ஏங்கி விம்மி வெதும்பி தூக்கமின்றி துடிதுடித்த இரவுகள் ஏராளம்.."

"தம்பி.. தியாகு.. இங்க வாராசா.. உன்னைப் பார்க்க சோட்டையா இருக்கு..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்வளவு காலம் மனே உன்னைப் பாத்து.." நான் குரல் வந்த திசையை திரும்பிப் பார்த்தேன். தங்கமணி மாமி... வீட்டினுள்ளே நின்று கூப்பிட்டுக் கொண்டிருந்தா. பிரபுவை கூட்டிக்கொண்டு உள்ளே வந்தேன். தங்கமணி மாமியின் அருகில் சென்றதும். அவர் கட்டிப்பிடித்து ஓவென்று ஒப்பாரி வைச்சுட்டா. சற்று நேரத்திற்குப் பின் அது அடங்கியதும்.. அந்த மகராசி இருக்கும் வரைக்கும் அடிக்கடி இந்த வீட்டுக்கு வந்துபோவேன். இனி ஆரு இருக்கா." தங்கமணி மாமி மூக்கைச் சிந்தி அம்மாவின் பாசத்தை, பிரிவை சொல்லச்சொல்ல, இவ்வளவு நேரமும் என்னுள் அடக்கி வைக்கப்பட்டிருந்த துக்கம் தொண்டைவரை வந்து, 'ஓவென்று நானும் அழுதுவிட்டேன்.

"அழுராசா.. நல்லா அழுதிடு.. வாய்விட்டு அழுதிடு... உங்கம்மா உன்னை ஏழு வயசுவரைக்கும் இடுப்பிலே தூக்கிச் சுமந்தவள். வயல் என்றும், வரப்பென்றும் ஆண்வேலையும், பொண்வேலையும் செய்து, உன்ர அப்பனுக்கு துணையா இருந்தவள். நான் இங்க வரும்போதெல்லாம் 'தம்பி கடுதாசி போட்டிருக்கான் மச்சாள். காசி அனுப்பியிருக்கிறான் மச்சாள்' எண்டு சொல்லி சுடச்சுட குடிக்க தேத்தண்ணி தந்து, வாயிலபோட வெத்தில பாக்கும் தந்து அனுப்பும் அந்த சீவன் போயிட்டாளே... இனி நானெல்லாம் எதுக்கு கிடந்து கஸ்டப்படணும்.. என்ர ஆசை மச்சாள் என்னையும் கூட்டிக்கோடீ.." என்று அம்மாவின் மேல் தான் வைத்திருந்த பாசத்தை வெளிப்படுத்தியபோது என் மனம் கனத்தக்கொண்டது. ஒரு நிமிட நேர நிசப்தம் நிலவியது. "தியாகு! நான் புறப்படுறன் ஆறு மணிக்கு மேல சென்றிப் பொயிண்டைத் தாண்டிப்போக விடமாட்டாங்கள் அவங்கள். பிரயாணத்தால் வந்த உடல் களைப்பு அத்தோடு மனக்களைப்பு என்று சோர்ந்து போயிட்டாய். படுத்து கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொள். நான் காலையில வந்திடுறன்" என்று என் காதோரம் சொன்னான் பிரபு. நான் அவனை வழியனுப்பிவிட்டு ஹோலுக்குள் வந்தபோது மருமகள் மலர்விழி சொன்னாள் "மாமா உங்களுக்கு சாமி அறைக்குள் சுடுக்கை போட்டிருக்கு. சாப்பிட்டுட்டு தூங்கிடுங்க" என்று. "இல்ல.. எனக்கு ஒண்ணும் வேண்டாம். சரி நான் பாத்திக்கிறன்." என்று அவளை அனுப்பி விட்டு சாமி அறைக்குள் நுழைந்தேன் அப்பாவின் நிழற்படம் சாமிபடங்களுடன் சேர்ந்திருந்தது. அதற்கு சந்தணமாலை அணிவிக்கப்பட்டிருந்தது. மண்டியிட்டு வணங்கிவிட்டு படுக்கையில் சாய்ந்தேன். தூக்கம் வரவில்லை. நெஞ்சு நிறை துக்கம் இருந்தது.

அப்பாவின் கம்பீரமான உருவம், அகன்ற நெற்றி, அள்ளிப்பூசிய விபூதி, கபடமில்லாத சிரிப்பு, அத்தனையும் என் கண்முன் நிழலாட, அம்மாவின் ஆவி சுற்றிச்சுற்றி வந்து என்னை தழுவிக்கொள்வதைப் போல் ஒரு பிரமை. எந்தவித பிரக்ஞையுமில்லாமல் கண்களை மூடிக்கொண்டேன்... அப்பாவும் அம்மாவும் அன்பாக வாழ்ந்தவர்கள். நான் அறிந்தவகையில் அவர்கள் ஒரு போதும் ஒரு பிரச்சினையும் பட்டதில்லை. மனத்தாங்கல் கூட ஏற்பட்டதில்லை. ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்துகொண்டு அன்பாக வாழ்க்கை நடத்தினார்கள். ஒருவரைவிட்டு ஒருவர் ஒரு நாள் கூட பிரிந்திருந்ததில்லை. அவ்வளவு அந்நியோன்யம் அவர்களுக்கிடையே இருந்தது. வயல் விதைப்பு, அறுவடை, சூடுமிதிப்பு என்று எல்லா வேலைகளிலும் அம்மா, அப்பாவுடன் இணைந்தே இருந்தா.

விநாயகபுரத்து வீரயடிக்கடை என்றால் பக்கத்து ஊர்க்காரர்களுக்கும் தெரியும். அதிகாலை நான்கு மணிக்கே அம்மா எழுந்து கடைவாசல் பெருக்கிவிட்டு கைகால் அலம்பி சாமி கும்பிட்டுவிட்டுவந்து பொயிலருக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கரிபோட்டு தண்ணியை சூடாக்கி விட்டு அப்பாவை எழுப்பிவிடுவா.

"இஞ்சாருங்கோ! எழும்பயில்லையே.. இக்கணம் பால்க்காரக் கந்தண்ணர் வந்து கூப்பிடப்போறார்... எழும்பயில்லயே..."

"ம்ம்..ம்.. நான் முழிச்சிட்டுத்தான் படுத்திருக்கிறன்." என்று அப்பா எழுந்து கொள்வார்.

"நீயென்ன நேரத்தோட எழும்பிட்டியாக்கும்" அப்பா கேட்பார்.

"இரவு முழுக்க நான் கண்ணோட கண் மூடவே இல்ல. இவன் தம்பி படுக்கிற அறைக்குள்ள சரியான நுளம்பு. அவன் யன்னலைத் திறந்து போட்டு படுத்திட்டான் நல்லா கடிச்சித் தின்றிருக்குமே."

"ஓமெண்ணுறன். பிறகு நான் உரிமட்டை பற்றவைச்சு அதில வேப்பமிலைகளைப் போட்டு புகைச்சு அறை முழுக்க பிடிச்சபிறகுதான் நுளம்புகளும் கலைஞ்சது. தம்பியும் அதுக்குப் பிறகுதான் படுத்தான்."

"இரவு காத்தே இல்ல. ஒரு கொத்துக்குழைகூட உசும்பயில்ல. காத்திருந்தா நுளம்பு காலைஞ்சு போயிருக்கும்"எ ன்று சொல்லிக்கொண்டே முகம் கழுவி, சாமி கும்பிட்டு கடைதிறக்கும் அலுவலில் இறங்குவார். வீட்டோட கடையும் அமைந்திருந்ததால், கடையிலிருந்து வரும் சாம்பிராணி புகை வாசமும் ஊதுபத்தி மணமும் நித்தரையில் இருக்கும் எனக்கு இதமாக இருக்கும்.

இடைக்கிடையே அப்பாவின் பேச்சுக்குரல் கேட்கும்.

"வா... வா... குஞ்சித்தம்பி. என்ன விதைச்சுப்போட்டியோ?"

"அத என்னத்தக் கேக்கிற ராசண்ணே... முதல்ல காப்போத்தல் பால் தாங்கோவன்"

"சரி.. சரி இந்த சுடச்சுடக் குடிராப்பா.. உன்ர விதைப்பாடு எப்படிப் போச்சு..."

"இண்டைக்கு எண்டிருந்தது. அதுவும் முடியல. அடைமழை புடிச்சு தெண்டால் ஒண்ணும் பண்ண முடியாது. எப்படியும் பத்துமணிக்கு மேலதான் மெசின் எவரும்" ஏண்டாம்பி. நீ கணபதியண்ணன்ட மெசினுக்குத்தானே காசகட்டினதாச் சொன்னாய். அந்தாள் கண்டபடி நிறையப்பேரிட்ட காசுவாங்கிப் போட்டு இண்டைக்கு நாளைக்கு எண்டு சொல்லுற மனிசனில்லையே... நானும் அவர்ர மெசினத்தான் அஞ்சி வருசமா புடிச்சு வயல்வேலை பாக்கிறன்."

"ஓமண்ணே அவர் நல்ல மனிசன்தான். என்ர போதாத காலம் நேற்று விதைச்சுக்கொண்டிருந்த மெசின்ர " அச்சல்" உடைஞ்சு போட்டுதாம். அதை இனி அக்கறைப்பற்றுக்கு கொண்டுபோய் வால்டிங்பண்ணிக்கொண்டு வர நேரமாயிடும். அதுதான் நான் கொஞ்சம் வெள்ளண்ணேயே பூமிக்குள் போனால் வக்கடையள வெட்டிக்கிட்டி ஆயத்தபடுத்திறநேரம் மெசினும் வந்திடும்.

"இந்த கிழமைக்குள்ள விதைச்சு முடிச்சிரவேணுமெண்டு வட்டானை சொல்லிப் போட்டார்."

"ஓம் ஓம் பிறகு முந்தி விதைச்சவன்ர வயலுக்குள்ள முளைகிளம்பினா அவன்ர வயலுக்குள்ளால மெசின்கொண்டுபோக விடமாட்டானுகள். எனக்கு றோட்டோரப் பூமி என்றபடியால் இந்தப் பிரச்சினையே கிடையாது..." என்று சொல்லுவார் அப்பா. அப்பாவுக்கு றோட்டோரப் பூமி என்று சொல்லிக்கொள்வதில் மிகப்பெரிய சந்தோசம் இருந்தது. மெயின்றோட்டைவிட்டு இறங்கிகால் வைப்பது அவர் தனது வயலுக்குள்தான். தான் வாலிப வயதில் காடுவளைந்து வெட்டி, பிறகு நாட்டுக்கட்டை, வேர் பிடுங்கி காணியாக்கிய கதைகளை மிக சுவாரஸ்யமாகச் சொல்லுவார்.

தண்ணிபாய்ச்சும் போதோ அல்லது உரம் எறியும் போதோ அப்பாவுக்குத் துணையாக நான் போவதுண்டு. அம்மா மத்தியானம் சோறு சமைச்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பனையோலைப் பெட்டியில் சுடச்சுடப்போட்டு இறுக்கிக்கொண்டு கீரிமீன்கருவாட்டோடு உருளைக்கிழங்கும் போட்டு குளம்பு வைச்சி மரவள்ளிக் கிழங்கும் தக்காளியும் போட்டு சொதி வைத்தெடுத்து, தபால் பஸ்சில் வந்து இறங்குவா. அம்மாவை கண்டதும் உரம் அள்ளிக்கொடுத்துக்கொண்டிருந்தாலும், அதை அப்பிடியே வரம்பில் வைத்துவிட்டு ஓடிக்சென்று சோற்றுப்பெட்டியை தூக்கிக்கொண்டு வந்து, வயலின் நடுவில் நின்ற வேப்பமரநிழலில் வைத்துவிட்டு, அப்பிடியே வயலின் மத்தியில் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றில் கைகால் கழுவி வந்து அம்மா பரிமாற அப்பாவுடன் அமர்ந்து சாப்பிடும் போது ஏற்படும் சந்தோசம் இருக்கே.. அதைச் சொல்ல வார்த்தைகளே இல்லை. மகா அற்புதமான அனுபவங்கள்...

அதிகாலை வேளையில் அப்பாவின் கடையில் ஒரே சத்தமும் சந்தடியுமாக இருக்கும். ஆனேகமான ட்ராக்டர்கள், வண்டில்கள் எல்லாம் அவரின் கடையில் வந்து நின்று அப்பம் இடியப்பம் சாப்பிட்டு, பால், தேத்தண்ணி குடித்து, பீடி, சுருட்டு, வெத்திலை பாக்கு வாங்கி வயல்கட்டுக்கு போய்க்கொண்டே இருப்பார்கள்.

விடிந்தவுடன் வேறு ஒரு சுறுசுறுப்பு வீரயடிக்கடையில் உருவாகும். அக்கரைப்பற்றிலிருந்து முஸ்லிம் மீன் வியாபாரிகளெல்லாம் சைக்கிளில் பெட்டிக்கட்டிக் கொண்டும், கார்களைவாடகைக்கு அமர்த்திக்கொண்டும் வந்து சேர்ந்து விடுவார்கள். கோரைக்களப்பு ஆற்றில் பிடிக்கும் இறால், மீன், நண்டு என்றால் ஏகப்பட்ட கிராக்கி. எல்லாம் மொத்தமாக வாங்கிக்கொண்டு போவது இந்த வியாபாரிகளின் வழக்கம். இனி வீட்டுத் தோட்டம் செய்பவர்கள் கொண்டுவரும் காய்கறிகள், வெடிக்காரத் தம்பியர் சுட்டுக்கொண்டுவரும் மான் இறைச்சி அல்லது மரை இறைச்சி, குறவர் வாடியிலிருந்து வரும் காட்டுப்பன்றி, உடும்பு போன்ற இறைச்சி வகை, இனி கோமாரித்தேன், கஞ்சிகுடிச்சாறு, கருவாடு என்று பொருட்கள் வந்து சங்கமமாகும் இடம்தான் அப்பாவின் வீரயடிக்கடை. காலையில் அம்மா கடையைப் பொறுப்பேற்றவுடன் அப்பா தனது கொமிசன் வியாபாரத்தில் இறங்கிவிடுவார். ஊரிலுள்ள குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு முற்பணம் கொடுத்து வைத்திருப்பார். அவர்களிடம் இருந்து வாங்கி அப்படியே முஸ்லிம் வியாபாரிகளுக்கு கைமாறிவிடுவார். அனைத்து வியாபாரிகளும் ராசண்ணன் என்று அவரில் மரியாதையும் மதிப்பும் வைத்திருந்தார்கள்.

அவ்வளவு பிரபல்யமான அந்த வீரயடிக்கடை, நான் இன்று காலையில் வந்து இறங்கிய போது இருந்தஇடம், அடையாளம் எதுவுமே தெரியவில்லை. வீரமரமும் இல்லை அங்கு கடையுமில்லை.

போரின் அனர்த்தத்தினால், அவர்கள் எரித்துச் சாம்பலாக்கிவிட்டார்களாம். அந்த அதிர்ச்சி தாங்காமல் தான் அப்பா படுக்கையில் விழுந்து, பின்பு உயிரை விட்டவர். இப்போது என் அம்மா...

அப்பாவின் மூச்சு இருக்கும்வரைக்கும், அம்மா உறுதியாக இருந்தா. அவருக்குப் பிறகு அவ மிகவும் உடைஞ்சுபோய் இன்று எல்லோரையும் விட்டுச் சென்று அப்பாவுடன் சேர்ந்துகொண்டார்.

இப்போது நான் அவர்கள் இருவரையும் ஒன்றாகவே பாக்கிறேன். என்னைச் சுற்றுச் சுற்றி வந்த அம்மாவின் ஆவியுடன், இப்போது அப்பாவும் சேர்ந்துகொண்டார். இருவரும் என் முகவாயை பிடித்து, தொட்டுக் கொஞ்சுவது போல் ஒரு பிரமை எனக்கு...

"மாமா! மாமா! எழும்புங்கோ.. எழும்பி வாயலம்பிட்டு கோப்பி குடியுங்கோ" என்று மருமகள் மலர்விழி எழுப்பும் சத்தம் கேட்டுத்தான் கண்விழித்துக்கொண்டேன். அத்தோடு அம்மாவின் எட்டாஞ்சடங்கு முடிந்தவுடன் நான் லண்டன் திரும்பியாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இருப்பது தான் என் நெஞ்சை நெருடுகிறது....

**–கோவிலூர் செல்வராஜன்–**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கினிக் குஞ்சாய் உயிர்த்தெழு!



சிறிய மலராய் விரிந்து மலரும்
என் மகளுக்கு
எப்படிக் காட்டுவேன்
இந்த உலகை
மாசுமறுவற்ற பச்சைக் குழந்தை
காற்றை எல்லாம் தென்றலென்றெண்ணி
கற்பனையில் சஞ்சரித்து
ஒலியெல்லாம் சங்கீதமென
வாழ்வை இனிதாகவே காணத்தெரிந்த
கன்றுக்குட்டி
என் சிறுபெண்
வாழ்வின் முழுமைக்கு
பெண்குழந்தை வேண்டுமென்று
பேரவாக் கொண்டிருந்த என் தாய்மை
பிறந்த நாள் முதலாய்
இளஞ்சிவப்பு வர்ணத்தில்
சட்டைதைத்து
பொட்டு வைத்து காதுகுத்தி
பெண்ணாய் அவளை நினைத்த
என் தாய்மை ....
பெண்ணென்று பிறந்ததற்காய்
பெருமைப்பட வேண்டுமென்று
கனவுகளில் நினைத்திருந்த
என் தாய்மை ....
சிறகொடிக்கப்பட்ட ஒரு
ஒற்றைத் தும்பியாய்
திகைத்து போய் மிரண்டு கிடக்கிறது
வக்கிரம் நிறைந்த விலங்குணர்வின்
குரூரம் நிறைந்த கயமையின் முன்னால்
சிதறிப் போயிற்று சில்லம் பல்லமாக
சிதறிப் போயிற்று
என மகளுக்கு
எப்படிக் காட்டுவேன்
இந்த உலகை .....
மூன்று வயதினும்
பால் முலையருந்தும் பவளவாற்க் குருத்துக்கள்
கொஞ்சி குலவி
நிலாக் காட்டச் சிரிக்கும்
சின்ன வயதிலும்
ஆண் குறிகளால் துளைக்கப்படுவதை
எப்படிக் காட்டுவேன்

அள்ளி அணைக்கின்ற அப்பாவோ
ஆசையுடன் கொஞ்சுகின்ற மாமாவோ ஆயினும்
அடி வயிற்றில் துளையிடும்
ஆண்குறியர்களாகிக் போய்விடக் கூடிய
இந்த உலகை
எப்படிக் காட்டுவேன்

சூழவுள்ள உலகம் முழுவதும்
விறைத்துப்போன
ஆண்குறிகளாய்
அச்சம் தருவதை
எப்படித் தவிர்ப்பேன்

காற்றெல்லாம் தென்றலென்றும்
ஒலியெல்லாம் கீதமென்றும் எண்ணியபடி
சிறகுகளை அகல விரித்து
சிறகடிக்க முடியாது என் பெண்ணே
வெந்து புண்ணாய்
வலியெடுக்கும் இதயத்துடன்
வாழ்தலும் முடியாது
எழு !
உள்ளே அனலாய்
எரிந்து கொண்டிருக்கும்
பூமியின் வடிவாய்
விரித்தெழு
பொட்டும் பிறவும்
அலங்கரிக்கும்
மேனியழகு உன் அழகல்ல
வெறியும்
திமிரும்
அவர்களுக்காய் மலரட்டும் !
அதிகாரமும்
உடைந்து சிதற எழுந்து நில்
உன்னை மீறிய எந்தக் குறியும்
-உனது உடலை தீண்டாதவாறு
அக்கினிக் குஞ்சாய்
உயிர்த்தெழு
இந்த உலகின்
பெண்மை வடிவம்
இதுவென்றெழுது

("மூன்றாவது மனிதன்" வெளியிட்ட எல்லை கடத்தல் எனும் அவ்வையின் தொகுதியிலிருந்து)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நியூயோர்க் தாக்குதல்: இது முடிவல்ல முடிவின் தொடக்கம்!




ரோசா

அதிர்ந்தது அமெரிக்க வான்வெளி. புதைந்தது உலகப் பொருளாதார மையம். உலக ஆக்கிரமிப்புக்களைத் திட்டமிடும் தலைமையகமும், அமெரிக்க இராணுவத்தின் தலைமையகமுமான பென்டகன் பாதுகாப்புக் கோட்டைகள் பலவற்றைத் தாண்டித் தகர்த்துத் தரைமட்டமாக்கப்பட்டது. தமக்கு அடிபணியாத் தலைவர்களை வேட்டையாட முயன்று வரும், அமெரிகத் தலைமையோ பாதுகாப்பிடம் தேடி ஓடி ஒழிந்தது.

மிகக் கச்சிதமான திட்டமிடல். வியப்புற வைக்கும் தாக்குதல் ஒருங்கிணைப்பு. பிசகின்றித் தாக்கித் தரைமட்டமாக்கப்பட்ட பொருளாதார, இராணுவ இலக்குகள். உலகப் புரட்சியைத் தடுத்து நிறுத்தி விட்டோம் என மார்தட்டிக் கொண்ட ஏகாதிபத்திய அரச பயங்கரவாதிகளுக்குக் கிடைத்தது மரண அடி.

பொருத்தமான நாளில், உலகப் புரட்சியைக் கனாக் கண்ட, பாரதியின் நினைவுநாளில், உலகப் பயங்கரவாத தலைமை அரசின் மீது விழுந்த பொறிபறக்கும் இவ்வடியானது, அகிலம் பரந்து தம் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு ஒரு ஒளி வீச்சாகும். அநீதியின் மீது கட்டியெழுப்பப்படும் எந்த கோபுரங்களும் மாடங்களும் தகர்ந்து தவிடுபொடியாகவே விதிக்கப்பட்டவை என்ற உண்மை உலகிலுள்ள ஒவ்வொருவரின் கண் முன்னே நிதர்சனமாகியது, நிஜமாகியது! நியூயோர்க் ஆகட்டும், இலண்டன் ஆகட்டும், டோக்கியோ ஆகட்டும், கொழும்பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதயப் பகுதியாகட்டும். வினையும் ஒன்றே விளைபயனும் ஒன்றே.

வியந்தனர், அடக்கியொடுக்கப்பட்ட தேசங்களும் மக்களும்! ஆயினும் அம் மனங்களிலோ அங்கு மரணித்த மக்களுக்கான சோக நினைவுகள், ஒரு ஓரமாய்! மரணங்களின் அவலத்தை இழப்புக்களின் சோகத்தை, தினம் தினம் அனுபவிக்கும் நாம் அறியோமோ அவ்அமெரிக்க மக்களின் சோகத்தை! அமெரிக்க அரசின் வரலாற்றுக் கொடுமையினால் விளைந்த தவிர்க்க முடியா வினைக்கு அம் மக்கள் கொடுக்க வேண்டியிருந்த பாரிய விலைக்காக உலக மனித நேய சக்திகளுடன் இணைந்து நம் மனங்களும் கசிகின்றன.

ஆக்கிரமிப்பாளர்களே! உங்கள் தோல்விகளையும் அவமானங்களையும் மறைக்கும் நோக்கில், உங்கள் ஆக்கிரமிப்பு நோக்கங்களை எதிர்த்து நிற்கும் தேசங்களையும் மக்களையும் வேட்டையாட இதனை வாய்ப்பாக முனைபவர்களே! உங்களுக்கும் ஒரு எச்சரிக்கை! அதற்கான விலைகளை மறுபடியும் மறுபடியும் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை இந்த செப்ரெம்பர் 11 மீளவும் மீளவும் அறிவிக்கும். எல்லை தாண்டிக் கொடுமையிழைக்கும் ஏகாதிபத்திய பயங்கரவாதத்தின், விதைப்புக்களுக்கான பன்மடங்கு அறுவடைதான் இது!

மேற்கு நாட்டு மக்களே, உங்கள் அரசுகளின் தாங்கமுடியாக் கொடுமைகளின் விளைவுகளே இது. உங்கள் அரசுகளின் பல்வேறு அநாகரிக யுத்த முறைகளுக்கும், இராஜதந்திர கபடத்தனங்களுக்கும் ஊடகத்துறைப் பயங்கரவாதங்களிற்கும்

## சாத்தான்களுக்கு எதிரான மீட்பர்கள்....?

அமெரிக்காவின் ஜனாதிபதியாக ரொனால்ட் ரேகன் இருந்த சமயம். நன்கு வளர்ந்த தாடியுடன் கூடிய இளைஞர்களை அவர் ஜனாதிபதி மாளிகையான வெள்ளை மாளிகையிலேயே சந்தித்தார். அந்த இளைஞர்கள் தலையில் தலைப்பாகை கட்டியிருந்தார்கள். பார்ப்பதற்குச் சென்ற நூற்றாண்டின் கற்கால மனிதர்களைப் போலத் தோற்றமளித்தார்கள்.

வெள்ளை மாளிகையில் அவர்களை வரவேற்று உபசரித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு அவர்களது கைகளில் துப்பாக்கிகள் இருந்தன. அமெரிக்காவைக் கண்டுபிடித்த நமது மூதாதையார்களுக்கு ஒப்பானவர்கள் இவர்கள். ஆப்கானிஸ்தானின் முஹாஜிதீன் படையினர் இவர்கள் என்று பாராட்டுப் பத்திரம் வாசித்தார்.. "சாத்தான்களின்" சாம்ராஜ்யமான சோவியத் யூனியனை எதிர்த்து அவர்கள் போரிட்டுக் கொண்டிருந்த காலம் அது.

இன்று அந்த சர்வதேச பாதாள உலக கோஸ்டிகளும், உலகக் கேடிகளுமான அமெரிக்கா தலைமையிலான மேற்குலகை எதிர்த்துப் போராட வெளிக்கிட்டிருப்பவர்கள் யார்? அன்று கம்யூனிசத்தை ஒழிக்க உற்பத்தி செய்யப்பட்டவர்கள் இன்று யாருக்கெதிராக ஆனார்கள்? ஏன் ஆனார்கள்? அன்றைய மேசையாக்கள் இன்று உலக பயங்கரவாதிகளானது எப்படி?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிடைத்த பொருத்தமான நவீன பதிலடிதான் இது. அமெரிக்காவின் பூர்வீகக் குடிகளை கொன்றொழித்து உங்கள் முன்னோர்கள் கட்டியெழுப்பிய "நாகரீக அரசு"க்குக் கிடைத்த மறக்க முடியாப் பாடமே இது. ஆபிரிக்க மக்களை அன்று அடிமைகளாக்கிச் செய்த கொடுமைகளுக்கு கொடுத்த விலைதான் இது. இன்று, மூன்றாம் உலக மக்களாகிய எம்மீது விரித்த ஒடுக்குமுறைக் கரங்களின் பதில் விளைவே இது.

அக்கிரமக்காரர்களே, உங்கள் மீது நிகழ்த்தப்பட்ட இந்த உலக சாதனையை நாகரீகமற்ற செயல் என்று எத்தனைதான் நீங்கள் கூச்சலிட்டாலும், உங்கள் கொடூர வரலாற்றை உலக மக்கள் அறிவர். அன்றும் இன்றும் நீங்கள் நடாத்தும் அரசியல் பித்தலாட்டங்களையும், நிதி மோசடிகளையும், இராணுவக் கொடுமைகளையும் அறிவர். அமைதி பூத்துக்கிடந்த தேசங்களுக்கு இடையில், யுத்தங்களைத் தூண்டிவிட்டு ஆயுங்களை விற்று, கோடிக்கணக்கான மக்களைக் கொன்று குவிக்கக் காரணமாகும் உங்கள் நாகரீகம் பற்றி, அடக்கப்பட்டு வரும் மக்களாகிய நாம் நன்கு அறிவோம். ஒரே நாளில் ஒரு இலட்சம் உயிர்களை ஈராக்கில் பலிகொண்ட உங்கள் நாகரீகங்களையோ அல்லது உங்கள் அணுக்குண்டுகளை பரீட்சித்து அரை நூற்றாண்டுக்குப் பின்பு இன்றும் ஜப்பானில் மனித உயிர்களைச் சிதைத்து வரும் உங்கள் நாகரீகங்களை நாம் காண்கின்றோம்.

என்னதான் உயர் தொழில் நுட்பங்களாகட்டும், விஞ்ஞான வழிமுறைகளாகட்டும், உன்னத போராளிகளின் உயிராயுதங்களுக்கு முன் அவை துாசு. கட்டுநாயக்காவிலும், சியோனிச தெருக்களிலும் இராணுவ மையங்களிலும் லெபனானிலும், யேமன் துறை முகத்திலும் உலக பயங்கரவாதத்தின் மையங்கள் பலவற்றிலும் இந்த உண்மை துல்லியமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ஒடுக்கும் மூளைகளினதும் இயந்திரங்களினதும் நுண்ணிய வழிமுறைகளை விஞ்சிய உத்திகளை ஒடுக்குமுறைக்குள்ளாகும் மக்கள் உருவாக்கிக் கொண்டுதான் இருப்பர். ஒடுக்குமுறையாளர்கள் என்னதான் தம்மைப் பாதுகாக்க முயன்றாலும், உயிர்களை அர்ப்பணித்து அவர்களைத் தகர்க்கும் சக்திகள் உருவாகக் காரணமே அக் கொடுங்கோலர்கள்தான். இந்த புதிய போர் மார்க்கம் என்பது உலக சமநிலையை ஆதிக்க அரசுகள் அரச பயங்கரவாதத்தினால் சிதைத்தமையினால் பிறந்த புதிய வகை உத்தியே தவிர வேறென்ன?

அவை மங்காத் தாக்குவலிமை பெறுவதற்கு காரணங்கள் ஒடுக்குமுறையாளர்களின் கொடுமைகள்தான். இக் கொடுமைகளுக்கு உட்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் ஆசுவாசப் பெருமூச்சுக்களையே மூன்றாம் உலகத்தின் தெருக்களின் கண்டீர்கள்! தமது துன்பம் தொலைக்க ஏதேனும் செய்யப்படும் என்ற நம்பிக்கையின் ஆசுவாசமே அது என்பதைப் புரிந்து கொள்வீர்!

எங்கோ இருக்கும் ஆசியர்களும், ஆபிரிக்கர்களும், அராபியர்களும் உங்களை எதிரிகளாகக் கொண்டு தம்முயிர் ஈந்து தம்முடலம் பொசுக்கி உங்களின் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் நிலை ஏற்பட்டது எதனால்? உங்கள் அரசியல்,

"பயங்கரவாதத்தை உருவாக்கியது பயங்கரவாதமன்றி வேறெதுவுமில்லை"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதார, இராணுவத் தலைவர்களின் அரச பயங்கரவாத்தினால்தான். அதை மறைக்க அத் தலைவர்களும் ஏன் அங்குள்ள மக்களும் கூட போராளிகளுக்குச் சூட்டுகின்றீர்கள் அப் பயங்கரவாதப் பட்டத்தை! அதிநவீன, அதிஆற்றல் மிக்க அதி பயங்கர எதிரியுடன் பொருத, நீங்கள் கூறும் மனிதப்பண்புப் போர்முறைக்காகக் காத்திருப்பது போராளிகளைப் பொறிக்குள் வீழ்த்தும் சாணக்கியமே.



ஆக்கிரமிப்பு அரசுகளின் பிரசைகளே, உங்களது அக்கிரம அரசுகள் எங்களைப் பிழிந்து பெற்ற பலாபலன்களில் ஒரு கூறைத்தான் நீங்களும் அனுபவித்து வருகின்றீர்கள்! இப்போது உங்கள் அரசுகளும் முன்னோர்களும் விதைத்த ஒடுக்குமுறைகளினது விளைவின் பலாபலன்களின் இன்னொரு பண்பைத்தான் இப்போது எதிர்கொண்டுள்ளீர்கள். உங்கள் துன்பத்தை உணர்க்கின்றோம். எங்கள் மீதான கொடூரங்களை நீங்கள் உணர்ந்ததுண்டா? ஈராக் மக்கள் மீதான கொடிய தாக்குதலுக்கு அன்று நீங்கள் உங்கள் அரசுக்கு ஒப்புதல் கொடுத்ததை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். எமது நெடிய துயரங்களுக்கும் உங்களது சுகமான வாழ்வுக்கும் எவ்வளவு தொடர்போ, அவ்வளவு தொடர்பு உம் துயரங்களுக்கும் எம் சுதந்திரத்திற்கும் உள்ளது. இதனைப் புரிந்தீர்கள் எனில், எதிர்காலத்தை மாற்றியமைக்க நீங்களும் முன்வரவேண்டியிருப்பதை உணர்வீர்கள்.

ஆம், மாற்றம், அடிப்படை மாற்றம் வேண்டும்! அனைவரிடமும் ஏற்பட வேண்டும். அது அனைவருக்குமானதாக இருக்க வேண்டும்.

இந்தப் போர்முறை தந்த அதிர்வின் உள அதிர்ச்சி உங்கள் அரசுத் தலைவர்களுக்கு மாத்திரமல்ல. உலகிலுள்ள எல்லா ஒடுக்குமுறையாளர்களுக்கும் கூட ஒரு பேரடி. கோபுரங்களையும் பாதுகாப்புக் கோட்டைகளையும் அவர்கள் காலி செய்வதைப் பாருங்கள். கொடியவர்களுக்கும் அவர்களை ஆதரித்து நிற்போருக்கு இது படிப்பினையாகட்டும். வரலாறு முழுவதும் நின்று நிலைக்கும் மரண அச்சுறுத்தலாகட்டும். கோடிக்கணக்கான மக்களின் குருதியைப் பிழிந்து வானுயர் கோபுரங்கள் கட்டி, உலக மக்களைத் தம் காலடியில் என்றென்றைக்கும் கீழ்ப்படுத்தலாம் என்ற கனவில் மிதக்கும் ஆதிக்க சக்திகளுக்கு இது ஒரு முடிவான எச்சரிக்கையாகட்டும்.

உலகமயமாக்கலில் இது ஒரு புதிய அத்தியாயம். வரலாற்றில் ஒரு புதிய திருப்பம். ஒடுக்குமுறையாளர்கள் வென்றுவிட்டார்கள் என்பதை நிலைமறுத்தது இத்தாக்குதல். இனி, உலக ஒடுக்குமுறையாளர்கள் தங்கள் நிலைகளை மீளக் கணக்கிட வேண்டிய காலம். ஒடுக்குமுறைக்கு உள்ளாகுபவர்களுக்கு இன்னும் போராட பல வழிகள் உள்ளன என்று நிறுவப்பட்ட காலம். உலக மக்களின் விடுதலைக்கு இதுவோர் புதிய அத்திவாரம். ஆம்! அத்தகைய ஒரு காலத்தை எமக்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தந்தவர்களே இத்தாக்குதலை மேற்கொண்ட போராளிகள்! அவர்களுக்கு நம் அஞ்சலிகள் என்றும்!

ஓ முகமறியாப் போராளிகளே! உன்னதமான வீரர்களே! உலகம் நிலைக்கும் வரைக்கும் உங்கள் நினைவுகளால் மனிதகுலம் சிலிர்க்கும். உலகெங்கும் அடக்கியொடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகள் நீங்கள். உலக அரச பயங்கரவாதிகளாகிய ஏகாதிபத்தியங்களால் கொன்றொழிக்கப்பட்ட மக்களின் உன்னத தலைவர்கள் நீங்கள். உங்கள் வழியில் ஒவ்வொரு சின்னஞ்சிறிய தேசமும், வீறு கொண்ட அதன் ஒவ்வொரு உயிரும் உலக விடுதலை என்ற உங்கள் இலட்சியங்களை அடைய நிச்சயம், தம் பங்காற்றும். உங்களுக்கு மொழியில்லை. நாடு இல்லை. எல்லை இல்லை! ஆனாலும் உங்கள் துடிப்பும் எங்கள் துடிப்பும், உங்கள் எதிர்பார்ப்பும் எங்கள் எதிர்பார்ப்பும், உங்கள் உணர்வுகளும் எங்கள் உணர்வுகளும் ஒன்றே! புரட்சிகர வரலாறு தன் உச்சாணியில் உங்களை வைத்து என்றென்றைக்கும் போற்றிப் புகழும் குதூகலித்துக் கொண்டாடும். தோழர்களே! நீங்கள் ஆறுங்கள். உங்கள் எண்ணங்களை இறுதிவரை நிறைவேற்றும் பல்லாயிரம் உயிர்கள் உருவாக நீங்கள் வித்துக்களானீர்கள். அது வளர்ந்து விரிந்து நிச்சயம் விருத்தி பெறும். அவர்கள், உங்கள் கனவுகளையும் எங்கள் கனவுகளையும் நிறைவேற்றுவர்!

ஆனால், இது முடிவல்ல. புதிய தொடக்கம்!

## முஸ்லிம் எதிர்ப்பு மனநிலை...!

நியுயோர்க் தாக்குதலை அடுத்து எழுந்த முஸ்லிம் எதிர்ப்பு என்பது அமெரிக்கா மற்றும் மேற்குலகில் அப்பாவி முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதல்கள், சூறையாடல்கள், கலவரங்கள், கொலைகள் என நடந்துகொண்டிருந்ததை பல மேற்குலகு ஊடகங்கள் மூடிமறைத்தவண்ணமிருந்தன. இதனை நியாயப்படுத்துகின்ற போக்கு பல ஏனைய சமூகத்தவர்களிடமும் நிகழ்ந்தன. இலங்கையில் சிங்களப் பத்திரிகைகள் அமெரிக்க சார்பு நிலையை கடைபிடித்ததை அப்பட்டமாகக் காண முடிந்தது. அது போலவே தமிழர்களிடத்திலும் முஸ்லிம் எதிர்ப்பும், வெறுப்பும் பரப்பப்பட்டதைக் காண முடிந்தது. வெளிநாடுகளில் ஏற்கெனவே முஸ்லிம்களுக்கெதிராக இருக்கும் ஐதீகங்களை அப்படியே உள்வாங்கியது மட்டுமல்ல இதற்கான காரணம், மாறாக ஏற்கெனவே இலங்கையிலிருந்தே தமிழர்களிடத்தில் இருந்து வந்த முஸ்லிம்கள் குறித்த பழைய புனைவுகளும் காரணம் என்பது அப்பட்டமான உண்மை. இது ஒரு புறத்தில் கண்மூடித்தனமான அமெரிக்கா சார்பு நிலையெடுக்கவும், முஸ்லிம் எதிர்ப்பு உணர்வுகளை காக்கவும் வசதியாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. ஏற்கெனவே முஸ்லிம்களைக் கொன்றும், விரட்டியும் செய்த இம்சைகளை சரிகட்டாத நிலையில், தமிழ் தேசப் போராட்டத்தின் மீது பயங்கரவாத முத்திரை குத்துகின்ற சர்வதேச எதிரியான அமெரிக்காவுக்கு வக்காளத்து வாங்குவதை என்னவென்பது. இனியாவது இதனை புரிந்துகொள்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அமெரிக்க ஆக்கிரமிப்புத் தலையீடு ஒரு நூற்றாண்டுப் பதிவு

ஒரு நூற்றாண்டுகால அமெரிக்க தலையீடு பற்றிய இந்த தரவுகளை ஆங்கிலத்தில் தொகுத்தவர் Zoltan Grossman. அமெரிக்காவின் உத்தியோகபூர்வ ஆவணங்கள், மற்றும் அமெரிக்கா பற்றி பலரும் எழுதிய நூல்கள் கட்டுரைகள் என்பவற்றிலிரந்து தொகுக்கப்பட்ட இந்த தரவுகள் ஒரு மார்க்சிய இணையத்தளமொன்றிலிருந்து பெறப்பட்டதாகும்.

| இடம் | காலம் | படை | குறிப்பு |
|---|---|---|---|
| தென் தகோத்தா | 1890-? | துருப்புகள் | 300 லகோட்டா இந்தியர்கள் பேர் படுகொலை |
| ஆர்ஜன்டீனா | 1890 | துருப்புகள் | |
| சிலி | 1891 | துருப்புகள் | கப்பல்கள் தேசப்போராளிகளுடன் மோதல் |
| ஹைட்டி | 1891 | துருப்புகள் | கருப்பின தொழிலாளர்களினி எழுச்சியை ஒடுக்குதல் |
| இதாகோ | 1892 | துருப்புகள் | சுரங்கத் தொழிலாளர்களை ஒடுக்குதல் |
| ஹவாய் | 1893-? | கடற்படை, துருப்புகள் | சுதந்திர முடியாட்சியை கவிழ்த்தல் |
| சிகாகோ | 1894 | துருப்புகள் | ரயில் போராட்டத்தை ஒடுக்க, 34 பேர் படுகொலை |
| நிகாரகுவா | 1894 | துருப்புகள் | ஒரு மாதகால ஆக்கிரமிப்பு |
| சீனா | 1894-1895 | கடற்படை, துருப்புகள் | சீன, ஜப்பானியப் போரில் கடற்படை அச்சுறுத்தல் |
| கொரியா | 1894-1896 | துருப்புகள் | போரின் போது கடற்படைகள் சோல் நகரைக் கைப்பற்றல் |
| பனாமா | 1895 | கடற்படை, துருப்புகள் | கப்பல்கள் கொலம்பிய மாநிலத்தில் தரித்தல் |
| நிகாரகுவா | 1896 | துருப்புகள் | கொரின்டோ துறைமுகத்தில் கப்பல்கள் தரித்தல் |
| சீனா | 1898-1900 | துருப்புகள் | அந்நிய இராணுவத்துடன் மோதினர் |
| பிலிப்பைன்ஸ் | 1898-1910 | கடற்படை, துருப்புகள் | ஸ்பெயினிடமிருந்து ஆக்கிரமித்ததில் 6 லட்சம் பிலிபைன் மக்கள் படுகொலை |
| கியுபா | 1892-1902? | கடற்படை, துருப்புகள் | ஸ்பெயினிடம் இருந்து கைப்பற்றி கடற்படை தளத்தை அமைத்தல் |
| போர்டோ ரிகோ | 1898 (-?) | கடற்படை, துருப்புகள் | ஸ்பெயினிடம் இருந்து கைப்பற்றல், ஆக்கிரமிப்பு தொடர்கிறது |
| குவாம் | 1898 (-?) | கடற்படை, துருப்புகள் | ஸ்பெயினிடம் இருந்து கைப்பற்றி கடற்படை தளமாக பயன்படுத்தல் |
| மின்னசோட்டா | 1898 (-?) | துருப்புகள் | சிப்பவேவா எனும் இடத்தில் படையினர் சமர் |
| நிகாரகுவா | 1898 | துருப்புகள் | சான் ஜுவான் டெல் சூர் துறைமுகத்தில் கடற்படை அச்சுறுத்தல் |
| சாமோவா | 1899 (-?) | துருப்புகள் | போரின் மூலம் முடியாட்சியை கைப்பற்றல் |
| நிகாரகுவா | 1899 | துருப்புகள் | போர் கப்பல்கள் புளுபீல்ட் துறைமுகத்தில் அச்சுறுத்தல் |
| இடாகோ | 1899-1901 | துருப்புகள் | படைகள் சுரங்க பிரதேசங்களை கைப்பற்றல் |
| ஒக்லோஹாமா | 1901 | துருப்புகள் | கிரீக் இந்தியர்களின் கிளர்ச்சியை நசுக்குதல் |
| பனாமா | 1901-14 | கடற்படை, துருப்புகள் | கால்வாய் வலயத்தில் சமர் |
| ஹொன்டுராஸ் | 1903 | துருப்புகள் | போர்க்கப்பல்கள் கிளர்ச்சியை ஆக்கிரமித்தல் |
| டொமினிக்கன் குடியரசு | 1903-1904 | துருப்புகள் | அமெரிக்க நலன்கள் கிளர்ச்சியை பாதுகாத்தல் |
| கொரியா | 1904-1905 | துருப்புகள் | ரஸ்ய, ஜப்பானிய போரின் போது போர்கப்பல்கள் அச்சுறுத்தல் |
| கியுபா | 1906-1909 | துருப்புகள் | ஜனநாயகத் தேர்தலின் போது போர்க்கப்பல்கள் அச்சுறுத்தல் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | |
|---|---|---|---|
| நிகாரகுவா | 1907 | துருப்புகள் | கிளர்ச்சிக்கு சதி செய்தல் |
| ஹொன்டூரால் | 1907 | துருப்புகள் | நிகாரகுவாவோடு போரும் போர்க்கப்பல்கள் அச்சுறுத்தலும் |
| பனாமா | 1908 | துருப்புகள் | போர்க்கப்பல்கள் தேர்தலின் போது அச்சுறுத்தல் |
| நிகாரகுவா | 1910 | துருப்புகள் | பேர்க்கப்பல்கள் புளூபீல்ட், கொரின்டோ பகுதியில் அச்சுறுத்தல் |
| ஹொன்டூரால் | 1911 | துருப்புகள் | சிவில் யுத்தத்தை நசுக்க ஒத்துழைத்தல் |
| சீனா | 1911-41 | கடற்படை, துருப்புகள் | தொடர்ச்சியாக ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல் |
| கியுபா | 1912 | துருப்புகள் | ஹவானாவை கட்டுப்படுத்தல் |
| பனாமா | 1912 | துருப்புகள் | சூடான தேர்தலின் போது போர்கப்பல்கள் அச்சுறுத்தல் |
| ஹொன்டூரால் | 1912 | துருப்புகள் | போர்க்கப்பல்கள் அச்சுறுத்தல் |
| நிகாரகுவா | 1912-1933 | துருப்புகள், குண்டுவீச்சு | 20 வருட ஆக்கிரமிப்பும், கெரில்லாக்களுடன் சமர் |
| மெக்சிகோ | 1913 | கடற்படை | கிளர்ச்சியின்போது அமெரிக்கா சுற்றிவளைப்பு |
| டொமினிக்கன் குடியரசு | 1914 | கடற்படை | சாந்தோ டொமிங்கோவில் போராளிகளுடன் சமர் |
| கொலராடோ | 1914 | துருப்புகள் | படையினரசல் சுரங்கத்தொழிலாளர்களின் போராட்டத்தை முறியடித்தல் |
| மெக்சிக்கோ | 1914-1918 | கடற்படை,துருப்புகள் | உள்ளூர் புரட்சியின் மீது தொடர்ச்சியாக தலையீடு |
| ஹைட்டி | 1914-1934 | துருப்புகள், குண்டுவீச்சு | கிளர்ச்சியின் பின் 19 வருட ஆக்கிரமிப்பு |
| டொமினிக்கன் குடியரசு | 1916-1924 | துருப்புகள் | 8 வருடங்களாக கடற்படை ஆக்கிரமிப்பு |
| கியுபா | 1917-1933 | துருப்புகள் | இராணுவ ஆக்கிரமிப்பு, |
| உலகப் போர்-1 | 1917-1918 | கடற்படை, துருப்புகள் | கப்பல்கள் மூழ்கடிக்கப்படல், ஜெர்மனியில் சமர் |
| ரஷ்யா | 1918-1922 | கடற்படை, துருப்புகள் | ஐந்து இடங்களுக்கூடாக ஊடுருவி போல்சிவிக்குகளுடன் சமர் |
| பனாமா | 1918-1920 | துருப்புகள் | தேர்தலின் பின் பொலிஸார் கடமையில் |
| யுகோஸ்லேவியா | 1919 | துருப்புகள் | கடற்படை அச்சுறுத்தல் |
| ஹொன்டூரால் | 1919 | துருப்புகள் | தேர்தல் பிரச்சாரங்களில் போர் கப்பல்கள் தரித்தல் |
| கௌதமாலா | 1920 | துருப்புகள் | இரு வார ஆக்கிரமிப்பு |
| மேற்கு வேர்ஜினியா | 1920-1921 | துருப்புகள், குண்டுவீச்சு | சுரங்கத்தொழிலார்களுக்கு எதிராக சுற்றிவளைப்பு |
| துருக்கி | 1922 | துருப்புகள் | தேசப்போராளிகளுடன் சமர் |
| சீனா | 1922-1927 | கடற்படை, துருப்புகள் | சுற்றிவளைப்பு |
| ஹொன்டூரால் | 1924-1925 | துருப்புகள் | தேர்தல் சண்டைகளில் இரு முறை தலையீடு |
| பனாமா | 1925 | துருப்புகள் | சுரங்கப் பொது வேலைநிறுத்தத்தை நசுக்குதல் |
| சீனா | 1927-1934 | துருப்புகள் | பேர்க்கப்பல்கள் அச்சுறுத்தல் |
| எல் சல்வடோர் | 1932 | கடற்படை | உள்ளூர் புரட்சியை நசுக்க போர்க்கப்பல்கள் அனுப்பல் |
| உலகப் போர் - 2 | 1941-1945 | முப்படைகள், குண்டுவீச்சு | முதலாவது அணு ஆயுதப் போரை தொடக்கி வைத்தல் |
| டெத்ரொய்த் | 1943 | துருப்புகள் | கருப்பின போராளிகளை படையினர் வீழ்த்துதல் |
| ஈரான் | 1946 | | அணு ஆயுத மிரட்டல் |
| யுகோஸ்லேவியா | 1946 | கடற்படை | அமெரிக்க விமானங்களை சுட்டு வீழ்த்த உத்தரவு |
| உருகுவே | 1947 | அணுஆயுத மிரட்டல் | குண்டுவீச்சு பலத்தை காட்சிப்படுத்தல் |
| கிரீஸ் | 1947-1949 | | உள்நாட்டுப்போரில் வலதுசாரிகளை நேரடியாக வழிநடத்தல் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | |
|---|---|---|---|
| சீனா | 1948-1949 | துருப்புகள் | கம்யூனிச வெற்றிக்கு முன் கடற்படை சுற்றிவளைப்பு |
| ஜெர்மனி | 1948 | அணுஆயுத மிரட்டல் | அணுஆயுத குண்டு வீச்சு அச்சுறுத்தல் |
| பிலிப்பைன்ஸ் | 1948-1954 | கட்டளை நடவடிக்கை | போராளிகளுக்கெதிராக சீ.ஐ.ஏ. வழிநடத்தல் |
| போர்ட்டோ ரிக்கோ | 1950 | கட்டளை நடவடிக்கை | விடுதலைப் போராளிகளை நசுக்குதல் |
| கொரியா | 1951-1953 ? | படைகள், குண்டுவீச்சு | அணுஆயுத அச்சுறுத்தல் |
| ஈரான் | 1953 | கட்டளை நடவடிக்கை | சீ.ஐ.ஏ. ஆட்சிக்கவிழ்ப்பு சதி |
| வியட்னாம் | 1954 | அணுஆயுத அச்சுறுத்தல் | குண்டுவீச்சு |
| கௌத்தமாலா | 1954 | கட்டளை நடவடிக்கை | குண்டுவீச்சு, அணுஆயுத அச்சுறுத்தல், சீ.ஐ.ஏ சதி |
| எகிப்து | 1956 | துருப்புகள் | அணுஆயுத அச்சுறுத்தல் |
| லெபனான் | 1958 | கடற்படை, துருப்புகள் | போராளிகளுக்கு எதிரான கடற்படை ஆக்கிரமிப்பு |
| ஈராக் | 1958 | அணுஆயுத அச்சுறுத்தல் | ஈராக் குவைத்தை கைப்பற்றப்போவதாக எச்சரிப்பு |
| சீனா | 1958 | அணுஆயுத அச்சுறுத்தல் | தாய்வான் தீவிலிருந்து அகலப்போவதில்லையென சீனா கூறியது |
| பனாமா | 1958 | துருப்புகள் | தொடர்ச்சியான மிரட்டல் |
| வியட்னாம் | 1960-1975 | துருப்புகள், குண்டுவீச்சு | 1-2 மில்லியன் மக்கள் மாண்டனர். அணு ஆயுதங்கள் பாவிப்பு |
| கியூபா | 1961 | கட்டளை நடவடிக்கை | சீ.ஐ.ஏ. வழிகாட்டலினாலான அந்நிய ஆக்கிரமிப்பு தோல்வி |
| ஜெர்மனி | 1961 | அணுஆயுத அச்சுறுத்தல் | பேர்லின் சுவர் சர்ச்சையில் உசார் |
| கியூபா | 1962 | அணுஆயுத அச்சுறுத்தல் | கடற்படையின் மூலம் எச்சரிப்பு |
| லாவோஸ் | 1962 | கட்டளை நடவடிக்கை | கெரில்லா போரில் மற்ற படைகளை பலப்படுத்தல் |
| பனாமா | 1964 | துருப்புகள் | கால்வாய் சிக்கலில் பனாமா நாட்டவர்கள் சுடப்படல் |
| இந்தோனேசியா | 1965 | கட்டளை நடவடிக்கை | சீ.ஐ.ஏ. துணையுடனான படைகளால் மில்லியன் மக்கள் கொலை |
| டொமினியன் குடியரசு | 1965-1966 | துருப்புகள் | தேர்தலின் போது கடற்படை குண்டுவீச்சு |
| கௌத்தமாலா | 1966-1967 | கட்டளை நடவடிக்கை | கிரீன் பெரட் போராளிகளை சுற்றிவளைத்து நசுக்குதல் |
| டெத்ரொய்ட் | 1967 | துருப்புகள் | படையினர் கறுப்பினத்தவர்களுடன் சமர். 43 பேர் கொலை |
| கம்போடியா | 1969-1975 | குண்டுவீச்சு, துருப்புகள் | 10 வருடத்திற்குள் 2 மில்லியன் மக்கள் கொலை |
| ஓமான் | 1970 | கட்டளை நடவடிக்கை | ஈரானிய கடற்படை சுற்றிவளைப்பை வழிநடத்தல் |
| லாவோஸ் | 1071-1973 | கட்டளை நடவடிக்கை | அமெரிக்க வழிநடத்தலில் ஆக்கிரமிப்பு முயற்சி |
| தென் தகோத்தா | 1973 | கட்டளை நடவடிக்கை | பலரை படுகாயப்படுத்திக்கொண்டு, லாகோடாஸ் முற்றுகை |
| மத்தியகிழக்கு | 1973 | அணுஆயுத மிரட்டல் | மத்தியகிழக்கு யுத்தத்தில் உலகம் முழுவதும் எச்சரிக்கை |
| சிலி | 1973 | கட்டளை நடவடிக்கை | தெரிவான மார்க்சிய ஜனாதிபதிக்கெதிராக சதி |
| கம்போடியா | 1975 | துருப்புகள் | விசவாயு குண்டுவீச்சு, கப்பல் கைப்பற்றல், |
| அங்கோலா | 1976-1992 | கட்டளை நடவடிக்கை | சீ.ஐ.ஏ.தென்ஆப்பிரிக்க அனுசரணை படையை வழிநடத்தல் |
| ஈரான் | 1980 | அணுஆயுத அச்சுறுத்தல் | புரட்சியில் தலையிட வேண்டாமென சோவியத்துக்கு எச்சரிப்பு |
| லிபியா | 1981 | | இரு ஜெட்டுகள் சுட்டுவீழ்த்தப்படல் |
| எல் சல்வடோர் | 1981-1992 | கட்டளை நடவடிக்கை | படை உதவி, புரட்சியாளர்களுக்கெதிராக விமானப்படை உதவி. |
| நிக்கராகுவா | 1981-1990 | கட்டளை நடவடிக்கை | அந்நிய முற்றுகைக்கு வழிநடத்தல். |
| லெபனான் | 1982-1984 | குண்டுவீச்சு | சிரிய முஸ்லிம் இலக்குகளை நோக்கி கடற்படை குண்டுவீச்சு |
| ஹொன்டூராஸ் | 1983-1989 | துருப்புகள் | எல்லைகளில் தளமமைக்க உதவி |
| கிரெனடா | 1983-1984 | துருப்புகள் | புரட்சிக்குப் பின் நான்கு வருடங்களுக்குப் பின் குண்டுவீச்சு |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | |
|---|---|---|---|
| ஈரான் | 1984 | ஜெட்கள் | 2 ஈரானிய ஜெட்டுகள் மத்திதரைக்கடலில் சுட்டுவீழ்த்தப்படல் |
| லிபியா | 1986 | குண்டுவீச்சு | கடற்படையின் ஆகாயத்தாக்குதல்கள் அரச இலக்குகளை |
| பொலிவியா | 1986 | துருப்புகள், படைகள் | முற்றுகை |
| ஈரான் | 1987-1988 | கடற்படை, குண்டுவீச்சு | ஈராக் பகுதிகளை நோக்கியும் குண்டுவீச்சு |
| லிபியா | 1989 | | கடற்படை ஜெட்டுகள் இரு லிபிய ஜெட்டுகளை சுட்டுவீழ்த்தல் |
| வேர்ஜின் தீவு | 1989 | துருப்புகள் | திடீர்த் தாக்குதல் |
| பனாமா | 1989-1990 | குண்டுவீச்சு | அரசு கவிழ்க்கப்பட்டு தலைவர்கள் கைது, 2000மேல் கொலை |
| லிபேரியா | 1990 | துருப்புகள் | சிவில் யுத்தத்தின் போது வெளிநாட்டவர்கள் வெளியேற்றப்படல் |
| சௌதிஅரேபியா | 1990-1991 | துருப்புகள் | குவைத் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து 540,000 படையினர் மத்தியகிழக்கில் |
| ஈராக் | 1990-? | குண்டுவீச்சு | 200,000 க்கும் அதிகமானோர் கொலை |
| சோமாலியா | 1992-1994 | துருப்புகள் | சிவில் யுத்தத்தில் அமெரிக்கா தலைமையில் ஐ.நா யுத்தம் |
| யுகோஸ்லேவியா | 1992-1994 | கடற்படை | சேர்பியப்பகுதிகளை நேட்டோவுடன் முற்றுகை |
| பொஸ்னியா | 1993-1995 | | சேர்பியப்பகுதிகளில் குண்டுவீச்சு, விமானங்கள் சுட்டுவீழ்த்தல் |
| ஹைட்டி | 1994-1996 | துருப்புகள், கடற்படை | இராணுவ ஆட்சி முற்றுகை, 3 வருடங்களின் பின் படைகள்நிலை கொள்ளல் |
| குரோசியா | 1995 | குண்டுவீச்சு | வான்மார்க்கத் தாக்குதல் |
| சாயிரே | 1996-1997 | துருப்புகள் | கடற்படை முற்றுகை, |
| சூடான் | 1998 | மிசைல் தாக்குதல் | மருந்து தயாரிப்பு இடங்களின் மீது தாக்குதல் |
| ஆப்கானில்தான் | 1998 | மிசைல் | முன்னாள் சீ.ஐ.ஏ. பயிற்சி முகாம்களின் மீது தாக்குதல் |
| ஈராக் | 1998 | குண்டுத்தாக்குதல், மிஸைல் | 4 நாட்கள் தொடர்ச்சியான ஆகாயத்தாக்குதல் |
| யுகோஸ்லேவியா | 1999 | குண்டுவீச்சு, மிசைல் | நேட்டோ தலைமையில் கடுமையான ஆகாயவழித் தாக்குதல் |
| யெமன் | 2000 | கடற்படை | அமெரிக்காவின் மீதான தற்கொலைத் தாக்குதலைத்தொடர்ந்து |
| மசிடோனியா | 2001 | துருப்புக்கள் | அல்பேனிய துருப்புக்களின் ஒரு பகுதியை நிராயுதபாணிகளாக்கியது |



## எச்சரிக்கை

முதலில் அவர்கள் யூதர்களைத் தேடி வந்த போது
நான் எதுவும் பேசவில்லை
ஏனென்றால் நான் ஒரு யூதன் அல்ல
பிறகு அவர்கள் கம்யூனிஸ்டுகளைத் தேடி வந்தார்கள்.
நான் எதுவும் பேசவில்லை.
ஏனென்றால் நான் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல
அதன்பிறகு அவர்கள் தொழிற்சங்கவாதிகளைத்
தேடிவந்தார்கள்.
நான் எதுவும் பேசவில்லை.
ஏனென்றால் நான் தொழிற்சங்கவாதியுமில்லை.
இறுதியில் அவர்கள் என்னைத் தேடி வந்தார்கள்
அப்போது எனக்காகப் பேசுவதற்கு
யாரும் எஞ்சியிருக்கவில்லை.

பாஸ்ரர் நியுமோலர்
(நாசிச் சிறைகளில் கொல்லப்பட்டவர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிலுவைப் பயணமும் புனித யுத்தமும்: ஊடகங்களின் சித்து விளையாட்டு

**நிலா**




வரலாறு மெல்ல எட்டிப்பார்க்கின்றது. வரலாற்றில் முன்பொருமுறை ஐரோப்பிய நாடுகளை ஆட்டிப்படைத்த சிலுவை யுத்தம் பற்றி மீண்டும் செய்திகள் இலேசாக ஆங்காங்கே கசியத் தொடங்கியுள்ளன. அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அவர்களே இதனை ஆரம்பித்தும் வைத்துள்ளார். அவர் சிலுசை யுத்தம் பற்றி நேரடியாக குறிப்பிடாவிட்டாலும் சிலுவை யுத்தம் பற்றிய அறிவிப்பு சிலுவை யுத்தத்தின் அடையாள குறியீடாகவே காணப்படுகிறது. இஸ்லாமியத் தீவிரவாதிகளால் போராளிகளால் அடிக்கடி முன்வைப்படும் புனித யுத்தத்திற்கு மாற்றீடாகவே தங்களின் அடாவடித்தனங்களிற்கு நியாயம் கற்பிக்கவுமே தற்போது சிலுவைப் பயணம் பற்றிய கருத்துக்களை வெளியிடத் தொடங்கியுள்ளனர். இதன்மூலம் இவ்வளவு காலமும் தங்களால் மூடிமறைக்கப்பட்டிருந்த மதவெறியையும் இவர்கள் வெளிச்சம் போட்டு வெளிக்காட்டத் தொடங்கியுள்ளனர். இவர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு துணை போவதில் வழமை போன்றே ஊடகங்களும் துதிபாடத் தொடங்கிவிட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நியுயோர்க் மற்றும் வாஷிங்டன் மீதான பயங்கரவாத தாக்குதல்கள் பற்றிய செய்திகளை அறியத்தருவதில் அமெரிக்கா மற்றும் அதன் தோழமை நாடுகளின் ஊடகங்கள் குறிப்பாக மேற்கைரோப்பிய நாடுகளின் ஊடகங்கள் தெரிவித்துள்ள கருத்துக்களும், செய்திகளை வெளிக் கொணர்வதில் அவற்றின் "கருத்தியல்" நிலைப்பாடும் பெருமளவிற்கு ஒருபக்க சார்பானதாகவே அமைந்திருந்தன. இவ்வாறான நிலைமை முன்பும் பல்வேறு சமயங்களில் ஏற்பட்டிருந்தன. குறிப்பாக ஈராக்-ஈரான் யுத்தத்திலும் பின்பு ஈராக் மீதான யுத்தத்தின் போதும் இவ் ஊடகங்களில் மிக கேவலமான விளையாட்டுகளில் ஈடுபட்டிருந்தன. பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம், பயங்காரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற தலைப்பில் அணிதிரண்டிருக்கும் இவ் ஊடகங்கள் வெளயிடும் செய்திகள் தமது நலன் சார்ந்தும் அரேபிய மக்கள் அனைவரையும் பயங்ரவாதத்தின் வாரிசுகளாக காட்டவும் முனைப்புடன் செயலாற்றி வருகின்றன.

அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதலையிட்டு மகிழ்ச்சி தெரிவித்து வீதியில் இறங்கி ஆரவாரம் செய்த பாலஸ்தீன மக்கள் பற்றிய தொலைக்காட்சி செய்திகள் அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனமான சீ.என்.என்இல் ஒவ்வொரு 30 நிமிடத்திற்கும் ஒரு முறை காட்டப்பட்டது. ஏனைய மேற்கைரோப்பிய மற்றும் வேறு பல தொலைக்காட்சி நிறுவனங்களாலும் இச்செய்தி உடனுக்குடன் பரப்பப்பட்டது. ஊடகங்களின் இவ்வாறான செயல்பாடு பல கேள்விகளை எம்முன் தோற்றுவிக்கின்றது.

இச்செய்தி உண்மைதானா (நடுநிலை செய்திஸ்தாபனங்கள் வெளியிட்ட செய்தியில் இவை முன்பு ஈராக் மீதான யுத்தச் சம்பவங்களின் தொடர்ச்சி என கூறப்பட்டது.)

2. நடந்த சம்பவங்களின் முழுமையான விபரமும் அம்மக்களிற்கு தெரிவிக்கப்பட்டிருந்ததா? அல்லது அரைகுறை செய்திகள் அதாவது விமான விபத்தில் முக்கிய கட்டடங்கள் தகர்ப்பு என்றோ அல்லது இஸ்லாமிய தீவிரவாதிகளால் விமானம் மூலம் (பயணிகள் விமானம் அல்ல) வர்த்தக ஸ்தாபனம் அழிக்கப்பட்டது மட்டுமே தெரிந்திருந்ததா?

3. அப்படியே பாலஸ்தீன மக்கள் நடத்திநர்தாலும் அதற்கான அகபுற சூழ்நிலைகளை விளங்கிக் கொள்ளாமல் பாதிக்கப்பட்ட அனைவரினதும் மனம் பாதிக்கும்படியும் செய்திகளை வெளியிடலாமா?

மேற்கூறிய கேள்விகள் மட்டுமின்றி சரியான விசாரணை முடிவுகள் வருவதற்கு முன்பே இவ் ஊடகங்கள் தாமே விசாரணை நடாத்தி முடிந்து தீர்ப்பும் கூறிவிட்டன. இதன் மூலம் தொடரும் விசாரணை ஆராய்வுகளை தமது நோக்கிலேயே தொடரக்கூடியதாக மறைமுகமான ஒரு அலுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன. இச் சம்பவங்களைப் பற்றி நோர்வேஜிய தொலைக்காட்சி சேவையொன்று வெளியிட்ட செய்தியில் (செப்டம்பர் 12ஆமட் திகதி) பாலஸ்தீன மக்கள் இருதயமற்றவர்கள் அவர்களின் ஜெருசலேம் நிருபர்கள் என கூறியிருந்தார். **(hjerte lose menesker)** ஆனால் தமது சொந்த நாட்டிலே அகதிகளாகி இஸ்ரேலிய சியோனிசவாதிகளால் இம்மக்களின் இருதயம் இரும்பு கரம் கொண்டு அடக்கப்பட்டது பற்றியோ அல்லது அம்மக்களின் சொந்தப் பிரதேசத்தில் அத்துமீறி குடியேறி மாடடாளிகைகள் கட்டி உல்லாச வாழ்வு வாழும் இஸ்ரேலிய குடியேற்றவாதிகளின் செயல்களால் அம்மக்களின் இருதயம் தீயிட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொழுத்தப்பட்டு வருடங்கள் பல கடந்துவிட்டது பற்றியோ இவ் ஊடககங்கள் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. பொதுவில் தமது அடிப்படை நலன்களிற்கு பாதிப்பு வரும் போது இவ் ஊடககங்களில் சுயநலமே தலைநிமிர்ந்து நிற்கின்றது. இதுவே கடந்த கால வரலாறு.




நோர்வேஜிய ஊடகங்களைப் பொறுத்தவரை இவ்விடயத்தில் நன்றிக்டன் செலுத்தவதில் ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போலவே இவர்களும் முன்னணி வகிக்கிறார்கள் அதாவது அமெரிக்கா என்ற ஒரு நாடு இராணுவ பலத்துடன் இருந்தால் தாங்களும் இறுதிவரை பாதுகாப்பாக இருக்கலாம் என்பதாகும். ஆனால் இதில் சிறிளவும் உண்மையில்லை. பொரளாதார சமத்துவமும் பங்கீடும் சரியான முறையில் பகிரப்படாதவரை உலகின் எந்த தேசிய இனமும் நிரந்தர பாதுகாப்புடன் இருக்க முடியாது. இதை ஏனோ பெரும்பாலான ஊடகங்கள் புரிந்துகொள்வதில் அடக்கப்படும் ஒடுக்கப்படும் மக்கள் சார்பாக சில அனுதாபங்களை தெரிவிப்பதன் மூலம் அம்மக்களின் சார்புநிலை கொண்டவர்களாக தங்களைக் காட்டிக் கொள்ள முனையும் இவ் ஊடகங்கள் உண்மையில் தமது எஜமான விசுவாசத்திற்கு சேவகம் செய்ய எப்போதும் தயாராகவே இருக்கின்றனர். இதற்கு ஒரு நல்ல உதாரணம் நோாவேஜிய தேசிய தொலைக்காட்சி நிறுவனமான NRK வில் ஈரானியத் திரைப்படமான ***"smaken av kirsebar"*** என்ற திரைப்படம்செப்டம்பர் 14ஆம் திகதி காண்பிக்கப்படும் என நீண்ட நாட்களிற்கு முன்பே தெரியப்படுத்தியிருந்தனர். ஆனால் அன்று அத்திரைப்படம் காண்பிக்கப்படவில்லை. மாறாக கிரேக்க திரைப்படமான "Evigheten og en dag" என்ற திரைப்படம் காண்பிக்கப்பட்டது. ஈரானிய திரைப்படமான "smaken av kirsebar" 1997இல் வெளியாகி பல பரிசில்களைக் குவித்த சிறந்த ஒரு திரைப்படம். 1977இல் Cannes திரைப்பட விழாவில் தங்கப் பதக்கத்தையும் அதேயாண்டு யுனெஸ்கோ தங்க விருதையும் பெற்றிருந்தது. படத்தின் இயக்குனர் பிரபல்ய இயக்குனர் Abbas Kairostami.

இத்திரைப்படத்தின் உள்ளடக்கம் தற்கொலை மனநிலையுள்ள ஒரு ஈரானிய மனிதன் சுயமாக தற்கொலை செய்து கொள்ள முடியாத சூழலில் அதனை செய்யக்கூடிய ஒரு நபரை தேடி அலைந்து கொண்டிருக்கிறான். தன்னை கொலை செய்பவனிற்கு அதற்கு ஈடாக ஒரு பெருந்தொகை பணத்தையும் தரத் தயாராக இருக்கிறான். தேடித் தேடி அலைந்து கடைசியில் ஒரு ஆப்கானிஸ்தான் நபரை தேடி பிடிக்கிறான். மிகுந்த மத நம்பிக்கையில் ஒரு வகையில் மதவெறியனென கூறத்தக்க அவ் ஆப்கானிஸ்தான் நபரிடம் தன்னை கொலை செய்யும் பொறுப்பை ஒப்படைக்கிறான். ஆனால் படத்தின் இறுதியில் தனது தற்கொலை முயற்சியை அவ் ஆப்கானிஸ்தான் நபரின் வழிகாட்டலினால் தூக்கியெறிந்துவிட்டு தெளிவான மனநிலையுடன் வாழத் தொடங்குகிறான். இத்திரைப்படம் இயக்குனரின் சமாதானம், சுதந்திரம் மாற்று கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலை போன்றவறறிற்கு கிடைத்த வெற்றியாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையில் NRK தொலைக்காட்சி நிறுவனம் இஸ்லாம் பற்றியும் அதற்கு எதிரான ஒரு பக்க கருத்துக்கு மாற்று சூழலை ஏற்படுத்த விரும்பியிருந்தால் இதைவிட அருமையான வாய்ப்பும் சூழ்நிலையும் கிட்டியருக்க முடியாது ஆனால் அன்றைய பகல் முழுவதும் அடுத்த நாள் செய்தியிலும் ஜோர்ஜ் புஷ்ஷின் சிலுவைப்பயணம் பற்றியும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் புனித யுத்தம் (ஜிகாத்) பற்றிய செய்திகளையுமே முக்கியத்துவப்படுத்தியிருந்தது.

மேற்கூறப்பட்ட சம்பவத்தில் இருந்து நாம் புரிந்து கொள்வது யாதெனில் ஊடகங்கள் பெரும்பாலும் ஒரு பக்க செய்தியையே முக்கியத்துவப்படுத்துகின்றன. பல சமயங்களில் ஊடககங்களினால் வெளியிடப்படும் "செய்தி வடிவங்கள்" அவற்றின் அப்பட்டமான நோக்கத்தை புடம்போட்டு காட்டுவதாக அமைந்து விடுகின்றன. உதாரணமான ஒரு செய்தியை பாரப்போம். முதலில் பயங்கரவாத செயலினால் பாதிக்கப்பட்ட நியுயோர்க் நகர காட்சிகள் இடம்பெறும் அதை தொடர்ந்து அமெரிக்கா ஜனாதிபதியின் பேச்சு அவரது அறிக்கைகள் வெளியிடப்படும். இதை தொடர்ந்து ஆப்கான் தலிபான்கள் பற்றியும் அவர்களின் கொடுமையான அடக்குமுறைகள் பற்றி செய்தி இடம்பெறும். இதை தொடர்ந்து ஐரோப்பாவில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முயற்சிகள் பற்றிய செய்தி இடம்பெறும். தொடாந்து ஆப்கானிஸ்தான் வருமையும் மக்களின் அவலமும் இடம் பெறும் இதைத் தொடர்ந்து நியுயோர்க்கில் பாதிக்கப்பட்ட மக்களின் சோகம் கண்ணீருடன் வர்ணிக்கப்படும் அதைத் தொடர்ந்து அமெரிக்க அரசும் ஐரோப்பிய யூனியனும் ஆப்கான் மக்களின் பசி பட்டினியை போக்க பெருந்தொகை பணமும் உணவு பொருட்களும் அனுப்பி வைக்கப்படும் என்ற செய்தியுடன் தொலைக்காட்சி நிறுவனமும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் பற்றிய தனது செய்தியை முடித்துக்கொள்ளும்.



மேற்கூறிய செய்தியின் ஒழுங்கு முறைகளை சீர்தூக்கிப் பார்த்தால் இவ் ஊடகங்கள் எவ்வாறு திட்டமிட்டு ஒரு பக்க சார்பான கருத்துக்களை திணித்து வருவதையும் ஒரு இனத்திற்கு அல்லது குறித்த ஒரு மதத்திற்கு எதிரான எதிர்ப்புணர்வை திட்டமிட்டு நடத்தி வருவதையும் உணர்ந்து கொள்ளலாம்.

நியுயோர்க் வாஷிங்டன் சம்பவங்களை முன்னிட்டு வரிந்துகட்டிக்கொண்டு

*புனித யுத்தத்திற்கு மாற்றீடாகவே தங்களின் அடாவடித்தனங்களிற்கு நியாயம் கற்பிக்கவுமே தற்போது சிலுவைப் பயணம் பற்றிய கருத்துக்களை வெளியிடத் தொடங்கியுள்ளனர். இதன்மூலம் இவ்வளவு காலமும் தங்களால் மூடிமறைக்கப்பட்டிருந்த மதவெறியையும் இவர்கள் வெளிச்சம் போட்டு வெளிக்காட்டத் தொடங்கியுள்ளனர்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புறப்பட்டுள்ள இவ் ஊடகங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டது போல் எஜமான விசுவாசம் மட்டுமன்றி பல சமயங்களில் முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றன-வந்திருக்கின்றன. இன்றைய தலிபான் அரசக்கும் பின்லாடனுக்கும் நேரடியான இராணுவ பயிற்சியை அமெரிக்க உளவு ஸ்தாபனமே வழங்கியது. என்பது பற்றியொ முன்னைய சோவியத் யூனியனுக்கு எதிரான போரில் இவ் தலிபான்களும் பின்லாடனும் அமெரிக்க உதவியை பெற்றுக்கொண்டே அப்பாவி ஆப்கான் மக்கள் மீதான ஒடுக்குமுறையையும் பெண்கள் மீதான அதிதீவர கட்டுப்பாடுகளையும் மேற்கொண்டபோது இவ் ஊடகங்கள் எங்கிருந்தன. ஈரான்-ஈராக் யுத்தத்தில் ஈராக்கை தமது செல்லப்பிள்ளையாக அங்கீகரித்து வாரி வாரி வழங்கியபோது அவ்வுதவிகளை கொண்டே குர்திஸ்தான் மக்களை கொடுரமாக வேட்டையாடிய சதாம் உசேனைப் பற்றி ஏன் இவ் ஊடகங்கள் அப்போது வாய்திறக்கவில்லை. மாறாக சதாம் தமது நலன்களிற்கு எதிராக திரும்பியதும் மனித உரிமைமீறல் ஜனநாயகம் பற்றி கூக்குரலிட்ட இவ் ஊடகங்களின் போலித்தனத்தை எங்கே போய் கூறுவது இவையெல்லலாவற்றையும் விட மிகவும் வேடிக்கையான செயல் நோபல் சமாதான பரிசிற்கு ஜோர்ஜ் புஷ்ஷின் பெயரும் முன்மொழியப்பட்டது தான்.

கடந்த செப்டம்பர் மாதம் 26ஆம் திகதி நோர்வேயின் பிரபல்யமான பத்திரிகையான Aftenposten பத்திரிகையில் பிரபல எழுத்தாளர் Gerts Nygårdshaug எழுதிய அமெரிக்காவிற்காக ஒளியெற்றாத நாங்கள்" என்ற புத்தகம் பற்றிய விபரம் வெளிவந்துள்ளது. நியுயோர்க் சம்பவம் இடம்பெற்ற சில நாட்களில் எழுதப்பட்ட இப்புத்தகத்தில் சர்வதேச அரங்கில் அமெரிக்கா மீதான வெறுப்பிற்கு காரணத்தை தேடுகின்றார். CNN தொலைகாட்சியை தொடாந்து இரு நாட்களாக பார்த்த பின்பே இப்புத்தகத்தை எழுத தோன்றியதாக குறிப்பிடும் இவர் பழிக்குப்பழி இரத்தத்திற்கு இரத்தம் என இவ் ஊடகங்கள் எழுப்பும் குரலொழியையிட்டு தான் ஆச்சரியப்படவில்லை என கூறுகின்றார் ஏனெனினல் இவ் ஊடகங்கள் எப்போது பிரச்சினைக்குரிய விடயங்களிற்கு சரியான காரணங்களை தேடும் தேடலில் ஈடுபடுவதில்லை என குறிப்பிடுகின்றார். அமெரிக்க ஜனாதிபதிக்கு நோபல் சமாதான பரிசு வழங்குவது பற்றிய முன்மொழிவு, ஒருவகையில் பிரச்சினைக்குரிய காரணங்களை தேடுவதற்கு விருப்பமில்லாத அல்லது அதன் விளைவுகளுக்கு ஈடுகொடுக்க முடியாத நிழலயில் ஏற்பட்டுள்ள பயத்தின் காரணமாகவே நோபல் சமாதான பரிசுக்கு புஷ் பெயர் முன்மொழியப்பட்டுள்ளதாக இவர் குறிப்பிடுகின்றார்.

இன்றைய நவீன உலகின் ஊடகங்களின் தாக்கம் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் நிலவுகின்றது. தனிமனிதனிற்கும் சரி அல்லத ஒரு சமுதாய இனத்திற்கும் சரி ஊடகங்கள் இன்றியமையாத பங்களிப்பை நல்குகின்றன. பொதுவில் ஒரு உடகம் தனது செய்தி வெளிப்படுத்தலில் பொதுமக்கள் கருத்துருவாக்கத்திற்கு முன்னின்று உழைக்க வேண்டும். ஆனால் பெரும்பாலான சமயங்களில் ஊடககங்கள் தாமே பொதுமக்கள் கருத்தை உருவாக்கி விடுகின்றன. பின்னைய நிலையோ பெரும்பாலான ஊடகங்களின் சமுதாய பங்களிப்பாக விளங்குகின்றன. இந்நிலை மாறாதவரை சிலுவை பயணங்களும் புனித யுத்தமும் தொடரும் ஜோர்ஜ் புஷ் மட்டுமல்ல இஸ்ரேலிய பிரதம் ஏரியல் சரோனிற்கும் நோபல் பரிசு கிட்டும் ஊடகங்களும் தலையாட்டும் தஞ்சாவூர் பொம்மைகளாக ஆடிக்கொண்டே இருக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நமது நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் ஊடகங்கள்

என்.சரவணன்



*"மத்திய கிழக்கில் ஒஸாமா பின்லாடனின் பேட்டியை எந்த ஊடகமும் வெளியிடக்கூடாது."*

இது அமெரிக்கா மத்திய கிழக்கு இஸ்லாமிய நாடுகளுக்கு சமீபத்தில் வெளியிட்ட எச்சரிக்கை. உலகின் அதி வல்லமை பொருந்திய அமெரிக்காவா இந்த மத்திய கிழக்கு ஊடக வெளிப்பாட்டுக்கு பயப்படுகிறது என்று ஆச்சரியம் எற்படலாம். ஆனால் அதுதான் உண்மை. "சர்வ வல்லமை படைத்த" சண்டியருக்கும் ஊடகத்தின் பாத்திரம் என்ன என்பது நன்றாகவே தெரியும். இதே வேளை நியுயோர்க்கின் மீதான தாக்குதலை பற்றி ஊதிப்பெருப்பிக்கின்ற காட்சிப்படுத்தல்கள் தொடர்ச்சியாக ஒரு மாதகாலமாக திரும்பத் திரும்ப ஒளிபரப்பப்பட்டு அனைவரதும் உணர்ச்சிகளும் தூண்டப்பட்டன. ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல் இலக்கு தவறாதது என்பதை காட்ட திரும்பத் திரும்ப செயற்கைக்கோளின் படங்களின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட சில படங்கள் மட்டும் திரும்பத் திரும்ப காட்டப்பட்டன. அமெரிக்கத் தாக்குதலில் மாண்டவர்களைப்பற்றி திரும்பத் திரும்ப காட்டடுவதும் அதே வேளை முஸ்லிம்களின் ஆரவாரங்களை மட்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டுவதுமான திரிக்கப்பட்ட செய்திகளை காட்சிப்படுத்தல்களுக்கூடாக ஆப்கானிஸ்-தான் மக்களின் மீதான (குறிப்பாக முஸ்லிம் மக்களின் மீதான) ஆத்திரத்தை தந்திரமாக துாண்டிக் கொண்டேயிருந்தது. இதே சாட்டொடு பாலஸ்தீனத்தில் இஸ்ரேலின் தாக்குதல்கள் முற்றுமுழுதாக மூடிமறைக்-கப்பட்டன. ஈராக் மீதான தாக்குதல்கள் மூடிமறைக்கப்பட்டன. முஸ்லிம் மக்களின் உண்மையான நியுயோர்க் நிகழ்வு பற்றிய யதார்த்தமான அபிப்பிராயங்கள் மூடிமறைக்கப்பட்டன. சம்பவத்தின் பின்னணி குறித்த விபரங்கள் தெரியாத நிலையில் ஒரு நாட்டின் மீதான அனைத்து தாக்குதல்களும் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. நடத்தப் போகும் அட்டுழியத்துக்கான முன்கூட்டிய நியாயங்கள், சோடனைகள் வேகமாக பரப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டா-ளிகளான மேற்குலகு உலகிலேயே மிகப்பெரும் பயங்கர ஆயுதமான ஊடகத்-தைத் தான் இவையனைத்துக்கும் நம்பியிருந்தன. 90களில் ஈராக் மீதான அமெரிக்க தாக்குதல்கள், மற்றும் அதன் நியாயப்படுத்தல்கள், நேரடியான ஒளிபரப்புகள் மூலம் ஆற்றிய பாத்திரத்தை இன்னமும் நாம் மறந்திருக்க மாட்டோம். ஊடகம் பற்றிய நாம் இத்தனை துாரம் விளங்க முடியாதளவுக்கு இதே ஊடகங்-களால் நாம் வழிநடத்தப்படுவது கூட நமக்கு தெரியாதபடி நாம் வைத்திருக்கப்பட்டிருப்பது தான் மிகப் பெரும் அவலம். இது குறித்த நமது ஆழ்ந்த பார்வையை மேலும் நாமிங்கு செலுத்துவோம்.

அது என்ன?

இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் தீர்மானிக்கும் சக்தியாக ஊடகம் (media) இருக்கப்போகிறது. ஊடகத்தின் நேர்ப்-படியான (positive) பாத்திரத்தைப் போலவே எதிர்மறை (nagative) பாத்திரமும் உண்டு.

ஊடகம் இன்று நம்மையெல்லாம் வழிநடத்துகிறது. நம்மை வழிநடத்துகிறது என்று கூறப்படுவதன் அர்த்தம் இன்றைய எமது சிந்தனைகளை தீர்மானிப்பதாக அது ஆகிவிட்டிருக்கிறது.

இன்றைய பெரும்போக்கு (main-



stream) எது என்று தீர்மானிக்கும் சக்தியாக அது ஆகிவிட்டிருக்கிறது. பிற்போக்கு ஆதிக்க சித்தாந்தங்களை பெருங்கதையாடல்களாக ஆக்கி அவற்றை நிலைநிறுத்தும் கருவியாக இது ஆகிவிட்டிருக்கிறது.

ஊடகத்தை யார் கொண்டிருக்கிறாரோ அவரிடம்/அச்சக்தியிடம் மனித நடத்தையை கட்டுப்படுத்தும் அதிகாரம் இருக்கிறதென்று அர்த்தம் என்பர் சிலர். இது உண்மையிலும் உண்மை. ஊடகத்தை கொண்டிருப்பவர் அல்லது கொண்டிருக்கும் சக்தியிடம் சிந்தனையை ***மட்டுப்படுத்தும்,***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கட்டுப்படுத்தும், வழிநடத்தும்** சக்தி உண்டு.

இவ்வாதத்துக்கு மறுப்பு கூறும் சாரார் இதனை, இன்னும் ஊடகம் சென்றடையாத பின்தங்கிய நாடுகளில்/பின்தங்கிய கிராமங்கள் அதிகமுள்ள உலக சமுதாயத்தில் இக்கருத்து எப்படி சரியாகும் என வினவுவர். ஆனால் பின்தங்கச் செய்யப்பட்ட சமுதாயங்களில் நிச்சயம் ஊடகம் நேரடியாக சென்றடைய வேண்டுமென்பதில்லை. அந்த சமுதாயங்களை அதிகாரம் செலுத்துகின்ற சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டம்சங்கள் இந்த ஊடகங்களால் ஏலவே வழிநடத்தப்பட்டிருக்கும். ஆக, இன்று இந்த ஊடகம் வழிநடத்தாத எந்த



சமூகமும் உலகில் இல்லை.

ஊடகம் இன்று சகலவற்றையும் தீர்மானிக்கின்ற முக்கிய கருவியாக ஆகிவிட்டிருக்கிறது. இன்றைய ஊடகங்களை தன்னகத்தே கொண்டிருக்கும் அதிகாரத்துவ சக்திகள், தமது அதிகாரத்தை நிலைநாட்ட இந்த ஊடகங்களை மிகவும் தந்திரமாகவும் நுட்பமாகவும் கையாண்டு வருகின்றன. ஏற்கெனவே புரையோடிப் போயிருக்கின்ற அதிகாரத்துவ சிந்தனைகளை, ஆதிக்க சிந்தனைகளை, உறுதியாக பலப்படுத்துவதில் இவை, இந்த கைதேர்ந்த ஊடகங்களை கையாள்கின்றன.

ஆதிக்க பிற்போக்கு சிந்தனைகளையும், மரபார்ந்த அதிகார ஐதீகங்களையும் மீளுறுதி செய்கின்ற வகையில் அதன் சித்தாந்த மேலாதிக்கத்தை இந்த ஊடகங்களைக் கொண்டே இன்று உலகம் முழுவதுமாக அதிகார சக்திகள் செய்து வருகின்றன.

எனவே தான் உலகின் பல்வேறு புரட்சிகர சக்திகள் இன்று ஊடகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த முனைப்பு காட்டுகின்றனர். அதுமட்டுமன்றி இன்றைய புரட்சிகர சமூக மாற்றத்துக்காக போராடும் சக்திகள் எதிரி கொண்டிருக்கும் இந்த ஊடக ஆற்றலை எதிர்த்து நிற்கக்கூடிய வகையில் ஊடக வளங்களை/ஆற்றலை தாமும் கைப்பற்ற முனைகின்றன. இது இன்றைய அதிகாரத்துக்காகப் போராடும் சகல சக்திகளுக்குமான முன்நிபந்தனையாக - சித்தாந்த மேலாதிக்கத்தை நிலைநாட்டுகின்ற ஊடகங்கள்- ஆகிவிட்டிருக்கின்றன.

இந்த ஆதிக்க சித்தாந்தங்களை நிலைநாட்டுவதிலும் மூளைச்சலவை செய்து அடிமைத்துவ சமூக அமைப்பை ஏற்படுத்தவும், அடிபணிய வைக்கும் முயற்சியிலும் இந்த ஊடகங்களை மிகவும் நுட்பமாக பயன்படுத்தி வருகின்றன.

நோம் சொம்ஸ்கி இதனை தொடர்பூடக பயங்கரவாதம் (Media Terrorism) என்கிறார். இந்தப் போக்கை ஆராய்கின்ற இன்னும் சில சமூகவியலாளர்கள் இதனை தொடர்பூடக மாபியா (Media Mafia) என்றும் ஊடக வன்முறை (Media Violation) என்றும் குறிப்பிடுகின்றனர். ஒட்டுமொத்தத்தில் இந்த ஊடகங்கள் இன்று "அதிகாரத்துவத்தின் கருவிகளாக" (Media as a Weapon of Power) பயன்படுத்தப்படுகின்றன.

ஊடகங்களின் பன்முகத்தாக்கம் பற்றிய கரிசனையானது தகவல்தொழில்நுட்ப வியாபகத்தோடு அதிகரித்ததெனலாம். இந்நிலையில் தான் ஊடகவியல் பற்றிய சமூகவியல் ஆய்வுகள் இன்று அதிகரித்துள்ளன. சிவில் சமூகத்தில் அது ஆற்றும் பாத்திரம், உற்பத்தி உறவுகள்- குறிப்பாக மூலதனம் இதில் செலுத்தி வருகின்ற நிர்ப்பந்தங்கள், மூலதனத் திரட்சி ஊடகத்தில் காலூன்ற எடுத்துவரும் முயற்சி,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக பன்னாட்டு நிறுவனங்கள் தரகு முதலாளிகளுக்கூடாக ஊடகத்தைக் கைப்பற்றுவதில் எடுத்துவரும் முயற்சிகள், நவீன அரசுகள் தனது அடக்குமுறை இயந்திரங்களில் ஒன்றாக இதனை பயன்படுத்த தலைப்படுகின்ற போக்கு, அவ்வாறு அடக்குகின்ற மற்றும் அடக்கப்படுகின்ற சக்திகளின் எதிர்காலம் என பல கோணங்களில் இவை குறித்து அலச வேண்டியுள்ளது.

பெரும்பாலும் ஊடகத்தின் உட்கட்டமைப்பு (infra structure) பற்றியே பெருமளவான ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கிற நிலையில் அதன் புறநிலை தலையீடு, தாக்கம் எதிர்காலம் குறித்து தற்போதைய ஆய்வுகளில் கூடிய கரிசனை கொள்ளப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே எமது சமூக அமைப்பில் நிலவுகின்ற ஆதிக்க சித்தாந்தங்களை மீளுறுதி செய்து, அதனை மீள கட்டமைக்கின்ற பணியினை ஆற்றுவதே, ஆதிக்க சக்திகள் தமது அதிகாரத்தை நிலைநாட்ட முன்நிபந்தனையாக இருக்கிறது. எனவே அதிகாரத்துக்கு கட்டுப்பட்டு, அடிமைத்துவத்தை நிலைநாட்டி அதற்கு அடிபணிய வைக்கவோ அல்லது அவற்றுடன் சமரசம் செய்து கொண்டு வாழவும், பழக்கவும் ஏற்கெனவே எமது சமூக அமைப்பில் மதம், கல்வி, பண்பாட்டு கலாசார ஐதீகங்கள், சட்டம் என நிறுவப்பட்டுள்ளன. இவ்வத்தனையையும் ஒருங்கு சேர செய்து முடிக்க இலகுவான வழியாக இன்றைய ஊடகம் ஆற்றல் மிகுந்ததாக உள்ளது. எனவே தான் ஆதிக்கச் சக்திகள் கருவிகள் இதில் அக்கறை செலுத்துவது இன்றிமையாததாக ஆகிவிட்டிருக்கிறது.

அடக்கப்படும் மக்கள் பிரிவினர் முகம் கொடுக்கும் இன்னல்கள் வெகு சாமர்த்தியமாக மூடி மறைக்கும் ஆற்றல் இந்த ஊடகத்துக்கு உண்டு. அதுபோல இல்லாத ஒன்றையும் இருப்பதாக காட்டவோ அல்லது அதனை ஊதிப்பெருப்பிக்கும் ஆற்றலும் இந்த ஊடகத்துக்கு உண்டு. இவ்வாறு மறைப்பதும், ஊதிப்பெருப்பிப்பதும் ஊடகத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் சக்திகளின் நலன்களிலேயே தங்கியிருக்கின்றன.

கிளின்ரன் மோனிக்கா லிவின்ஸ்கி விவகாரம் பற்றி திரும்பத்திரும்ப பேசிய



ஊடகம் உள்நாட்டில் நடந்த கோணேஸ்வரி குறித்தும், கிருஷாந்தி குறித்தும் அதை விட குறைந்த முக்கியத்துவத்தையே தரும். சிங்கள ஊடகங்கள் அதை விட குறைந்த முக்கியத்துவத்தை தரும் அல்லது ஒன்றும் தராது. கிளின்ரனின் நாய்க்கு சுகமில்லாமல் போனது, சர்வதேச அளவில் செய்தியாகும் அதே வேளை வன்னிப் பட்டினிச் சாவு உள்நாட்டிலும் தெரியாமல் செய்யப்படும்.

அமெரிக்காவில் ரொனால்ட் ரேகனும், தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா...., இலங்கையில் காமினி பொன்சேக்கா போன்ற வெறும் திரையுலக நட்சத்திரங்கள் அரசியல் பிரமுகர்களாக ஆக்கப்பட்டதும் இந்த சினிமா எனும் ஊடகத்தையும், ஏனைய ஊடகங்களும் ஊதிப்பெருப்பித்து


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்படுத்திய மாயை என்பதை நாமெல்லோரும் விளங்கிக் கொள்வோம்.

எப்போதும் எந்த சக்தியும் அல்லது தனிநபரும் தான் கொண்டிருக்கும் அக-புற, ஆற்றல் /வளங்கள் தக்கவைக்கப்படுவதற்காக/ அதிகரிக்கப்படுவதற்காக அவை அதிகாரமாக உருவெடுக்க வைக்கின்றன. வர்க்கம், பால்வாதம், இனவாதம், வயதுத்துவம், பதவி, சாதியம், நிறவாதம் என பல்வேறு வடிவங்களிலும் நிலவுகின்ற ஆதிக்க உறவுகள், அதிகாரத்துவமாக தொடர்ந்தும் நிலைபெற அவை நியாயம் கற்பிக்கப்பட வேண்டும். "மதத்தின்" பெயரால், "தூய்மை"யின் பெயரால் இந்த கற்பிதங்கள் குறித்து மூலைச்சலவை மிகுந்த சித்தாந்த மோதிக்கத்தை நிலைநாட்டியே ஆகவேண்டும்.

இப்படி கருத்தேற்றம் செய்யப்பட்ட கற்பிதங்களை நிலைநாட்டுவதில் ஊடகம் முக்கிய பங்காற்றி வருகின்றன.

இந்த வகையில் ஊடகம் பற்றிய நமது பார்வை எளிமைப்படுத்தப்பட்டே இருக்கின்றன. குறைத்து மதிப்பிடப்படுகின்றன. ஊடகம் நம்மை ஒன்றும் செய்து விடமுடியாது என்கின்ற மாயையில் இருத்தப்பட்டுள்ளோம். எனவே தான் ஊடகத்தின் வடிவம், பண்பு, அதன் திசைவழி என்பன குறித்து அவ்வளவாக எம்மத்தியில் அக்கறைக் கிடையாது. இலங்கை தொலைக்காட்சி சேவைகளில் 30 வினாடிகள் கொண்ட ஒரு விளம்பரத்துக்கு சராசரியாக அறுபதினாயிரம் ரூபா வரை அறவிடப்பட்டு வருகிறது என்பதைத் தெரிந்தால் அசந்து போவார்கள். ஒரு தடவைக்கு இவ்வளவு அறவிடப்படுகிறதென்றால் எத்தனை முறை குறிப்பிட்ட விளம்பரம் வருகின்றது? அப்படியெனில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட வேண்டும்? நம்மீது அது எந்த விளைவையும் ஏற்படுத்தப் போவதில்லையென்றால் ஒரு நிறுவனம் ஏன்



இவ்வளவு தொகையை அவ்விளம்பரத்துக்கென ஒதுக்குகிறது? அவ்வாறெனில் விளம்பரம் எவ்வாறு எம்மில் பிரதிபலிக்கின்றது? என்ன விளைவை ஏற்படுத்தி விடுகிறது?

தகவல் களஞ்சியங்களை வைத்திருக்கும் சக்திகளால் உலகு ஆளப்படப் போகிறது எனும் கருத்தாக்கம் வலுவாகி வருகின்றது. இது பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதை இன்டர்நெட் செய்திகள் கட்டுரைகளிலிருந்து அறிய முடிகிறது.

எது பற்றிய முடிவுகளுக்கு வருவதற்கும் அடிப்படையில் தரவுகளை-தகவல்களை நம்பியிருக்க வேண்டிய தேவை நிலவுகின்ற நிலையில் போட்டி போட்டுக்கொண்டு தகவல்களை முன்கூட்டியே அறிய /பெற முயற்சிகள் நடக்கின்றன. அது போலவே தகவல்களை களஞ்சியப்படுத்துவதற்கும் அவற்றைத் தருவதற்காகவும் /சந்தைப்படுத்துவதற்காவும் போட்டிகள் நிலவப்போகின்றன. இந்நிலையில் தகவல் தொழில்நுட்பத்தின் மீது மூலதனம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டது. 'நட்சத்திர யுத்தம்", "வான்வெளி யுத்தம்" என்கிற கருத்தாக்கங்கள் மங்கி இனி வரப்போகும் காலம் தகவல் யுத்தத்துக்கான (IT War) காலம் என்கிற கருத்தாக்கம் வலுவாகி வருகின்றன.

வெறும் தரவுகள்/தகவல்களை சித்தாந்த சுமையேற்றி பரப்புகின்ற வேலையை ஏற்கெனவே உலகில் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள் மேற்கொள்ளத் தொடங்கிவிட்டன. அமெரிக்கா இதற்காக தமது உயர்ந்தபட்ச தொழில்நுட்பத்தையும், வளங்களையும் பயன்படுத்தி வருவது இரகசியமானதல்ல.

தரவுகள், தகவல்கள் பரப்பப்படுவதற்கு/அனுப்பப்படுவதற்கு/விற்பனைசெய்யப்படுவதற்கு முன்னரே அதன் நுகர்வோர் யார் என்று இந்த தகவல் முதலாளிகளால் தீர்மானிக்கப்பட்டு விடுகின்றது. அதற்கேற்றபடி அதன் வடிவம், வரிசை, உள்ளடக்கம், பண்பு என்பன கட்டமைக்கப்பட்டுவிடுகின்றன.

இத்தகவல்களை வழங்குகின்ற சாதனமாக, சகலவற்றையும் தீர்மானிக்கும் சக்தியாக இது தோன்றி, வளர்ந்து, ஊடுருவி, வியாபித்திருக்கின்றது. இன்னும் சொல்லப் போனால் ஆரம்பித்திருக்கிற மில்லேனியத்தின் (ஆயிரம் ஆண்டுகளைக் குறிக்கின்ற millenium) முதல் நூற்றாண்டை தகவல் புரட்சி நூற்றாண்டு என்கின்றனர். தகவலைக் கொண்டிருக்கிற சக்திகளே அதிகார சக்திகளாக ஆகக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள் எனும் கருத்தாக்கம் இன்று நம்பக்கூடியதாக உள்ளது. ஆதிக்க சக்திகள் தமது அதிகாரத்துவத்தை தக்கவைக்க, அதனை விரிவுபடுத்த மிகக் கனமாக தகவல்களை உற்பத்தி செய்து, உற்பத்தி செய்யப்பட்ட அத்தகவலை அரசியல்மயப்படுத்தி/ கருத்தேற்றம் செய்து அல்லது புனைந்து/திரிபுபடுத்தி/பெருப்பித்து, சிறுப்பித்து சந்தைக்கு விடுகின்றன.

இதற்காக இரண்டு வகை பிரதான தந்திரோபாயங்களை அது அணுகும். முதலாவது, சந்தையில் ஏற்கெனவே கேள்வி அதிகம் (ஏற்கெனவே புரையோடிப்போயுள்ள ஆதிக்கக் கருத்துக்கள்) எதற்கு என பார்த்து அந்த இடைவெளியை நிரப்புவது. இரண்டாவது, தான் சந்தைப்படுத்த விரும்புகின்ற புதிய செய்திகளை/ கருத்தாக்கங்களை/புனைவுகளை சந்தைக்கு விட்டு சமூகத்தை அதற்கு பழக்கப்படுத்துவது, போதைகொள்ளச் செய்வது.

இதனை நாம் உன்னிப்பாக அலச வேண்டியிருக்கிறது. அடுத்த நூற்றாண்டின் மிகப்பெரும் தீர்மானிக்கும் சக்தியாக ஊடகம் இருக்கப்போகிற நிலையில் அதனை எதிர்கொள்ளத் தயாராக இருப்பது அவசியத்திலும் அவசியம்.

மொத்தத்தில் உலகில் ஆளும் வர்க்கங்கள்/ சக்திகள் தமது நவகாலனித்துவத்தை அடுத்த நூற்றாண்டுக்கும் எடுத்துச் செல்வது இந்த தகவல் தொழில்நுட்பத்தை நம்பியே என்பதை கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. இன்றைய உலகமயமாதல் போக்குக்கூடாக மலினத்துவத்தை வேகமாக மக்கள் மயப்படுத்துவதற்கும் இந்த தகவல் தொழில்நுட்பத்தை/ஊடகத்தைத் தான் நம்பியிருக்கிறது.

ஆக ஒட்டுமொத்தத்தில் நவ பாசிசம் என்பதன் புதிய வடிவம் உயர்தொழில்நுட்பம் மிகுந்த தகவல் தொழில்நுட்பத்துக்கூடாகவே மேற்கொள்ளப்படப் போகிறது. அதுபோல அதனை முறியடிக்க முனையும் எந்த சக்தியும் இந்த இதே ஊடகத்தை கருத்திற் கொள்ளாமல் துரும்பு கூட முன்னேற முடியாது என்பது குறித்து மீள மீள எச்சரிக்கை கொள்ள வேண்டியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செல்வி: 10 ஆண்டுகள்

## வீழ்வோமாயினும் வாழ்வோம்....

-சக்கு-

# கவிஞரும்



பெண்ணிலைவாதியுமான, எழுத்தாளருமான செல்வி (செல்வநிதி தியாகராசா) விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு இந்த வருடத்துடன் 10 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. 1991ஆம் ஆண்டு ஓகஸ்ட் 30ஆம் திகதி செல்வி கடத்தப்பட்டு சிறைவைக்கப்பட்டார்.

கருத்துச் சுதந்திரத்திற்கு ஆப்பு வைக்கின்ற எதிரிகளுக்கு நாங்களும் சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபித்த அம்சங்களில் செல்வி கடத்தப்பட்டதும் ஒன்று. செல்வி உயிருடன் இருப்பதாக நம்பி வந்த அவருடன் நெருங்கிய அனைவருமே மனந் தளர்ந்து போய்விட்டனர். அவரது தாயார் உட்பட எந்த உறவினரும் அவரை சென்று பார்க்க அனுமதிக்கப்படவில்லை. அவர் தேகாரோக்கியம் குன்றிய நிலையில் இருப்பதாக அஞ்சுகிறோம் என்று றொட்டர்டாம் போயற்றி இன்டர்நெஷனல் அறிக்கை 1994இல் அறிக்கை வெளியிட்டது.

1992இல் "எழுதுவதற்கான சுதந்திரம்" எனும் விருது PEN எனும் சர்வதேச அமைப்பின் விருது செல்விக்கு கிடைத்தது. இவ்விருதினை அதற்கு முன்னரே வழங்கத் தீர்மானித்திருந்தபோதும் இவ்விருதின் மூலம் சிறைவைக்கப்பட்டிருக்கும் அவருக்கு ஏதும் ஊறு நேரக்கூடும் என்றும் விருதினை அறிவிக்க வேணடாம் என்று செல்வியின் நண்பர்கள் பலர் அறிவித்திருந்ததாக 'பெண்' அமைப்பின் தலைவர் எட்மண்ட் கீலி அறிக்கையொன்றில் தெரிவித்திருந்தார். ஆனாலும் அவரது நிலை அல்லது அவரது இருப்பிடம் பற்றிய எதுவித தகவலையும் காணவில்லையென்பதால் விருதினை பகிரங்கப்படுத்த வேண்டிய தருணம் வந்துவிட்டதாக 1992இல் "பெண்" அமைப்பின் தலைவர் அறிவித்திருந்தார்.

சர்வதேச கவிதை அமைப்பு 1994க்கான International Poetry Society Award எனும் விருது வழங்கப்பட்டது. இது மானுட சுதந்திரத்திற்காகவும், அடிப்படை உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்த "சுதந்திரம் மறுக்கப்பட்ட" கவிஞர்களுக்காக வழங்கப்படுகின்ற விருதாகும். இவ்விருது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்கப்பட்டபின் விடுதலை செய்யப்பட்ட சர்வதேச கவிஞர்களைப் போலவே செல்-வியும் விடுதலை செய்யப்படவேண்டுமென இவ்வமைப்பு கேட்டுக்கொண்டது. இவ்விருது பற்றிய அறிவித்தலில் "அடையாளமற்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் மற்றும் கவிகளின் சோகமயமான நிலையை ஞாபகம் கொண்டு மனித வாழ்வுக்கும் மானிடத்துவ இருத்தலுக்கும் மரியாதை மறைந்த இழிந்த சூழலை ஞாபகம் கொண்டு இந்த ஆண்டின் தேர்வுக் குழு இலங்கை பெண் கவி செல்வியை கௌரவிப்பது என்று முடிவெடுத்து உள்ளது..." என குறிப்பிட்டிருந்தது. இலங்கையைச் சேர்ந்த ஒருவருக்கு முதன்முறையாக வழங்கப்பட்ட விருதான இதனை பெற்றுக் கொள்ள செல்வி அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் விடுதலைப் புலிகளினால் சிறைவைக்கப்-பட்டபடியே அப்போதும் இருந்தார். 1993 டிசம்பரில் வெளியான சரிநிகரில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் பேட்டியில் (இப்பேட்டியில் மூலமானது Counterpoint எனும் ஆங்கில சஞ்சி-கையாகும்) செல்வி தமது தடுப்புக் கைதியாகவே இருப்பதாக ஒப்புக் கொண்டிருந்தார். செல்வியின் விடுதலைக்-காக பல சர்வதேச நாடுகள் குரல் கொடுத்து வந்தன. மேலும் சர்வதேச மன்னிப்புச் சபை உள்ளிட்ட பல மனித உரிமை நிறுவனங்களும் அவரது விடுதலையைக் கோரியிருந்தன.

செல்வி இலங்கையில் சேமமடு என்ற கிராமத்தில் பிறந்தவர். கடத்தப்பட்டபோது யாழ் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் இறுதியாண்டு அண்டு மாணவியாக இருந்தார். அவர் பிரபல கவிஞராகவும், நாடகாசிரியராகவும் பணியாற்றியவர். பாலஸ்தீன கைதிகள் பற்றிய நாடகமொன்றையும் அவர் இக்காலத்தில் செய்திருந்தார். விடுதலைப் புலிகள் உள்ளிட்ட சில இயக்கங்களின் மனித உரிமை மீறலை விமர்சிக்கின்ற நாட-கமொன்றை அரங்கேற்றத் தயராகிக்-கொண்டிருக்கையிலேயே அவர் கடத்தப்-பட்டதாக நம்பப்படுகிறது. தமது படைப்புகளுக்கூடாக பெண் விடுதலை கருத்துக்களை பரப்பியவர். பல்கலைக்-கழத்தில் பெண்கள் இயக்கத்தில் தீவரமாக செயற்பட்டிருந்தார். வடக்கில் நடந்த யுத்தத்தின் போது பாதிப்புக்கும், குண்டுத் தாக்குதலுக்கும் உள்ளானவர்களுக்கு நிவராண உதவிகளை செய்வதில் ஈடுபட்டிருந்தார்.

தேசத்தை நேசித்தது தான் செல்வி செய்த குற்றம். மனிதத்தைக் கோரிய அவரது அர்ப்பணிப்பு தான் அவர் செய்த குற்றம். அவரது கவிதைகள் யுத்தத்தினால் நலிவுற்ற பெண்கள் பற்றியதும் யுத்தம் பற்றியதுமான சித்திரங்களையே வெளிப்படுத்தியது. இன்று அவர் எம்முடன் இல்லை. விடுதலையின் பேரால் கருத்துச் சுதந்திரத்தின் குரல் நசுக்கப்படுகின்ற அனைத்து சந்தர்ப்பங்க-ளிலும் நாங்கள் மீள எழுவோம். நாங்கள் மீளவும் உயிர்ப்போம். மானுட விடுதலைக்காக

விடுதலையின் பேரால் கருத்துச் சுதந்திரத்தின் குரல் நசுக்கப்படுகின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாங்கள் மீள எழுவோம். நாங்கள் மீளவும் உயிர்ப்போம். மானுட விடுதலைக்காக"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூரியனைத் தேடி



நிராசைகளால் சூழப்பட்ட எனது ஆன்மா
வாழ்வுக்காகத் துடிக்கிறது.
எங்கு நான் திரும்பினும்
ஆதிமனிதனாய்
சதையைப் பிளந்து இரத்தம் குடிக்கும்
மஞ்சள் பற்களின் அழுக்கு வாய்கள்
எச்சிலை வழியவிட்டபடி
கோரநகங்களும் குரூரக்கண்களுமாய்...

வென்றுவிட்ட எக்களிப்பில்
கும்மாளமடிக்கும்
மேதாவிலாசங்கள் ஒன்றும் புதியதல்ல.
நட்சத்திரக் கனவுச் சிந்தனைகளில்
சிம்மாசனங்களைத் தேடி
கால்களை இழந்தாயிற்று
பௌர்ணமிகள் வருவதாய் பல முறை
ஏமாந்து
சலிப்புத்தான் மிஞ்சியது.

வானிருந்து தேவர்கள் வழங்கும் ஆசிகளை
எண்ணிப் பூரித்த கற்பனைகள்
காலைப்பனியும் உலர்ந்து போனபின்
கருகிய புற்களாயின.
போரடிக்கும் எருதுகளாய், முடிவில்லாது
எத்தனை நாள்களாய் வளைய வருவது...
ஆர்ப்பாட்டமான கொச்சைத்தனத்துள்
அமிழ்ந்து போவது எவ்வாறு...?

பிரகாசமான பகல் பொழுதுகளைக்
காண்பது சுலபமில்லைத்தான்
ஆனாலும்,
மந்தார வானத்துள்ளும்
சூரியனை நான் தேட வேண்டும்.

**–செல்வி–**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனம்பேரி: ஒரு போராளியின் 30 வருட நினைவுகள்

1996 ஏப்ரல்.4 இல் வெளியான சரிநிகர் இதழில் வெளியான இக்கட்டுரை காலப்பொருத்தம் கருதி மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

சாரா

இக்கட்டுரை ஜே.வி.பி.யின் முதலாவது கிளர்ச்சியான 1971 கிளர்ச்சியின் 25 வருடங்கள் பற்றிய நினைவு கூரல் நாடெங்கிலும் நடந்து கொண்டிருந்த வேளை அதில் கொல்லப்பட்ட மனம்பேரியை நினைவு கூருகிறது. இக்கட்டுரை எழுதுவதற்கென்று முன்னாள் ஜே.வி.பி.யின் உறுப்பினர்களுடன் கதிர்காமத்திலுள்ள மனம்பேரியின் வீட்டுக்குச் சென்று வீட்டாருடனும் உரையாடினேன். கதிர்காமத்தில் மனம்பேரி கொல்லப்பட்ட இடத்தையும் சென்று பார்வையிட்டேன். மனம்பேரி வழக்கின் முக்கிய சாட்சிகளில் ஒருவரான எலடினையும் போய் சந்தித்தேன். அது தவிர 71 கிளர்ச்சி பற்றி விசாரணை செய்த விசேட நீதிமன்ற நீதிபதி ஏ.சி.அலஸ் எழுதிய நூலில் இருந்த தகவல்கள் சில கட்டுரை இக்கட்டுரைக்கு உதவிற்று. மேலும் மனம்பேரி வழக்கு இடம்பெற்ற (1973 - மே) காலப்பகுதியில் வெளியான பத்திரிகைகளை தேசிய சுவடிகூடத் திணைக்களத்தில் சில நாட்கள் இருந்து திரட்டிய தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில் இக்கட்டுரை தயாரிக்கப்பட்டது.

**இலங்கையில்** முதன் முதலில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினர். 1971 ஏப்ரல் கிளர்ச்சி என அழைக்கப்பட்ட இது அரசாங்கத்தின் கொடூர ஒடுக்குமுறையினால் அடக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் கொல்லப்பட்ட ம.வி.மு. பெண் போராளி மனம்பேரி பற்றி இந்த இருபத்தைந்து வருட நினைவில் சில குறிப்புகள்....

அவள் கொல்லப்பட்டு 25 வருடங்கள். 20,000க்கும் மேற்பட்ட அவளின் தோழர்கள் கொல்லப்பட்டு 25 வருடங்கள். அவளையும் அவளது தோழர்களையும் கொன்றழித்த அந்த அரசமைப்பு மட்டும் இன்னமும் வாழ்கிறது. அவர்களது போராட்டம்...?

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் போது அரச படையினால் கொல்லப்பட்ட பெண் போராளிகளில் அவளும் ஒருத்தி. இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட இளம், ஆண், பெண் போராளிகளை அரச யந்திரம் கொன்றொழித்தது. ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அத்தனைக்கும் நியாயம் கற்பித்த அரசு, ஒரே ஒரு கொலையை மாத்திரம் படையினரின் அதிகார துஷபிரயோகச் செயல் எனக் கூறி கண்துடைப்புக்காக விசாரணையை நடத்தியது. அவ்விசாரணை தான் புகழ்பெற்ற பிரேமவதி மனம்பேரியின் கொலை விசாரணை.



இதிலுள்ள இன்னொரு முக்கிய அம்சம் என்னவெனில் படையினருக்கு எதிரான விசாரணையொன்றில் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட விசாரணையும் இதுவொன்றே.

## கதிர்காமத் தாக்குதல்.

1971 ஏப்ரல் 5ஆம் திகதி ஜே.வி.பி.யினர் (மக்கள் விடுதலை முன்னணி) திட்டமிட்டபடி நாடெங்கிலும் உள்ள பல பொலிஸ் நிலையங்களை நள்ளிரவில் ஒரே நேரத்தில் தாக்கினர். யாத்திரைப் புகழ் பெற்ற கதிர்காமத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையமும் இதே நேரத்தில் தாக்கப்பட்டது. இதன் போது இரண்டு ஜே.வி.பி. உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். எனினும், தாக்குதல் மறுநாள் 6ஆம் திகதியும் இடம் பெற்றது. கதிர்காமப் பொலிஸார் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் பின்வாங்கியோடினர்.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் நாட்டின் கிளர்ச்சித் தளங்களுக்கு அனுப்பப்பட்டனர். கதிர்காமத்தில் லெப்டினன்ட் விஜேசூரிய தலைமையிலான குழுவொன்று ஏப்ரல் 15ஆம் திகதியன்று முகாம் அமைத்தது. இம்முகாம் இ.போ.ச.-வுக்கு சொந்தமான ஓய்வு நிலையத்திலேயே அன்று அமைக்கப்பட்டிருந்தது. இம்முகாம் அமைக்கப்பட்டதன் பிறகு கதிர்காமப் பொலிஸ் நிலையமும் புனரமைக்கப்பட்டது.

இம்முகாமை அமைத்தவுடனேயே லெப்டினன்ட் விஜேசூரிய முதல் வேலையாக கிளர்ச்சியாளர்களை வேட்டையாடுதல் எனும் போர்வையில் கதிர்காமத்தில் பல பெண்களைக் கைது செய்தும், கடத்தியும் கொண்டு வந்து முகாமில் தடுத்து வைத்ததுதான். ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி மனம்பேரியின் வீட்டுக்குச் சென்று அவளையும் கடத்திச் சென்றனர்.

## அழகு ராணி மனம்பேரி

பிரேமவதி மனம்பேரிக்கு அப்போது வயது 22. ஜே.வி.பி.யின் ஐந்து வகுப்புக்களையும் ஆர்வமாக முடித்தவள். கிளர்ச்சியின் போது கதிர்காமத்தில் பெண்கள் அணிக்கு தலைமை தாங்கியவள். ஜே.வி.பி.க்கான சீருடை தைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தவள். தகப்பனார் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தில் கண்காணிப்பாளர். மனம்பேரியுடன் கூடப்பிறந்தவர்கள் பத்துப்பேர். குடும்பத்தில் மூத்தவள். கதிர்காம வித்தியாலயத்தில் க.பொ.த. (சா-த) வரை கற்று முடித்துவிட்டு விட்டு பௌத்த பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தாள். 1969ம் புதுவருட அழகு ராணிப் போட்டியில் இரண்டாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டாள். 1970 ஏப்ரல் 16ம் திகதி நடத்தப்பட்ட புது வருட அழகு ராணிப் போட்டியில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டாள். அடுத்த வருடம் அதே நாள் கொலைஞர்களால் கடத்தப்பட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கடத்தலும் வதையும்

1971 ஏப்ரல் 16ம் திகதி காலை 9 மணியளவில் மனம்பேரியின் வீட்டுக்குள் புகுந்த லெப்டினன்ட் விஜேசூரிய தலைமையிலான குழு வீட்டிலுள்ள பொருட்களைக் கிண்டிக் கிளறி தூக்கியெறிந்தது. மனம்பேரியை அடித்து தலை முடியுடன் இழுத்துச் சென்றனர். தாய் லீலாவதி "பெட்டப்பிள்ளையப்பா ஒண்டும் செஞ்சு போடாதீங்கோ ஐயா!" என கதறி அழுத வண்ணம் பின் தொடர்ந்த போது காலால் உதைத்துத் தள்ளிவிட்டு மனம்பேரியை தூக்கிக் கொண்டு வாகனம் பறந்தது.

அன்றைய இரவு முழுவதும் மனம்பேரி சித்திரவதை செய்யப்பட்டாள். அடுத்தநாள் 17ம் திகதி மனம்பேரியிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

"ஐந்து வகுப்புகளிலும் கலந்து கொண்டாயா?"

மௌனம்

"ஜே.வி.பி.யுடன் எவ்வளவு காலம் தொடர்பு வைத்திருந்தாய்?"

"........"

"நீ என்னென்ன நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டிருந்தாய்?"

இதற்கும் மௌனம் சாதிக்கவே தங்களது வக்கிர இயல்பை வெளிக்காட்டினர். மனம்பேரி விசாரணை வழக்கின் போது வெளிவந்த தகவல்கள் இவை.

"சரி... நான் சொல்வதை அவதானமாகக் கேள். சொல்வதைச் செய்யாவிட்டால் உனது உயிர் போகும்." இது லெப்டினன்ட் விஜேசூரிய. அவர் தொடர்ந்தும் "உனது ஆடைகளைக் ஒவ்வொன்றாகக் கழற்று..."

"ஐயோ.. சேர், வேண்டுமென்றால் சுட்டுப் போடுங்கள். ஆடையைக் கழற்றச் சொல்லாதீங்க..." என மனம்பேரி கண்ணீர் விட்டுக் கதறினார்.

"அது எனது வேலை. நான் சொல்வதை மட்டும் நீ செய்" என துப்பாக்கியைத் தலையில் அழுத்தி மிரட்டிய போது அழுகையுடன் மேலாடைகளைக் கழற்றி உள்ளாடையுடன் இருந்தாள். மீண்டும் சித்திரவதைக்கு உள்ளாக்கி உள்ளாடைகளையும் கழற்றி விட்டு நிர்வாணம் ஆக்கினர். தனது கைகளால் மனம்பேரி மறைவிடங்களை மறைத்தாள்.

மனம்பேரியை லெப்டினன்ட் விஜேசூரிய முதலில் பாலியல் வல்லுறவு புரிந்தான். அதன் பின் மாறி, மாறி ஏனைய சில இராணுவத்தினரும் பாலியல் வல்லுறவு புரிந்தனர். இதே வேளை அதே முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய இளம் பெண்களும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்கள்.

ஒரு அறையில் இந்த அட்டுழியங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது பக்கத்து அறையில் "வெடகிட்டி கந்த பாமுல விகாரை"யின் பிக்குவும் இதே முகாமில் வதைக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்தார். இப்பிக்குவை தடுப்பிலுள்ள பெண்கள் மீது பலாத்காரமாக பாலியல் வல்லுறவு புரிய வைத்தனர். இறுதியில் இந்த பிக்குவையும் தோண்டி வைக்கப்பட்டிருந்த குழிக்கு அருகில் நிறுத்தி வைத்து சுட்டு வீழ்த்தினர். "புனித பூமி" என சொல்லப்படுகின்ற கதிர்காமத்தில் தான் இந்த கொடுமைகள் நிறைவேற்றப்பட்டன.

## உயிர் பிரிந்தது.

எல்லாவற்றையும் முடித்த பிறகு மனம்பேரியை கைகளிரண்டையும் மேலே தூக்கச் சொல்லி மீண்டும் பணிக்கப்பட்டது. திரும்பியவாறு வீதியில் நடக்க கட்டளை பிறப்பித்தனர். அரை மயக்க நிலையில் தள்ளாடியபடி துப்பாக்கி முனையில் வீதியில் நடத்தப்பட்டாள் நிர்வாணமாக. சார்ஜன்ட் அமரதாச ரத்னாயக்காவின் துப்பாக்கி முனையிலேயே மனம்பேரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீதியில் நடத்தப்பட்டாள். மனம்பேரியை முன்னே செல்ல விட்டு துப்பாக்கி தோட்டக்களால் முதுகைத் துளைத்தான் சார்ஜன்ட் அமரதாச. கீழே விழுந்த மனம்பேரியை மீண்டும் உலுக்கி நிறுத்தி நடத்தினான் மீண்டும் அவனின் துப்பாக்கிக் குண்டுகள் மனம்பேரியின் உடலைத் துளைத்தன.

"தண்ணீர் தண்ணீர்..." என முனுகிய மனம்பேரிக்கு எலடின் எனப்படும் வியாபாரி ஒருவர் தண்ணீர் கொடுக்க முற்பட்டபோது "விலகிப் போ! உதவி செய்ய முற்பட்டால் நீயும் கொல்லப்படுவாய்" என அச்சுறுத்தப்படவே அவரும் விலகிச் சென்றார். நடுவீதியில் சூட்டுக் காயங்களுடன் விழுந்து கிடந்த மனம்பேரியை அப்படியே விட்டுவிட்டு திரும்பினர். இராணுவத்தினர். பின்னர் ஊர் வாசிகளான எலடின் (இவர் இன்னமும் உயிருடன் இருக்கிறார். மனம்பேரியின் வழக்கில் முக்கிய சாட்சிகளில் இவரும் ஒருவர். இவரைச் சந்திக்க "சரிநிகர்" கதிர்காமத்துக்கு சென்ற நேரத்தில் "மன்னியுங்கள் அந்த கொடூர சம்பவத்தை நினைவுக்கு கொண்டுவர விரும்பவில்லை" என அது பற்றி கருத்துரைக்க மறுத்து விட்டார்.)

காதர், பெருமாள் ஆகிய ஊர் வாசிகளை அழைத்து பிணங்களைப் புதைப்பதற்கான குழிகளைத் தோண்டும்படி கட்டளையிட்டனர். அவர்கள் தோண்டினர். மனம்பேரியின் முனகலைக் கேட்ட எலடின் அருகில் சென்ற போது :அந்த பையனிடம் (பெருமாள்) எனது காதணிகள் இருக்கின்றன அதனைக் கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்து தங்கைக்கு அதனை கொடுக்கச் சொல்லுங்கள். நான் ஒருவருடனும் கோபமில்லை காமினி பாஸ் தான் குழுப்பிப் போட்டார்..." (கிளர்ச்சியின் போது கதிர்காமத் தாக்குதலுக்கு தலைமை தாங்கியவர் தான் காமினி பாஸ்) எனக் கூறிக் கொண்டே தண்ணீர் கேட்டிருக்கிறாள். உடனே தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு இராணுவ முகாமுக்குச் சென்று "உயிர் இன்னமும் இருக்கிறது. எனவே புதைப்பதற்கு முடியாது." என்பதைத் தெரிவித்தார். உடனே இருவரை அனுப்பி உயிரைப் போக்கும்படி பணித்தான் லெப்டினன்ட் விஜேசூரிய. அவர்கள் இருவரும் அப்பாவச் செயலை செய்ய முடியாது என திரும்பி விடவே இன்னொருவன் அனுப்பப்பட்டான். அவன் போய் இறுதியாக மனம்பேரியின் நெற்றிப் பொட்டில் சுட்டான். மனம்பேரி புதை குழியில் சாய்ந்தாள். (இறுதியாக சுட்ட நபர் இறுதி வரை அடையாளம் காணப்படவில்லை.)

முன்னைய வருடம் இதே நாள் அழகுராணியாக காட்சியளித்த அதே தபால் நிலையத்திற்கருகிலேயே மனம்பேரியின் உயிரும் பிரிந்தது. அதே இடத்தில் மனித புதைகுழிக்குள் புதைந்தது. அவளது உடல்.

மனம்பேரியின் படுகொலை தொடர்பான பொலிஸ் முறைப்பாடுகள் சிலவற்றின் பின்னர் கண்துடைப்புக்காகவே அன்றைய சிறிமா அரசாங்கம் மனம்பேரியின் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதென்றால் அது மிகையில்லை.

## கொலைஞர்களின் முடிவு.

1971ம் ஆண்டு மே மாதம் 24ம் திகதி முற்பகல் 10.30க்கு மனம்பேரியின் சடலம் புதைகுழியிலிருந்து மீள எடுக்கப்பட்டு வைத்திய பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. 1973 மே மாதத்தில் இவ்வழக்கு விசாரணை 11 நாட்கள் நடந்தது. வழக்கின் இறுதியில் லெப்டினன்ட் அல்பிரட் விஜேசூரிய சார்ஜான்ட் அமரதாச ரத்நாயக்க ஆகிய இருவருக்கும் பதினாறு வருட கடுழிய சிறைத்தண்டனை தீர்ப்பாக வழங்கப்பட்டது. 1973ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதி இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. தண்டனை வழங்கப்பட்ட இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவத்தினரும் தங்கள் மீதான தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தனர். இம்மேன்முறையீட்டு வழக்கு 1973 ஒக்டோபரில் நடத்தப்பட்டது. இவ்வழக்கிலும் சரியானதே என தீர்ப்பு வழங்கப்பட்டது. அவர்கள் தண்டனையை அனுபவித்து வந்தனர்.

அவர்களில் லெப்டினன்னட் விஜேசூரிய சிறையில் நோயுற்று மரணமானான். சார்ஜன்ட் அமரதாச தண்டனை முடிவுற்று விடுதலையான பின் 1988இல் ஜே.வி.பி.யினரால் கொல்லப்பட்டான்.



# தலித்தின் குறிப்புகள்

1

அருந்ததியன்

புகலிடத்தில் சாதியம் எப்படி இயங்குகிறது என்பது பற்றி அறிவதில் பல்வேறு சமூக ஆய்வாளர்களும் இன்னும் பலரும் ஆர்வமாக இருக்கின்றனர். பறை சஞ்சிகையில் இது குறித்த விடயங்களை இந்த இதழில் சில காரணங்களால் எழுத வேண்டாம் என்றிருந்தேன். ஆனால் எனது தனிப்பட்ட சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்வுகளும் சமூக விஞ்ஞானத்தை அறிந்தவர்கள் என்று நம்பியவர்கள் மத்தியிலும் கூட இருக்கின்ற குழப்பங்களும் தவறான புரிதல்களும், பிழையான விளக்கங்களும், கசப்பான நடத்தைகளுமே இந்த முறை சிறு குறிப்போடு இது குறித்து தொடங்கத் தூண்டியது.

வெளிநாட்டில் சாதியம் இல்லை என்கிற வாதத்தை வைப்பவர்கள் பெரும்பாலும் தாயகத்தில் சாதியம் எவ்வாறு இயங்கியது என்கிற பார்வையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, ஆக, இங்கு அது இல்லை என்கிற முடிவுக்கு வருவதைக் காணமுடிகிறது. வெறும் தீண்டாமையும், பெரிய ஏற்றத்தாழ்வைக் கொண்டுள்ள வர்க்க இடைவெளியையும் மட்டுமே கருத்திற் கொண்ட புரிதல் இவை. புகலிடத்தில் சாதியத்தின் பண்பு மாறவில்லை. அதன் வடிவங்கள் மாறியுள்ளன. குறிப்பாக அதுவும் சேர்ந்து இன்று நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. **modernize** ஆகியிருக்கிறது. அகமணமுறை எவ்வாறு இயங்குகிறது. பிரதேச ரீதியில் அணிதிரள்வதற்கூடாக அது மீளவும் புதிய வடிவில் எப்படி நிறுவனமயப்படுகிறது? கோவில் மற்றும் தேவாலயங்களில் எப்படி அது வேறு வடிவத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"புகலிடத்தில் சாதியத்தின் பண்பு மாறவில்லை. அதன் வடிவங்கள் மாறியுள்ளன. குறிப்பாக அதுவும் சேர்ந்து இன்று நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. modernize ஆகியிருக்கிறது."**

அமைப்பாகிறது?

பெண்களின் மீதான "புனிதத் தன்மை" சாதியத்துக்கூடாக எப்படி பட்டை தீட்டப்படுகிறது? இவை எவ்வாற இங்கு பல்வேறு கலாசார, கல்வி,, அரசியல் ரீதியில் நிறுவனமயப்படுகின்ற போது தாக்கம் நிகழ்த்துகிறது. இவற்றின் தலைமைகள் உருவாக்கப்படுகிற போது நடக்கின்ற குழுவாதங்களில் வேறூன்றியிருக்கின்ற சாதிய அம்சம் என்ன? வெளிநாடுளில் உள்ள பிரதேசங்களில் (தெருக்களில் அல்லது தொடர்மாடிகளில்) குடும்பங்களாக, ஊரார்களாக, ஒன்றுபடுவதன் பின்னணியில் இவை கொண்டிருக்கிற சாதிய உறவு மற்றும் வெளிப்பாடு என்ன என்பது குறித்து நிறையவே பேச வேண்டியிருக்கிறது. எப்போதும் போலவே இது குறித்து பேசப்படுகின்ற போது கிளம்பும் எதிர்ப்புகளுக்கும், தனிமைப்படுத்தப்படலுக்கும், பயந்து பலர் பேச முன்வருவதில்லை என்பது தான் இதன் மிகப்பெரிய அவலம். ஆனால் இவை பேசப்பட்டே ஆகவேண்டிய கட்டாயத்திற்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். மு்கியமாக அடுத்த தலைமுறைக்கும் இது கடத்தப்படும் ஆபத்து குறித்த அச்சத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம். நேரடியாகவோ மறைமுகமாகவோ இவை எப்படி இயங்குகின்றன என்பது குறித்து விளக்கம் கொடுக்கவே முடியாத அளவுக்கு தனிமைப்படவேண்டிய சூழல் இங்கு நிலவுகிறது.

தமது சாதி, ஊர், தொழில், வர்க்கம், மதம், போன்ற இன்னோரன்ன அடையாளங்களை இறுக்கிப்பிடிக்காத இடங்களும் இல்லாமலில்லை. சில இடங்களில் சிறிய எண்ணிக்கையில் இருப்பதால் மற்றவர்களையும் அரவணைத்துப் போவதில் உள்ள வசதிகளை உணர்ந்தாலும் கூட அவை வெடிக்கும் இடங்கள் கடைசியில் இப்படித்தான் இருக்கின்றன. புகலிடத்தில் சாதிய சச்சரவுகள் நேரடியாக நிகழாமல் இருப்பதற்குரிய காரணங்களில் ஒன்று இங்குள்ள சட்டங்களும் அரச கட்டமைப்பும் இடங்கொடுப்பதில்லை. சாதிகளைக் கடந்து வர்க்க ரீதியில் பலரது நிலைகளும் சமப்படுத்தப்படுகின்றன. சொத்துக்கள், கல்வி, தொழில் என்கிற ரீதியில் ஏனைய சாதியினரும் போட்டி போடக்கூடக் கூடிய வசதிகளைக் கொண்டிருந்தாலும், சமூக அந்தஸ்துக்கு இவை போதுமானதான பல இடங்களில் இருப்பதில்லை. சமூக அந்தஸ்துக்கு துணை சேர்க்கும் மிகப் பெரிய காரணியாக பல இடங்களில் சாதி வந்து சேர்ந்து விடுகிறது.

ஒரே சாதி ஒரே வர்க்கமாக இருந்த நிலை மாறி ஒரு சாதிக்குள் பல வர்க்கங்களை உருவாகியுள்ளன. அதே நேரத்தில் ஒரே வர்க்கம் இன்றைக்கு பல சாதிகளின் ஊடாகவும் இயங்கி வருகிறது.

ஒன்றை மட்டும் நாம் உணர வேண்டும். தாயகத்திலும் சரி, புகலிடத்திலும் சரி அடக்கப்படும் சாதியினரின் நாகரிகமும் கௌரவமிக்க வாழ்க்கையும் உயர் சாதியினரின் விருப்பு வெறுப்புகளுக்கு உட்டபட்டதாக கட்டமைக்கப்பட்டு வருவதை நுணுக்கமாக பார்த்தால் அடையாளம் காணலாம்.

பல்வேறு வடிவங்களைக் கொண்டு இயங்கி பன்முக தாக்கங்களை நிகழ்த்தி வரும் இவை குறித்து இனி வரும் இதழ்களில் எழுதுவோம். இது குறித்த பார்வைகளை நீங்களும் எழுதுங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*2000 ஜூனில் வெளிவந்த ராவய பத்திரிகையில் அதன் ஆசிரியர் குழுவிலுள்ள* **மஞ்சுள வெடிவர்தன** *எழுதி, செல்வர் என்பவரால் தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட கவிதை இது. சிங்கள வாசகர்களை நோக்கி எழுதப்பட்ட இந்த கவிதை மிகவும் பரபரப்பாக பேசப்பட்ட கவிதை. சிங்கள பேரினவாத சக்திகள் மத்தியில் சர்ச்சையையும் கிளப்பிவிட்டிருந்த கவிதை இது. மஞ்சுல வெடிவர்தனவின் கன்னி மரியா எனும் சிறுகதைத் தொகுதி சென்றவருடம் இலங்கை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. அது இன்னமும் நீதிமன்ற விசாரணையில் சிக்கியிருக்கிறது. "பறை" வாசகர்களுக்காக மீண்டும் அவரது கவிதை.*

# நான் லிங்கமாலா ஆனேன்

வெசாக்தின முழுநிலவு
தலையில்
கைவைத்து அழுகிறது
அதன் மூக்குச் சளி
சாரளம் வழியால்
தெறிக்கின்றது
அயல் வீட்டில்
வெசாக்கிற்கு மொட்டவிழ்ந்த
ஏழு தாமரைப் பூக்கள்
இன்னும் வாடவில்லை
ஐந்நூற்று ஐம்பது
புராணக் கதைகளை
சுருக்கி, நவீனப்படுத்தி
தூரத்தில் அமைத்த
வெசாக் பந்தலில்
இடைக்கிடை
விருது பாடுவது கேட்கின்றது
என்முன்
வெற்றுக்காகிதத் தாள்
கவிதைக்காக
விழித்திருக்கின்றது
சடுதியாக எங்கிருந்தோ
மிதந்து வந்த
இறைச்சித் துண்டமொன்று
காகிதத்தில் வீழ்ந்து
யோனியின் வடிவமைந்தது
அது
கோணேஸ்வரியினுடையது
அம்பாறையிலிருந்து
கொழும்பு வர
இத்தனை நாளா?
எவ்வளவு தூரத்தில் நம்
கண்களில் கண்ணீர்
குளிர்கின்றது

கண்ணீருக்கு மத்தியில் நான்
அங்குலி மாலாவாக அல்ல
லிங்க மாலா வாகினேன்
எனக்கு விரல்கள்
தேவையில்லை
ஆண்குறிகளே தேவை
வெகு பக்தியாக வலது கரத்தில்
இறைச்சியையும்
மறுகரத்தில் இறுக்கமாக
ஆயுதத்தினையும்
எடுத்துப் புறப்படலானேன்
வழியில் சந்திக்கும்
வீடுகளை தட்டி
சகல சிங்கள ஆண்குறிகளையும்
-வெட்டி நூலாகக் கோர்த்து
இறுதியில் எனது
ஆ.........
வேதனையை தாங்கிக் கொண்டு
ஸ்ரீபாத மலையின் கழுத்திற்கு
ஆண்குறிகளை மாலையாய்
சூட்டினேன்
என்னை தடுத்து நிறுத்த போதி
மாதவன் இல்லாததால்
நான் இதனைச் செய்தேன்
சகோதர பாசமற்ற
உணர்வு அற்ற
இனம் ஒன்று எதற்கு
என்முன் வெற்றுக்
காகிதம் அதன் மீது
இரத்தக்கறை
இது ஒரு தமிழ்க் கவிதை
அதனால் சிங்களவருக்கு
இது புரியவில்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எனது பார்வையில்...

# புலம்பெயர் தமிழிலக்கியத்தின் எதிர்காலம் பற்றி சில கேள்விகள்...



சமுத்திரன்

1980களில் தமிழ் இலக்கியல் ஒரு புதிய முனைப்பைச் சந்தித்தது. மேற்கத்திய நாடுகளில் புகலிடம் கோரிக்குவிந்த தமிழர்களிடமிருந்து பிறந்தது அந்த முனைப்பு. அது ஒரு புதிய மரபின் வருகையை அறிவித்தது. அந்த மரபை புலம்பெயர்ந்த தமிழ் இலக்கியமென அழைத்தோம். பின்னோக்கிப் பாக்கும்போது அதன் ஆரம்பகால வளர்ச்சி பிரமிப்பூட்டுவதாகவே இருக்கிறது. 1989இல் ஐரோப்பாவில் வாழ்நத தமிழ் அரசியல் இலக்கிய ஆர்வலர்களின் உழைப்பின் விளைவாக முப்பதுக்கு மேற்பட்ட சஞ்சிகைகள் வெளிவந்தன. அதே ஆண்டின் இறுதியில் ஒஸ்லோவின் "சுவடுகள்" குழுவினர் "துருவச் சுவடுகள்" எனும் கவிதைத் தொகுப்பினை வெளியிட்டனர். சுவடுகள் அப்போது ஒரு மாத சஞ்சிகையாக வெளிவந்து கொணடிருந்தது. அதே ஆண்டின் மார்கழி மாதத்தில் மேற்கு பேர்லின் நகரில் ஆறாவது இலக்கியச் சந்திப்பு மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது. அந்த இலக்கிய சந்திப்பின் பங்குபற்றி உரயையாற்றும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அந்த மேற்கு பேர்லின் நிகழ்ச்சியை நினைவு கூரும் போதெல்லாம் அங்கு இடம்பெற்ற கலந்துரையாடல்களும் விவாதங்களும் என் மனதிற்கு மட்டுமன்றி சர்வதேச நிலைமைகளும் பலவிதமான அரசியல் சமூக இயக்கங்களும் விவாதிக்கப்பட்டன. மூன்று நாட்கள் தொடாச்சியாக மண்டபத்திற்குள்ளேயும் வெளியேயும் பலவிதமான கருத்துப்பரிமாறல்கள். அந்த மூன்று நாட்களும் நான் இரவு ஒரு மணிவரை நண்பர்களுடன் கலந்துரையாடும் சந்தர்ப்பங்களைப் பெற்றேன். கிழக்கையும் மேற்கையும் பிரித்து வைத்த பேர்லின் சுவர் வீழ்ந்து சில நாட்கள். இந்த நிகழ்ச்சியும் நமது கலந்துரையாடல்களுக்கு ஒரு உந்துதலாக அமைந்தது.. தமிழரின் விடுதலை தமிழ்ச்சமூகத்தின் எதிர்காலம் சோசலிசத்தின் எதிர்காலம் இவையெல்லாம் இலக்கியச் சந்திப்பின் விவாதப் பொருட்களாயின. புலம்பெயர்ந்த தமிழரின் இலக்கியச் செயற்பாடுகளின் புலத்தின் புரப்பின் பாரிய பரிமாணங்கள் பற்றிப் பேசி வியந்தோம்.

இலக்கியச் சந்திப்புக்கள் ஐரோப்பாவில் தொடர்கின்றன. 2001 யூலையில் 28வது சந்திப்பு நோவேயின் பேர்கன் நகரில் இடம்பெற்றது. நான் அப்போது இலங்கை சென்றிருந்ததால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச்சந்திப்பில் பங்குபற்ற முடியவில்லை. பேர்லினுக்குப் பிறகு நான் பங்குபற்றிய இரண்டாவது இலக்கியச் சந்திப்பு பாரிசில் இடம்பெற்ற 27வது இலக்கியச் சந்திப்பாகும். இதில் கூட துரதிருஸ்டவசமாக முதலாம் நாள் மட்டுமே கலந்துகொள்ள முடிந்தது. பாரிஸ் சந்திப்பு நன்றாகவே இருந்தது. 1989இல் பேர்லினில் கண்டு அனுபவித்த உத்வேகத்தையும் அரசியல் விவாதங்களையும் பாரிசில் காணவும் அனுபவிக்கவும் முடியவில்லை. ஆயினும் சில விடயங்கள் அலசி ஆராயப்பட்டது.

புக்கள் தொடர்ந்து ஒரு நல்ல அறிகுறி என்பதை மறுக்க முடியாது. புலம்பெயர்ந்த தமிழரின் இலக்கிய மரபின் போக்குகள் உள்ளடக்கங்களின் தன்மைகள் பற்றி ஆழ அறிந்து கொள்வதற்கு இதுவரை இடம்பெற்ற சந்திப்புக்கள் பற்றிய ஒரு வரலாற்று ரீதியான விமர்சன ஆய்வுதேவை. இது இடம்பெறும் காலம் வந்துவிட்டது என்றே கருதுகிறேன்.

அதேவேளை புலம்பெயர்ந்த தமிழ் இலக்கியத்தின் எதிர்காலம் பற்றிய சில கேள்விகள் என் மனதில் எழுகின்றன.

"புலம்பெயர்ந்த தமிழ் இலக்கியத்தின் பாரிய எழுச்சிக்காலம் போய்விட்டது. அது வெளிநாட்டிற்கு இடம்பெயர்ந்த ஒரு சந்ததியின் முதலாவது பத்துவருட ஏக்கங்களின், தேடல்களின் ஆக்கத்திறன்களின் வெளிப்பாடு எனலாம்."

நல்ல அறிகுயாகவே இருந்தது. இலக்கிய அரசியல், தத்துவார்த்த வட்டங்களில் இன்று முக்கியத்தும்பெறும் சில விடயங்கள் அங்கு கிளப்பப்பட்டன. ஐரோப்பாவில் இன்று முனைப்பு பெற்றுள்ள பின்நவீனத்துவம் சார்ந்த சில அம்சங்கள் மேலெழுந்துவாரியாக அலசப்பட்டன. அதே வேளை உலகமயமாக்கல் பற்றி நான் முன்வைத்த விடயங்கள் பற்றி இடதுசாரி நண்பர்கள் பல கேள்விகளை எழுப்பினர். புலம்பெயர்ந்த தமிழர் மத்தியில் இன்றைய ஐரோப்பிய விவாதங்களில் ஈடுபாடுள்ள அறிவாளர்கள் உருவாகியிருக்கிறார்கள் என்பதை அறிந்தேன்.

இரண்டு இலக்கியச் சந்திப்புகளில் மட்டுமே பங்குபற்றிய என்னால் இதுவரை இடம்பெற்ற 28 சந்திப்புக்கள் பற்றிய ஒரு பொதுப்பார்வையை அல்லது தொகுப்பினைத் தரமுடியாது. ஆனால் இச்சந்திப்-

1990களின் முற்பகுதியிலிருந்து புலம்பெயர்ந்த தமிழ் குழுக்கள் வெளியிடும் சஞ்சிகைகள் அளவு ரீதியில் அருகி வருகின்றன. நீண்டகாலமாக வெளிவந்த "சுவடுகள்" போன்ற சஞ்சிகைகள் இப்போது நின்று விட்டன. இந்த அளவு ரீதியான வீழ்ச்சி தொடாக்கிறது. இதன் தன்மை ரீதியான விளைவுகள் எத்தகையவை? இந்தக் கேள்விக்கு ஒரு பொதுப்படையான பதிலைக் கொடுக்க விரும்புகிறேன். முதலாவதாக இந்த அளவு ரீதியான குறைபாடு புலம்பெயர்ந்த தமிழ் இலக்கியத்திற்கு இருந்து வந்த பன்முகத் தன்மைகளைக் குறுக்கியுள்ளதெனலாம். ஐரோப்பாவின் பல பகுதிகளிலிருந்தும் வெளியீடுகள் வந்தகாலத்திலிருந்த புவியியல் சமூகவியல் ரீதியாக பரவிய பன்முகத் தன்மையை புலம்பெயர்ந்த தமிழ் இலக்கியம் இழந்து வருகிறது போல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுகிறது. அடுத்ததாக இந்தப் பன்முகப் போக்குகளுக்குச் செழுமையையும் குறிப்பிட்ட அடையாளங்களையும் கொடுத்த அரசியல் தத்துவார்த்த புலங்களும் இப்போது குறுகிவிட்டதெனலாம்.

மறுபுறம் இப்போது இயங்கிவரும் சஞ்சிகைகள் பலும்பெயர்ந்த தமிழரின் இரண்டாம் சந்ததியினரின் பிரச்சினைகளைப் பற்றி ஆழப்பார்க்கும் போக்கினைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. 1980களில் புலம்பெயர்ந்தவர் மத்தியில் இப்போது இரு சந்ததிகளுக்கிடையில் உறவுகள் ஒரு முக்கிய அம்சமாகிவிட்டன. இந்த உறவுகளின் அன்றாட நடைமுறைகளில் வெளிப்பாடுகளில் முரண்பாடுகள் பல. குடும்பங்களுக்குள்ளே சந்ததிகளுக்கிடையிலான முரண்பாடு கலாச்சாரங்களுக்கிடையிலான முரண்பாடாகி பல விதமான உளவியல் தாக்கங்களைப் பிள்ளைகளின் மீதும் பெற்றோர் மீதும் ஏற்படுத்தி வருகிறது. இது பற்றி வெளிப்படையாகப் பேசும் நிலையில் பலர் இல்லை. ஒரு சில சிறுகதைகளில் நாவல்களில் இந்தப் பிரச்சினையின் சில பரிமாணங்கள் பிரதிபலிக்கப்பட்டுள்ளன. அது போதுமா? இலக்கிய சந்திப்புக்கள் இத்தகைய பிரச்சினைகளுக்கு எத்தகைய தொடர்ச்சியான முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளன?

சமூக, கலாச்சார உளவியல் பிரச்சினைகளால் அவதிப்படும் பல பெற்றோர் மத்தியில் அதாவது கடவுளிடம் விமோசனம் தேடுகிறார்கள். இந்தப் போக்கின் விளைவுகள் என்ன? பெற்றோரின் அதீத மத நம்பிக்கை பிள்ளைகளின் சமூகப் பிரச்சினைகளை தனிமனித ஆளமையை எப்படிப் பாதிக்கின்றன? இத்தகைய கேள்விகள் சமூக ஆய்வுக்கான கேள்விகள் தான். அதே வேளை இவை புலம்பெயர்ந்த தமிழரின் வாழ்நிலையிலிருந்து பிறக்கின்றன என்பதால் ஆக்க இலக்கியத்திலும் இவற்றின் பிரதிபலிப்புக்களை நாம் தேடவேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழ் இலக்கியத்தின் பாரிய எழுச்சிக்காலம் போய்விட்டது. அது வெளிநாட்டிற்கு இடம்பெயர்ந்த ஒரு சந்ததியின் முதலாவது பத்துவருடங்களின் ஏக்கங்களின், தேடல்களின் ஆக்கத்திறன்களின் வெளிப்பாடு எனலாம். அதை நாம் ஒரு பொற்காலமெனக்கருதத்தேவையில்லை. அதன் அரசியல் சமூக சந்தர்ப்பத்தின் தன்மைகளை மறந்துவிடலாகாது. இப்போது அந்த காலக்கட்டம் இன்னொன்றிற்கு வழிவிட்டுள்ளது. இன்றைய காலக்கட்டத்தின் புலம்பெயர்ந்த தமிழ் இலக்கிய மரபு பரிமாணங்களைத் தேடவேண்டும். இந்தப் பரிமாணங்களின் சில அம்சங்கள் மேலே தொட்டுள்ளேன். நமது ஆக்கத்திறனையும் விமர்சனத்தையும் மேலும் ஆழமாக நமது சமூகத்தின் முன்னே பாய்ச்சவேண்டும். நமது சமூகத்திற்குள்யேிருக்கும் சமூகப்போக்குகளை பிரிவாக்கங்களை நன்கு கிரகிக்க வேண்டும். சஞ்சிகைகளின், நூல்களின் வெளியீட்டு வைபவங்கள் அரங்கேற்றங்களாக அமையாது நமது சமூகத்தினை கலாச்சார ரீதியில் மறுமலாச்சிபெற உதவும் கற்கலாக அமைய வேண்டும்.

இந்தப்பார்வையில் "பறை" எனும் புதிய சஞ்சிகையை நாம் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்யும் போது, அது ஒரு சமூகத் தேவையை பூர்த்தி செய்ய முன்னிற்கும் வெளியீடு என்ற முடிவிற்கு வரவேண்டும். இதுவே பறையிடம் இருந்து நாம் எதிர்பார்ப்பது. நோர்வேயில் நீண்டகாலமாக ஒரு தரமான சஞ்சிகை இல்லை. அந்த வெற்றிடத்தை "பறை" நிரப்பும் என எதிர்பார்க்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இரவல் சுவாசம் எங்களுக்குத் தேவையில்லை

காற்றைக்கிழித்து வானம் எட்டும் பாடல்வரியோ. .
சிட்டுக்குருவியின் இறகைக் கொண்டு புவியைச் சுற்றுதே
வாழும் வாழ்க்கை எங்களுக்குச் சொந்தம் சொந்தமே . .
இரவல் சுவாசம் எங்களுக்குத் தேவையில்லையே.
உயிரை உயிர்க்கும் வேள்வியொன்றை இன்று செய்குவோம் . .
விதியே வெல்லும் என்ற சொல்லைத் தூர வீசுவோம்
கதவும் திறந்து கைககள் நீட்டி வாழ்வை நேசிப்போம்
காற்றைக்கிழித்து வானம் எட்டும் பாடல்வரியோ . .
சிட்டுக்குருவியின் சிறகைக்கொண்டுப் புவியைச் சுற்றுதே
வாழும் வாழ்க்கை எங்களுக்குச் சொந்தம் சொந்தமே . . .
இரவல் சுவாசம் எங்களுக்குத் தேவையில்லை.

இசை

பூட்டி பாட்டி காத்த முறைகள் பரணில் துயிலுதே
தூசித்தட்டி பேணும் மரபு அற்பமானதே
காலில் இடறும் கற்கள் யாவும் துச்சமானதே
வாழ்வின் அர்த்தம் புரியும்வேளை மீள ஜனிப்போம்.
நிஜத்தின் முத்தம் கன்னம் தொட்டு உயிரைத் தரிசிக்கும்
காற்றைக் கிழித்து வானம் எட்டும் பாடல்வரியோ . .
சிட்டுக்குருவியின் இறகைக் கொண்டுப் புவியைச் சுற்றுதே
வாழும் வாழ்க்கை எங்களுக்குச் சொந்தம் சொந்தமே
இரவல் சுவாசம் எங்களுக்குத் தேவையில்லை

இசை

விலக்கப்பட்ட கனிகள் யாவும் எட்டிப் பறிப்போம்
சபிக்கப்பட்ட கற்கள் என்று ஒன்றுமில்லையே
கரியும் புகையும் எரித்த மூச்சை மீட்டுக் கொள்வோம்
வியர்வைத்துளியை மதிக்கச் செய்து இருப்பை வெல்லுவோம்
கனவாய்த் தோன்றிய காலம் கையில் நடனமாடுமே
நானும் நீயும், நீயும் நானும் வேறு இல்லையே. .
தீயை எரிக்கும் வலிமை கொண்டோம் புன்னகை சொந்தம்.
காற்றைக்கிழித்து வானம் எட்டும் பாடல்வரியோ . . .
சிட்டுக்குருவியின் இறகைக் கொண்டுப் புவியைச் சுற்றுதே
வாழும் வாழ்க்கை எங்களுக்குச் சொந்தம் சொந்தமே . .
இரவல் சுவாசம் எங்களுக்குத் தேவையில்லையே.

பாடல்- உமா (ஜேர்மன்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாலியல் தொழிலும் ஆண்களின் புணைவு மரபும்!

ராஜினி



**பாலியல்** தொழில் பெண்ணுடலை மையப்படுத்தி உருவானதாகும். எந்தக் காலகட்டத்தில் எவ்வாறான சமூகமுறைமையில் உருவானது என்பது பற்றி எங்கல்ஸ் உட்பட இன்றைய பெண்ணிய மற்றும் சமூகவியல் அறிஞர்கள் பலரும் தத்தம் ஆய்வுகளின் வழியில் கருத்து முன்வைத்துள்ளனர். இவர்கள் அனைவரும் வந்தடைந்துள்ள பொதுவான முடிவு, பெண்ணை ஆண் அடிமை படுத்தத் தொடங்கியதுடன், பெண்ணின் பாலியல் நடவடிக்கைகளின் மீதான ஆணாதிக்க சமூகத்தின் வரையறைகள் ஏற்படுத்தப்பட்டதுடனும், ஆணின் பாலியல் நலனை முதன்மைப்படுத்தத் தொடங்கியதனதும் விளைவாகத்தான் சமூகத்தில் பெண்களின் ஒரு சாரார் தமது பாலியல் ஆற்றலை விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பதாகும்.

ஈழத்தமிழர் சமூகத்தில் தமிழகத்தில் போன்று தேவதாசி முறைமை நிலவவில்லை என்பது ஈழத்து சமூகவியலாளர் மற்றும் செல்வி திருச்சந்திரன் போன்ற பெண்ணிய ஆய்வளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், சாதிய அதிகாரத்தின் துணைகொண்டு ஆதிக்க சாதிய ஆண்கள் அடக்கப்பட்ட சாதிய பெண்களை பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்குவது நடைபெற்றது. இங்கு பணத்திற்குப் பதில் குடியிருக்க துண்டுக் காணி, கொட்டில், உணவு பொருள் போன்றன வழங்கப்பட்டன. அத்துடன் இந்த முறைமை ஒரு ஆண் பல பெண்களிலிருந்து தெரிவு செய்வது என்பது போல் அல்லாமல் தனது குடும்ப அதிகாரத்திற்கு உட்பட்ட அடிமைச்சாதிய குடும்பங்களது பெண்களுடனானதாக இருந்தது. இப்படியாக, அடக்கப்பட்ட சாதிய பெண்களின் உடல் உழைப்பும், பாலியல் ஆற்றலும் ஆதிக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாதிய ஆண்களினால் சுரண்டப்படுவது நடைபெற்றது.

சாதியப் போராட்டங்களின் வளர்ச்சிப் போக்கு காரணமாக இந்த அநாகரிக முறைமை மாற்றமுறத் தொடங்கியது. ஆனால் தற்போது புதிய சூழலில் பாலியல் தொழில் நமது சமூகத்தில் உருவாகியுள்ளது. நம்மீது திணிக்கப்பட்டுள்ள யுத்தத்தின் விளைவுகள் சமூகத்தின் பல்வேறு சாதிய, வர்க்கத் தட்டுகளை சார்ந்த பெண்களையும் பாலியல் தொழிலில் ஈடுபடும் நிலைக்குத் தள்ளியுள்ளது. -பாலியல் தொழில் என்பது சுயவிருப்புடன் கூடிய சுதந்திரமான தொழில் தெரிவு- எனும் வரையறைக்குள் அடங்குவதில்லை. சூழ்நிலைமைகளின் திணிப்பாகத்தான் அது உள்ளது.

அடிப்படையில், தமதும் தம்மை சார்ந்திருப்போரதும் அடிப்படை உயிர்வாழ்வுக்கான தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காகத்தான் நமது சகோதரிகள் தமது பாலியல் ஆற்றலை விற்க முன்வருகின்றனர். மாறாக, பெண்களின் நிலையில் இது ஒன்றும் மகிழ்ச்சிக்குரிய விவகாரமல்ல. பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களிடம் கதைத்தால் அவர்களிடமிருந்து வெளிப்படும் உணர்வு இந்த உலகையே எரித்து சாம்பராக்கி விடுமளவுக்கு ஆக்ரோக்ஷமானதாகும்.

மறுபுறம், ஆண்களின் பார்வையில் பாலியல் தொழில் என்பது வேறுவிதமானதாக உள்ளது.

"பெண் உடல் என்பது ஆணின் பாலியல் இன்பத்திற்கான பண்டம்" எனும் நிலையிலிருந்தே பாலியல் தொழில் ஆணால் அணுகப்படுகிறது. இது பற்றி ஒரு சம்பவத்தை உதாரணத்திற்கு எடுக்க முடியும்.

கடந்த வருடம் கேரளாவில் "அகில இந்திய செக்ஸ் தொழிலாளர் மாநாடு" நடைபெற்றது. இந்த செக்ஸ் தொழிலாளர்க அனைவரும் பெண்கள் ஆவார்கள் இவர்களது மாநட்டுக்கு தலைமை தாங்கியவர் ஒரு ஆண். அவர் என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்:

செக்ஸ் மனித வாழ்வுக்கு அவசிய பலருக்கு அது ஒழுங்காக கிடைப்பதில்லை ஆண்கள் பலரும் இதனால் ம அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர். செக் தொழிலாளிகள் ஆண்களின் பாலிய தேவைகளையும், மன அழுத்தங்களையு தணிக்கின்றனர். அவ்வகையில் இப் பெண்கள் சமூகத்திற்கு பெரு சேவையாற்றுகிறார்கள் என்பதா அமைந்திருந்தது.

பெண்கள் பாலியல் தொழிலி செய்வது ஆணின் பாலியல் தேவைகளை தனிப்பதற்காகத்தான் என்பதும், இத்தொழி சமூகத்திற்கு அவசியமானது என்பது ஆணாதிக்க சமூகக் கண்ணோட்டத்தி லிருந்து ஏற்கப்பட்ட ஒன்றாகும்.

மறுபுறம், இதே சமூகக் கண்ணோட்ட பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களை சமூகத்திலிருந்து ஒதுக்கிவைத்திருப்ப பற்றி நாமொன்றும் புதிதாகக் கதைக்க தேவையில்லை.

பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண் களின் நிலையிலிருந்து பார்ப்போமாயின்

- தொழில் புரியும் காலத்தில் பாலிய நோய்களினால் துன்புறுகின்றனர்.
- பேசப்பட்ட பேரத்தொகையை சம்பந் தப்பட்ட ஆண்கள் தராது போவதினா ஏற்படும் மன அழுத்தம் மற்றும் அ பற்றி முறையிட்டு நியாயம் பெ வழியில்லாத நிலை.
- தமது உடலை அனுபவிக்கும் ஆண்க ளின் அத்துமீறிய துன்புறுத்தல்கள் வன்முறைகளை சகிக்க வேண்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிர்ப்பந்த நிலை.

இதைவிட சமூக, சட்ட துன்புறுத்தல்கள்.

விடுதிகளில் அடைக்கப்பட்டிருக்கும் பெண்கள் தமது உடல் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையிலும் தொழிலில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இதனை சகித்துக்கொள்ள அநேகமாக போதைவஸ்துகளை பாவித்து தம்மை அரைமயக்கத்தில் வைத்திருத்தல்.



எனக் காண்கிறது.

- பாலியல் தொழிலை விபச்சாரம், வேசைத்தனம் என ஆணாதிக்க சமூகம் இழிவுபடுத்துவதை பெண்ணிய சிந்தனை எதிர்க்கிறது. அவ்வகையில் பெண் தனது பாலியல் ஆற்றலை விற்கும் செயலை, சமூகத்தில் ஏனைய தொழில்களுக்கு எவ்விதத்திலும் மதிப்புக் குறையாத ஒரு தொழிலாக, பெண் தனது உடலை மூலதனமாகக் கொண்டு மேற்கொள்ளும் தொழிலாக பார்க்கிறது.

- பாலியல் தொழில் செய்யும் பெண்களின் சமூக, சட்ட, பொருளாதார, சுகாதார உரிமைகளுக்காக பெண்ணிய இயக்கம் போராடுகிறது.

பாலியல் தொழிலில் ஈடுபட்டு குறுகிய காலத்திற்குள்ளேயே நோய்க்கும் முதுமை தோற்றத்திற்கும் உள்ளாகி சராசரியினரிலும்விட விரைவில் இறக்க நேர்கிறது.

இப்படியாக பெண்களின் உடலையும் னதையும் சிதைத்து அதன் மீது ஆணின் ாலியல் இன்பம் ஸ்தாபிக்கப்படுகிறது.

**பாலியல் தொழில் பற்றிய பெண்ணிய ிலைப்பாடு என்ன?** இந்நிலைப்பாடானது, ரேபடித்தானதாக இல்லாது, பாலியல் தாழில் செய்யும் பெண்களின் லையிலிருந்து பல்வேறு கோணங்களில் அணுகப்படுகிறது.

பெண்ணிய சிந்தனையானது, பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவது பொருளாதார தேவைகளின் பாற்பட்டு என்பதால்,இத்தகைய தொழிலில் பெண்கள் ஈடுபடுவதற்கான சமூக பொருளாதார காரணங்கள் நிலவும் வரையில் பெண்கள் இத்தொழிலில் ஈடுபடுவது நிலவிடும்

**பாலியல் தொழிலை ஒரு தொழில் எனும் வகையில் வளர்த்தெடுக்க வேண்டும் எனும் கருத்தாக்கம் பெண்ணிய சிந்தனையில் கிடையாது. பெண்களின் சமூக ஆளுமைக்கு எப்பொழுதும் அச்சுறுத்தலாக இருக்கும் இத்தொழிலை நீண்டகாலத்தில் பெண்கள் தாமாக கைவிடுவதற்கான சூழலை உருவாக்க வேண்டும் என்பதே பெண்ணிய சிந்தனையாகும்.**

மேற்படி பெண்களின் நலனில் நின்று உருவான சிந்தனையை ஆணாதிக்க உலகம் எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறது?

- பெண்ணிய இயக்கம், பெண்கள் தமது உடலை மூலதனமாக்கி மேற்கொள்ளும் தொழிலை ஒரு தொழிலாக அழுத்துவதன் காரணம் இத்தொழிலில் ஈடுபடும் பெண்களின் உரிமைகள் எனும் நிலையிலிருந்தாகும்.
- ஆணாதிக்க சமூக அதிகார கட்டமைப்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புகள் இத்தொழிலை ஊக்கப்படுத்துவதன் காரணம் ஆண்களின் பாலியல் நலன் எனும் அடிப்படையிலிருந்தாகும்.

இப்படியாக இரு தரப்பு சிந்தனைகளும் ஒன்றுபோல் மருவித் தோன்றினாலும் அடிப்படையில் இருதரப்பு சிந்தனைகளும் ஒன்றுக்கொன்று முரணானவையாகும்.

பெண்கள் தமது பாலியல் ஆற்றலை விற்க உரிமையுடையவர்கள் என பெண்ணிய இயக்கம் அழுத்துவது பெண்களின் உரிமை என்பதிலிருந்தாகும். ஆனால் ஆணாதிக்க உலகு இதை தமக்கு சாதகமானதாக மாற்றிக்கொள்கிறது.

ஆணாதிக்க அரசுகள் பாலியல் தொழிலை ஊக்கப்படுத்துவதன் மூலம் அந்நிய செலவாணியை திரட்டுகின்றன. ஐந்து நட்சத்திர ஹோட்டலகள், உடரடிஇ உயளைெ ....என பாலியல் தொழிலுக்கு அனுமதிபெற்ற இடங்களில் உடமையாளர்கள் பெண்களின் உடலை விற்கச்செய்து மூலதனம் திரட்டுகின்றனர்.

மறுபுறம் பாலியல் தொழில்சார் சட்டங்களில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில், பெண்கள் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்படுகின்றனர்.

இப்படியாக பாலியல் தொழிலானது இருவேறு தரப்பினரின் இருவேறு நலன்பாட்பட்ட விடயமாக உள்ளது.

மிக வளர்ச்சி பெற்ற ஐரோப்பிய நாடுகளில் செல்வச் செழிப்பில் வாழும் பெண்கள் இத்தகையத் தெரிவுகளைக் கொண்டுள்ளனர் என்பது உண்மையே. இவ்வாறான தெரிவுகளுக்கு பெண்களில் சிலர் செல்வதற்குக் காரணம் வெறும் பாலியல் தேவை மாத்திரமா? அதைவிட ஆணாதிக்க உலகில் ஆண்களுடனான அதிகாரப் போட்டியில் தம்மை அதிகாரமுடையவர்களாக ஆக்க

ஆண்களைப் போல் பெண்களும் வாழ்வ அவசியம் எனும் நிலைக்கு சில பெண்க வருகின்றனர். ஆண்களைப் போ உடையணிதல், தலைமயிர் வெட்டுத புகைபிடித்தல், போதை ஏற மதுவருந்துத என ஆண் உலகிற்குள் பெண்க பிரவேசிக்க முயல்கின்றனர். இவ்வழியி தமது பாலியல் தேவைகளுக்கு ஆணி பாலியல் ஆற்றலை விலைபேசுவதான தம்மை அதிகாரமுடையவர்களாக்குகிற என கருதுகின்றனர்.

அத்துடன் இவ்வாறு ஆண்களில் மிச சிலர் செய்யும் பாலியல் தொழி பெண்கள் செய்யும் பாலியல் தொழிலுட எவ்விதத்திலும் சமப்படுத்திவிட முடியா இரண்டும் பண்பளவில் பெரிது மாறுபட்டவை.

ஆண்கள் தமது ஆணாதிக் சட்டகத்திற்குட்பட்ட பாலியல் நலன்கை தற்காத்துக்கொள்வதற்காக, தாம் பெரிது தாராளமனதுடனும், சமத்துவமானது ஜனநாயகமானதுமான வழியில் சிந்தை செய்வது போல் பிரஸ்தாபிக்கின்றனர்.

தாம் எத்தகைய பாலியல் வாழ்க வாழ்வது என்பதை தீர்மானிப்ப பெண்களல்லவா, ஆண்கள் யார் இதி கைவைப்பதற்கு?

சீனப் புரட்சி வெற்றிபெற்ற கட்டத்தி செஞ்சேனையின் ஆண்களைப் பார்த் மாவோ கூறினார், சீனாவில் லட்சக்க ணக்கான பெண்கள் பாலிய தொழிலாளர்களாகவும், எதிரிகளினா வன்புணர்ச்சிக்கு உள்ளானவர்களாகவு இருக்கிறார்கள். அவர்களை செஞ்சே ஆண்கள் திருமணம் செய்து கொள் முன்வரவேண்டுமென வேண்டுகோ விடுத்தார்.

இது சீன கம்யுனிஸ்ட் கட் தலைமையின் புரட்சிகர நிலைப்பாடு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



அமெரிக்காவால் ஜப்பானில் உள்ள ஹிரோசிமா நாகசாக்கியில் 1945இல் போடப்பட்ட அணுகுண்டின் விளைவாக பல லட்சக்கணக்கான மக்கள் ஒரே நேரத்தில் கொல்லப்பட்டனர். அதன் நினைவாக நாகசாக்கியில் அமைக்கப்பட்ட நினைவுப் பூங்காவில் நிறுவப்பட்டுள்ள சிலைகளில் ஒன்று இது.

ISSN 1502-8771

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்